# அறிவுக்கும் அப்பால்



ச.நாகராஜன்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அறிவுக்கும் அப்பால் |
| ஆசிரியர் | : | ச.நாகராஜன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0W |
| காலம் | : | அக்டோபர் 2012 |
| அட்டை வடிவமைப்பு | : | பாலாஜி |
| Wrapper Image Courtesy | : | Nattavut<br>freedigitalphotos.net |


**"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்"**

**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

**உபயோக நிபந்தனைகள்**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

## முன்னுரை

"மன ஏவ மனுஷ்யானாம்"

"மனதால் ஆக்கப்படுபவனே மனிதன்" – இது உபநிடத வாக்கு! மனதைப் பற்றி பகவான் கிருஷ்ணனும், பதஞ்சலி மாமுனிவரும், வசிஷ்ட மாமுனிவரும் இன்னும் ஏராளமான முனிவர்களும் விவரித்துள்ளனர். மனதைப் பற்றிய அரிய மர்மங்களை நமது இதிஹாஸங்களும், பதினெட்டு புராணங்களும், யோக நூல்களும் மிகத் துல்லியமாக அக்குவேறு ஆணி வேறாக விளக்குகின்றன.

அனுபவத்தால் உணரப்பட வேண்டிய ஆச்சரியமே மனதின் மாண்பு! இதை மேலை நாட்டு விஞ்ஞானிகள் பல்வேறு நவீன உபகரணங்களால் ஆராயத் தலைப்பட்டுள்ளனர். சோதனைச்சாலைக்கே உரித்தான ஏராளமான விதி நியமங்களின் படி சோதனைகளை நடத்தி அவற்றை மிகுந்த கவனத்துடனும், பொறுமையுடனும், கடின உழைப்புடனும் அயராது குறித்து, ஒப்பு நோக்கி முடிவுகளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

மனம், எண்ணம் பற்றிய ஆராய்ச்சிகள் ரஷியா, செக்கோஸ்லேவேகியா, பல்கேரியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற பல நாடுகளில் தொடர்ந்து நடந்து வருகின்றன!

இந்த நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்த, கண்டுபிடித்து வரும் முடிவுகள் ஆச்சரியப்பட வைப்பவை! பிரமிக்க வைப்பவை!

இவர்களில் பெரும் பாலானோர் ஹிந்து யோகிகளின் சக்திகளை அறிந்தவர்கள்: சந்தித்தவர்கள்: ஆராய்ந்தவர்கள்!

இதில் வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயம். எந்த நாடு எல்லா ரகசியங்களையும் தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறதோ அந்த நாட்டில் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகள் அதிகமாக நடத்தப்படவில்லை என்பதே! பாரத தேசத்தையே நான் குறிப்பிடுகிறேன் என்பதை வாசகர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

விளம்பரம் தேடாதவர்களாக ரிஷிகளும் முனிவர்களும் ஒருபுறம் இருந்தாலும் இன்றைய உலக இயலோடு ஒத்துப் போகும் வகையில் அறிவியல் பூர்வமாக மனதின் மர்மங்களையும் எண்ண சக்தியின் ஆற்றலையும், பிரக்ஞையின் விசித்திர மர்மங்களையும் இந்திய விஞ்ஞானிகள் ஆராய வேண்டும்.

நமக்கு இது சுலபம். ஏனெனில் வழிமுறைகளும், முடிவுகளும் நமது நூல்களிலேயே பொதிந்திருக்கின்றன. நவீன உபகரணங்களின் வழியே அவற்றை நாம் சரி பார்க்க வேண்டியது தான்! உலகிற்கு நம் தலைமை பீடத்தை உணர்த்த வேண்டியது தான்!!

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் ஷீலா ஆஷ்ட்ராண்டர் என்ற கனடிய பெண்மணியும் லின் ஷ்ரோடா என்ற அமெரிக்கப் பெண்மணியும் பல்வேறு இரும்புத்திரை நாடுகளுக்குச் சென்று அங்கு நடக்கும் பாராசைக்காலாஜி சோதனை விபரங்களை 'Psychic Research behind the Iron curtain' என்ற நூலில் எழுதி இருந்ததைப் படித்தேன்: பிரமித்தேன்!

பல ஆண்டுகளாக நம் புராண இதிஹாஸங்கள் மற்றும் யோக நூல்களில் உள்ள கருத்துகளையும் இவர்கள் குறிப்பிட்டிருந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவுகளையும் ஒப்பிட்டவாறே இருந்தேன்.

இந்த நிலையில் அலுவலக வேலை நிமித்தமாக அடிக்கடி பெங்களூருக்கு நான் செல்வதுண்டு. வேலை நேரம் போக மீதி நேரத்தில் கண்டிப்பாக புத்தகக் கடைகளுக்குச் செல்வது என் வழக்கம்.

அப்படி ஒரு நாள் சென்ற போது நடைபாதை (பழைய) புத்தகக் கடை ஒன்றில் அமெரிக்க விஞ்ஞானிகளான ரஸ்ஸல் டார்க் மற்றும கெய்த் ஹராரி எழுதிய 'The Mind Race' என்ற புத்தகைத்தை வாங்கினேன்.

இந்த இரு புத்தகங்களோடு இன்னும் ஏராளமான மேலை நாட்டு நூல்களும் கட்டுரைகளும் நம் யோகிகளின் மேன்மைகளை என்னை உணரவைத்து பரவசப்படுத்தின. இந்த உணர்ச்சியை நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்பட்ட போது 'ஜெம்மாலாஜியும் ஜோதிடமும்' மாத இதழின் ஆசிரியரும் எனது சகோதரருமான திரு வி.எஸ்.மீனாட்சிசுந்தர் இந்தத் தொடரை 'ஜெம்மாலாஜியும் ஜோதிடமும்' இதழிலேயே வெளியிடலாமே என்று யோசனை கூறினார். 'அறிவுக்கும் அப்பால்...' என்ற தலைப்பில் தொடர்ந்து இந்த கட்டுரைத் தொடர் வெளிவந்தது.

நூலை நன்கு புரிந்து கொள்ள ஒரு முறைக்கு மேல் படிக்க வேண்டிய தேவை இருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

காலம் பற்றிய அபூர்வ விஷயங்கள், பிரார்த்தனை பலிப்பதன் மர்மம், எண்ண சக்தி பலிப்பது ஆகிய இவற்றைப் பல முறை படிப்பது நல்லது.

வாசகர்கள் அறிவுக்கும் அப்பால் உள்ள விஷயங்ளைப் படித்து மேன்மையுற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இந்தத் தொடரை வெளியிட்ட திரு.வி.எஸ். மீனாட்சிசுந்தர் அவர்களுக்கும், இந்நூல் வெளிவரக் காரணமாக அமைந்த திரு.அண்ணல் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. வாசகர்கள் தங்கள் அபிப்ராயங்களையும் அனுபவங்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்ள அன்புடன் வேண்டுகிறேன் நன்றி.

சென்னை ச.நாகராஜன்

1-1-2003

ஈ-மெய்ல் முகவரி:- snagarajans@yahoo.com

## ஆசிரியர் பற்றி...

திரு ச. நாகராஜன் பாரம்பரியமிக்க தேசபக்த குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் திரு. வெ. சந்தானம் சுதந்தரப்போரிலே ஈடுபட்டு சிறை சென்றவர்: மணிக்கொடி பி. எஸ். ராமையாவுடன் இணைந்து தமிழ் பத்திரிகை உலகில் ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தியவர்.

தஞ்சை மாவட்டத்தில் கீவளூரில் 06-01-1947-ல் பிறந்த திரு. நாகராஜன் இது வரை சுமார் ஆயிரம் கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், கவிதைகள், மதிப்புரைகள் எழுதி உள்ளார். அறிவியல், விண்வெளி விஞ்ஞானம், ஜோதிடம், நட்சத்திரங்கள், வரலாறு, இலக்கியம், சுற்றுலா இடங்கள், புலன் கடந்த உணர்வு, கடல் வளம், மிருக இயல், இசை, மந்திரம், யந்திரம், சாதனையாளர்கள், ஹாலிவுட் சினிமா போன்ற பல பொருள்களிலும் கட்டுரை படைத்திருப்பது இவரது தனிச் சிறப்பு.

திருச்சி வானொலி நிலையம் வாயிலாக இவரது ரேடியோ நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. ரேடியோ உரைகளும் சென்னை, மதுரை வானொலி மூலம் ஒலிபரப்பாகியுள்ளன. தொலைக்காட்சியில் இவரது நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக ஜெயா டி.வி.யில் ஒளிபரப்பான பிரமிடு மற்றும் ஸ்படிகம் பற்றிய நிகழ்ச்சிகள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன.

சுயமுன்னேற்றம், படைப்பாற்றல் திறன், நிர்வாக இயல் பற்றிய புதிய உத்திகள் பற்றி இவர் சொற்பொழிவுகள் ஆற்றியும் பயிற்சி முகாம் நடத்தியும் வருகிறார். ஃபெங்சுயி வகுப்புகளோடு உள்முக ஆற்றலை வளர்க்கும் உள்முக ஃபெங்சுயி (Inner Fengsui) பயிற்சியும் நடத்தி வருகிறார்.

வாகன கட்டுமான பொறியியல் துறை நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேலாளராக மதுரையில் பணியாற்றிய இவர் தற்சமயம் மனைவி மற்றும் இரு மகன்களுடன் சென்னையில் வசித்து வருகிறார்.

இலங்கை, பெல்ஜியம், இங்கிலாந்து உட்பட பல வெளிநாடுகளுக்கும் சென்று பரந்த அனுபவம் பெற்றிருக்கிறார்.

இவரது படைப்புகள் தினமணி, தினமணி கதிர், தினபூமி, கோகுலம் கதிர், கலைமகள், மஞ்சரி, பாக்யா, ஹிந்து, ஜெம்மாலாஜியும் ஜோதிடமும், சரவணா ஸ்டோர்ஸ் (இதயம் பேசுகிறது) போன்ற பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளன.

இதுவரை வெளியான இவரது நூல்கள்:-

* வெற்றிக்கலை
* அறிவியலும் ஆன்மீகமும்
* நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
* அற்புத அவதாரம் ஶ்ரீ சத்ய சாயி பாபா
* ஆங்கிலம் அறிவோமா
* நவகிரகங்கள்
* விந்தை மனிதர்கள், விந்தைப் பெண்மணிகள்
* பறக்கும் தட்டுகளும் அயல்கிரக வாசிகளும்
* சிறுவர்களுக்கான புராணக்கதைகள்.

**பொருளடக்கம்**

| | |
|---|---|
| புதிய யுகம் | 5 |
| நாம் காணும் கனவுகள் | 8 |
| வருவதைக் காட்டும் கனவுகள் | 11 |
| கனவுப் படைப்பாளிகள் | 15 |
| ஒருவரே இரு இடங்களில் தோன்றுதல் | 20 |
| இரு இடங்களில் தோற்றம் | 24 |
| கிருஷ்ண விஜயம் | 29 |
| டெலிபதி | 33 |
| டெலிபதி – ஸ்டாலினின் சோதனைகள் | 37 |
| டெலிபதி நிபுணர் – மெஸ்ஸிங்கின் அதிசய வாழ்க்கை | 41 |
| உலகம் வியந்த மெஸ்ஸிங் | 45 |
| மென்டல் ரேடியோ | 48 |
| தூர திருஷ்டி | 51 |
| அமெரிக்க நிறுவன ஆராய்ச்சிகள் | 55 |
| தூர திருஷ்டி சோதனைகள் | 58 |
| தொலைதூரச் சோதனைகள் | 61 |
| விதி வெல்லுமா? | 65 |
| மதியால் வெல்லலாம்! | 69 |
| காலம் பற்றிய உண்மைகள் | 73 |
| விஞ்ஞான நகரில் விந்தை சோதனைகள்! | 77 |
| உணர்ச்சிகளையும் டெலிபதி போல அனுப்பலாம் | 80 |
| சுவை உணர்ச்சியை அனுப்பிய செக் விஞ்ஞானிகள் | 83 |
| மனதின் அதிசய ஆற்றல் | 84 |
| வாங்கா டிமிட்ரோவா | 87 |
| முடிவுரை | 91 |

## 1. புதிய யுகம்

நாம் வாழும் இந்த நூற்றாண்டை அறிவியல் நூற்றாண்டு என்று அழைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள். எதையும் ஆராய்ந்து காரண காரியத்துடன் 'எப்படி' நடக்கிறது என்பதை விளக்குகிறது அறிவியல். இப்படி விளக்க முடியாத எதையும் நம்ப முடியாது என்பது பகுத்தறிவுவாதிகளின் வாதம். ஆனால் அனைத்தையுமே அறிவுக்கு இசையும் வகையில், அறிவியலின் அடிப்படையில், விளக்கிவிட முடிகிறதா? முடியவில்லை! பேரண்டத்தில் சுற்றும் கிரகங்களையும், அதன் தட்ப வெப்ப நிலைகளையும், தூரத்தையும், பிரகாசத்தையும் துல்லியமாகத் தரும் அறிவியல் அவை 'ஏன்' அப்படி சுழல்கின்றன, ஏன் அவற்றின் தூரங்கள் அப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்பதை விளக்க முடியவில்லை!

'HOW' என்பதை விளக்கும் அறிவியல் 'WHY' என்பதை விளக்கத் திணறுகிறது! அறிவுக்கும் அப்பால் நடக்கும் விந்தைகள் ஆயிரம் ஆயிரம்! இவற்றை விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். கிடைக்கும் முடிவுகளைக் கண்டு ஆச்சரியத்தால் உறைந்தும் போகின்றனர். டி.வி. நிகழ்ச்சியில் தோன்றி தன் பார்வையாலேயே பார்த்துக் கொண்டிருந்தோர் வீட்டில் இருந்த கம்பிகளை வளைத்த யூரி கெல்லர்! துல்லியமாக இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைக் கூறிய ஜேன் டிக்ஸன். நூற்றுக்கணக்கான பறக்கும் தட்டுகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு விளக்கம் தர முடியாத அமெரிக்க ப்ராஜக்ட் 'ப்ளூ புக்', தன்னிடம் வருபவற்றை கபளீகரம் செய்யும் 'பெர்முடா ட்ரை ஆங்கிள்', எந்த விதத் தீயும் இல்லாமல் சுயமாக எரிந்து போன அதிசய மனிதர்கள்!

தொலை தூரத்தில் நடப்பதை சாதாரணமாகக் கூறும் ஆயிரக்கணக்கான அபூர்வ மனிதர்கள்! முந்திய ஜென்மத்தை விளக்கமாக்க் கூறி உலகையே வியக்க வைக்கும் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள்!

மூன்று வயதிலேயே கவிதை எழுதும் பிறவி மேதை! உயிருடன் குழியிலே வைக்கப்பட்டு பலநாட்கள் கழித்து வெளியிலே எடுக்கப்பட்ட போதும் உயிருடன் இருக்கும் அதிசய யோகி!

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்! அறிவியல் அடிப்படையில் ஆதாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட இவை போன்ற நிகழ்ச்சிகளுக்கு, விஞ்ஞானிகளால் விளக்கம் சொல்ல முடியவில்லை!

மனம் என்பது என்ன? அதற்கும் உடலுக்கும் மற்றும் உயிருக்கும் உள்ள தொடர்பு எத்தகையது?

மனதின் ஆற்றல் என்ன? இவையெல்லாம் அறிவியலுக்கு ஒரு சவாலாக உள்ளது! ஐன்ஸ்டீனின் 'ரிலேடிவிடி' தத்துவம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரும் 'காலமும் இடமும்' அறிவியலால் இன்னமும் சரிவர விளக்கப்பட முடியாத விஷயமாகவே இருந்து வருகிறது! இந்த நிலையில் 'பாரா சைக்காலஜி' என்னும் அதீத உளவியல் இருபத்தோராம் நூற்றாண்டில் நமது யோகிகளின் கூற்றை நிரூபிக்கப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன!

'உயிரையே ஒரு பாட்டிலில் அடைப்பேன்' என்று ஒரு விஞ்ஞானி சவால் விட, இன்னொருவரோ 'குளோனிங்' முறையில் குறைந்த பட்சம் 4000 பேரையாவது ஒரு வருடத்தில் உருவாக்கிவிடுவேன் என்கிறார்!

இந்த நவீன சூழ்நிலையில் அறிவியலுக்கும் அப்பால் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன! அறிவுக்கும் அப்பால் உள்ள விளங்காத மர்மங்களையும், புரியாத புதிர்களையும் வெளிச்சமிட்டுக்காட்டுவதே இந்த நூலின் நோக்கம்.

**பலிக்கும் கனவுகள்**

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது போர் விமானியாகப் பணியாற்றியவர் வில்பர்ரைட்.

யுத்தம் தொடங்க ஆறு மாதங்களுக்கு முன் 1945-ம் வருடம் மார்ச் மாதம் அவரது அருமை நண்பர் டக் வொர்லி ஒரு நாள் அதிகாலை அவரிடம் வந்தார்.

தனது உடமைகளை எல்லாம் ஒரு மூட்டையாக்க் கட்டி ரைட்டிடம் தந்தார். "எனது குடும்பத்தாரிடம் இதைத் தந்து விடு; எனது அடுத்த பயணத்திலிருந்து நான் திரும்ப மாட்டேன்" என்றார் அவர். தான் கண்ட கனவில் தனது முடிவைத் தெளிவாக கண்டு விட்டார் அவர். ஆனால் அதைப் பற்றிக் பயப்படவோ, கலக்கமடையவோ செய்யாது தைரியமாக இருந்தார்.

"முட்டாள்தனமாக உளறாதே" என்று நண்பரைக் கடிந்து கொண்டார் ரைட். இதே கருத்தைக் கூறிய ஸ்க்வாட்ரன் கமாண்டர், வொர்லியை அன்று பறக்க வேண்டாமென்றும் தரையிலேயே இருந்து விடுமாறும் ஆலோசனை கூறினார். வொர்லியோ மறுத்தார். என் முடிவு விமானத்தின் மூலம் இல்லை என்றால் தரையில் ட்ரக் டயர் ஏறுவதன் மூலம் ஏற்படலாமே என்றார் அவர்.

அன்று இரவு எட்டு போர் விமானங்கள் ஜெர்மன் விமான தளமான 'ஷ்வெரி'னைத் தாக்கி அழிக்கப் பறந்தன. டக் வொர்லியின் அருகிலேயே பறந்து சென்றார் ரைட். வொர்லி ஓட்டிய விமானத்தின் பெட்ரோல் டாங்க் வெடிக்க வொர்லி பற்றி எரியும் விமானத்துடன் தன் இலக்கை நோக்கி தானாகவே வீழ்வதையும் பார்த்தார். இந்த நிகழ்ச்சி ரைட்டை மிகவும் பாதித்தது.

நிஜமாகவே 'விதிப்படி' வொர்லி அன்று இறக்க வேண்டியவர் தானா?

அப்படியானால் உலகில் நடப்பது எல்லாம் முன் கூட்டியே நிர்ணயிக்கப்படுகின்றனவா? ஃப்ரி வில்? என்பதோ மதி என்பதோ இல்லையா?

இதே போன்று வேறு சில விமானிகளும் தங்கள் முடிவைச் சரியாகக் கணித்துக் கூறிய அதிசயத்தையும் அறிந்திருந்தார் ரைட்.

பல வருடங்களுக்குப் பின்னர் விமானத்தைச் சுட்டு வீழ்த்தும் பீரங்கியை இயக்கும் ஷ்வெரின் விமானதளத்தைச் சேர்ந்த ஷ்வாப் என்ற ஜெர்மானியரைச் சந்தித்தார் ரைட். பழைய நிகழ்ச்சியை நினைவு கூர்ந்த ஷ்வாப் அன்று ஜெர்மானியர், நேச நாட்டு விமானங்களின் தாக்குதலை எதிர்பார்த்திருந்ததாகவும், அதிகாலை நான்கு மணிக்கே எச்சரிக்கப்பட்டு விட்டதாகவும் கூறினார். அப்படியானால் டக் வொர்லியின் கனவு 'டெலிபதி' மூலம் வந்ததா?

**குதிரைப் பந்தய வெற்றிகள்**

உலகப் போர் முடிந்த பிறகு 1946, 1948, 1954 – ல் நடந்த மூன்று குதிரைப் பந்தயங்களில் யார் ஜெயிக்கப் போகிறார்கள் என்பதை கனவு மூலம் அறிந்தார் அவர். கனவில் நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியாக இருந்தன. வொர்லி ஒரு நாளும் சென்றிடாத இடம் ரேஸ் கோர்ஸ். கனவில் வொர்லி ரேஸ் கோர்ஸில் நிற்க, அங்கே யாரோ ஒருவர் அவர் அருகே நின்று கொண்டிருப்பார். ஒவ்வொரு கனவிலும் அந்த தோழரிடம் அவர் கேட்பார். 'எந்தக் குதிரை பந்தயத்தில் ஜெயித்தது?'

1946-ஆம் வருடம் அவர் கண்ட கனவில் ஜெயித்த குதிரை 'ஏர் போர்ன்'. வில்பர் ரைட் அப்படி ஒரு குதிரையே இல்லையே என்பார். "அது எப்படியோ, அது தான் ஜெயித்தது"

என்று பதில் வரும். கனவு கண்டதற்கு பின்னர் ‘ஏர் போர்ன்’ என்ற பெயருடைய குதிரை செயிண்ட் லீகரில் ஓடி ஜெயித்தது விசித்திரமான முறையில்! அதன் வெற்றியை யாருமே எதிர்பார்க்கவே இல்லை!

ரைட் தனது கனவைத் தன் நண்பர்களிடம் கூறிய போது, அவர்கள் இதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. தனக்குத் தெரியாத, குதிரைப் பந்தயத்தில் ஆர்வமே இல்லாத ரைட் கனவைப் பற்றியும், பந்தய முடிவைப் பற்றியும் வலியுறுத்திப் பேசவில்லை.

ஆனால் ஏர்போர்ன் ஜெயித்த போது ரைட்டின் நண்பர்களின் முகங்கள் (ஏர்போர்ன் மீது பணம் கட்டத் தவறி விட்டோமே என்று) ஏமாற்றத்தினால் சுருங்கி விட்டன.

இரண்டு வருடம் கழித்து தான் கண்ட கனவின் மூலம் டெர்பி பந்தயத்தில் ஜெயிக்கப் போகும் குதிரையின் பெயர் ‘ஆர்க்டிக் பிரின்ஸ்’ என்று நண்பர்களிடம் தெரிவித்தார். இந்த முறை நண்பர்கள் அனைவரும் ரைட் கூறிய ஆர்க்டிக் பிரின்ஸ் மீது பணம் கட்டினர். ரைட் வழக்கம் போல இதைப் பெரிது படுத்த வில்லை. ஆனால் முடிவு வந்தவுடன் ரைட்டின் நண்பர்கள் அனைவருக்கும் ஏராளமாகப் பணம் கிடைத்தது. உள்ளூர் ஜாக்கியோ ஓடி வந்தார். "உங்களுக்கு இப்படி ஒரு டிப் எப்படி கிடைத்தது" என்று ரைட்டைக் கேட்டார்.

அடுத்த கனவு 1954-ல் ரைட்டும் அவரது மனைவியும் ‘நெவார்க்’ என்னும் இடத்தில் திருமதி.சீஸ்ரைட் என்பவருடன் தங்கி இருந்தபோது வந்தது! இந்த முறை வந்த கனவில் ஒரு சிறு மாறுதல் நிகழ்ந்தது. கனவு நண்பருடன் ரைட் நின்று கொண்டிருந்த போது ரைட் தான் கனவு காண்பதை உணர்ந்தார்.

"நீயா? மறுபடியுமா?" என்றார் ரைட். மறுபடியும் பழைய கேள்வி பதில். "எந்தக் குதிரை ஜெயிக்கப் போகிறது?" "ராடார்" "அப்படி ஒரு குதிரையே இல்லை?" "அது எப்படியோ, அது தான் ஜெயிக்கப் போகிறது." ரைட் விழித்து எழுந்தார். கனவு நண்பரின் முகம் கோபக்குறி காட்டியதையும், தான் தனது கடமையைச் செய்வதாயும், தன்னை இழிவுபடுத்த வேண்டாமென்று கூறியதையும் ரைட்டால் மறக்க முடியவில்லை.

‘ராடார்’ என்ற பெயரில் ‘கேம்பிரிட்ஜ்ஷைரில்’ அன்று எந்தக் குதிரையும் ஓடப் போவதில்லை என்பதையும், நாகர் என்ற பெயரில் ஒரு குதிரை ஓடவிருப்பதையும் அறிந்தார் ரைட்.

திருமதி.சீஸ்ரைட் ஒரு குதிரைப் பந்தய பைத்தியம். அவர் தனது புக்கியைக் கூப்பிட்டு நாகர் மீது பெட் கட்டி ஜெயித்தார்!

இதற்குப் பிறகு ரைட் கனவு காணவே இல்லை. "மறுபடியுமா நீ" என்ற ரைட்டின் சொற்கள் கனவு நண்பரை மிகவும் பாதித்து விட்டது போலும்!

நெடு நாள் வரை ரைட்டுக்குப் புரியாத விஷயம், "ரேஸ் பற்றியே தெரியாத தனக்கு கனவு நண்பர் ஏன் டிப் தர வேண்டும்" என்பது தான்!

இப்படி கனவுகள் பலித்த நிகழ்ச்சிகள் ஏராளம்! அறிவியல் இவற்றிற்கு சரியாக விளக்கம் தர முடியவில்லை. அறிவுக்கும் அப்பால் உள்ள பல விஷயங்களில் "பலிக்கும் கனவுகளும்" ஒன்று.

## 2. நாம் காணும் கனவுகள்

நாம் எல்லோருமே கனவு காண்கிறோம். சிலர், நான் கனவே காண்பதில்லை என்று சொல்கின்றனர். உண்மையில் அவர்களும் கனவு காண்கின்றனர். ஆனால் என்ன கனவு கண்டோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள முடியாதவர்கள் அவர்கள். காலையில் எழுந்தவுடன் ஒன்றுமே ஞாபகத்தில் இல்லையென்றால் கனவு கண்டதாகக் கூற முடியாதல்லவா?

ஆராய்ச்சியாளர்கள், ஒருவர் எப்போது கனவு காண்கிறார் என்பதை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துவிட்டனர்! இமைகளுக்கு அடியே கண்கள் இங்கும் அங்குமாக எவ்வளவு முறை இயங்குகின்றன என்பதை கண் இமைப்பின் மூலமாக துல்லியமாக அறிந்து, இப்படிப்பட்ட நேரங்களில் ஒருவர் கனவு காண்கிறார் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கூறிவிட முடியும்! இதற்கு 'துரித கண் இயக்கம்' (Rapid eye movement) என அறிவியல் பெயர் சூட்டி இருக்கிறது! தூங்குபவர் ஒருவரை உற்றுக் கவனிப்பதன் மூலம் நாமே கூட இதை அறியலாம்!

காலம் காலமாகக் கனவுகளின் முக்கியத்துவத்தை புராணங்களும், இதிஹாசங்களும் விளக்கி உள்ளன. சிலருடைய கனவுகள் 'கடவுளிடமிருந்து வரும் செய்திகளாகக்' கருதப்பட்டன.

சிலரது கனவுகள் கனவு காண்போரின் ஆழ்மனதின் செய்திகளாகக் கருதப்பட்டன. இவைகள் பலிக்கும் போது வியப்பு எழுகிறது.

### கென்னடி கொலை

சென்ற நூற்றாண்டின் கோரமான கொலை என்று கருதப்படும் ஜான்கென்னடியின் கொலையை முன்னதாகவே கனவில் கண்டு விட்டார் ஜேன் டிக்ஸன்!

கென்னடி கொலை செய்யப்படுவதற்கு முன்பே அவர் வெளியிட்ட விவரங்கள், கொலை நடந்தபின் ஒப்பிடப்பட்ட போது உலகமே அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் அடைந்தது.

கென்னடி குடும்பத்திலேயே இன்னொரு கோரமான கொலை ஒன்றும் நடந்தது. ராபர்ட் கென்னடியும் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையையும் இன்னொருவர் முன்பே கண்டு விட்டார். ஆலன் வாகன் என்னும் அமெரிக்கர் தான் காணும் கனவுகளை டயரியில் எழுதி வைக்கும் பழக்கம் உள்ளவர். அவர் தனது 'கனவு டயரியில்' ராபர்ட் கென்னடியின் கொலையைத் தான் கனவில் கண்டதை விவரமாகக் குறித்து வைத்திருந்தார். இது சரிபார்க்கப்பட்ட போது இடைச் செருகலாகப் பின்னால் எழுதப்படவில்லை; உண்மையிலேயே கனவு கண்ட அன்றே எழுதப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்களால் முடிவு செய்யப்பட்டது. கனவின் படி கொலையாளி துப்பாக்கியால் சுட்ட இடம் ஹோட்டல் ஒன்றின் முற்றத்தில்! அந்த ஹோட்டலின் ஒரு அறையில் இளைஞர்கள் குழுமி இருந்தனர். பின்னால், இது போலவே நடந்தது என்றாலும் கனவிற்கும், நிஜமாக நடந்த கொலைக்கும் சில சிறிய வேறுபாடுகளும் இருக்கவே செய்தன.

கனவின்படி, கொலையாளி மேற்கூரையில் ஒளிந்திருந்து ஒரே ஒரு துப்பாக்கிக் குண்டைச் செலுத்தி ராபர்ட்டைக் கொலை செய்கிறான். ஆனால் நிஜத்தில் சிர்ஹன் (கொலையாளி) ராபர்ட் கென்னடியின் முன்னால் இருந்தே முற்றத்தில் சுடுகிறான்.

ராபர்ட் கென்னடியின் தலையில் சில அங்குல தூரத்திலிருந்தே ஒரே ஒரு குண்டு பாய்ந்து துளைத்தது. ஆலன் வாகன் தனது கனவு 'நிஜத்தை விட நிஜமோ' என்று கேட்கிறார். போலீஸ் அறிக்கை மற்றும் வீடியோ கேஸட்டை விடத் தன் கனவு மிகத் துல்லியமாக உள்ளது என்கிறார் ஆலன் வாகன்.

மற்ற 'அதீத கனவுகளை' ஒப்புக் கொள்ளாத பிடிவாதமான விஞ்ஞானிகள் கூட ஆலன் வாகனின் கனவைப் பார்த்து பிரமித்து விட்டனர்.

**மார்க்ட்வெய்னின் கனவு**

23 வயதே ஆன இளைஞர் சாமுவேல் க்ளிமென்ஸ் ஒரு கனவு கண்டார். சாமுவேல் க்ளிமென்ஸா, யார் அது? என்று கேட்பவர்கள் உலகின் பிரபல நகைச்சுவை எழுத்தாளரான மார்க்ட்வெய்னே அப்படி தனது பெயரைப் பின்னால் மாற்றிக் கொண்டார் என்பதை அறியும் போது ஆச்சரியப்படுவீர்கள்.

தனது சுய சரிதையில் தான் கண்ட கனவு நனவானதை விவரமாக எழுதி உள்ளார், அந்த பிரபல நாவலாசிரியர்.

மிஸிஸிபி நதி படகுகளில் அவரும் அவர் சகோதரர் ஹென்றியும் வேலை பார்த்து வாழ்ந்து கொண்டிருந்த சமயம் அது. ஒரு நாள் சாமுவேல் தனது கனவில் சகோதரர் ஹென்றியின் உடலைத் தாங்கிய உலோகத்தாலான சவப்பெட்டி வீட்டின் நடுக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். சவப்பெட்டியை இரு நாற்காலிகள் தாங்கி இருந்தன. வெள்ளை நிற மலர்களாலான மலர்க்கொத்தையும் அதன் நடுவே சிவப்பு நிற மலர் ஒன்றும் சொருகப்பட்டு அவை உடலின் மார்பில் வைக்கப்பட்டு இருந்தது. விழித்து எழுந்த சாமுவேல் மிகவும் துயரமடைந்து தனது சகோதரியிடம் ஹென்றி நிச்சயமாக இறந்து விட்டான் என்று கூறினார்.

ஆனால் ஹென்றி உயிருடனேயே இருந்தார். ஆனால் சில வாரங்கள் கழித்து படகில் இருந்த பாய்லர் வெடிக்கவே ஹென்றி உட்படப் பலரும் அந்த விபத்தில் மாண்டனர். மெம்பிஸ் நகரப் பெண்மணிகள் இரக்கப்பட்டு சிதறிக் கிடந்த உடல் பகுதிகளை ஒன்று திரட்டி ஒரு விலை மதிப்புடைய உலோகத்தாலான சவப்பெட்டியில் அவற்றை வைத்தனர்.

விலை குறைவான மரத்தாலான சவப்பெட்டியை அவர்கள் ஏனோ வாங்கவில்லை.

சாமுவேல் தன் கனவில் கண்டபடியே சவப்பெட்டி இரு நாற்காலிகளுக்கிடையே இருந்ததைப் பார்த்தார். ஆனால் சவப்பெட்டி தனது சொந்த வீட்டின் கூடத்தில் இல்லாமல் வேறொரு வீட்டுக் கூடத்தில் இருந்தது. இன்னொரு வித்தியாசம் – வெள்ளை மலர்க்கொத்தும் சிவப்பு வண்ண மலரும் சவத்தின் மார்பில் இல்லை! அப்போது அங்கு வந்த பெண்மணி ஒருவர் ஒரு வெள்ளை நிற மலர்க்கொத்தையும் அதில் சொருகப்பட்ட சிவப்பு வண்ண மலரோடு சவத்தின் மார்பில் வைத்தார்! சாமுவேல் தான் கண்ட கனவு 'காட்சி' அப்படியே நனவானதைக் கண்டு பிரமித்தார்.

**லிங்கனின் கனவு**

பலிக்கும் கனவு வரிசையில் உலகப் பிரசித்தி பெற்ற கனவு ஆப்ரஹாம் லிங்கனுடையது. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து உலகப் புகழ் பெற்ற லிங்கன் 1865 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தான் கண்ட கனவு ஒன்றை மிக்க விவரமாகத் தனது நண்பர்கள் வட்டத்தில் கூறினார். அவர் கூறிய கனவு இதுதான்:

வெள்ளை மாளிகையில் தான் படுக்கையில் படுத்திருந்த போது அழும் ஓலக்குரல் கேட்கவே படுக்கையை விட்டு எழுந்து சத்தம் வந்த திக்கை நோக்கி நடந்தார் லிங்கன். கனவின் மீதிப் பகுதியை அவர் வார்த்தைகளாலேயே கேட்போம்:

"கிழக்குப் பகுதி அறை வரும் வரை நடந்து கொண்டே இருந்தேன். கிழக்கு அறையில் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் காத்திருந்தது. என் முன்பு இருந்த சவப்பெட்டியில் ஒரு சவம் கிடத்தப்பட்டு இறுதிச் சடங்கிற்குத் தயாராக இருந்தது. சவத்தைச் சுற்றிப் போர்வீரர்கள் சவத்தைக் காவல் காத்து நின்று கொண்டிருந்தனர். மக்கள் வெள்ளம் அலை மோதியபடி

இருந்தது. ஒவ்வொருவராக சவத்தின் முகத்தைப் பார்த்தவாறே நகர்ந்த வண்ணம் இருந்தனர். முகம் மூடப்பட்டிருந்த சவத்தின் முன் மக்கள் புலம்பிக் கொண்டிருந்தனர்." "இறந்தது யார்?" என்று அங்கிருந்த காவலர் ஒருவரை நோக்கி வினவினேன். "ஜனாதிபதி" என்று கூறிய அவர், தொடர்ந்து கூறினார் – "அவரை ஒருவன் கொலை செய்து விட்டான்."

லிங்கனின் இந்தக் கனவை 1895ம் ஆண்டு வெளியான 'Recollections of Lincoln' 'ரிகலகஷன்ஸ் ஆப் லிங்கன்' என்ற தனது நூலில் "வார்ட் ஹில் லமொன்" (Ward Hill Lamon) என்பவர் எழுதி உள்ளார். லிங்கன் தனது கனவைக் கூறிய போது உடன் இருந்தவர்களில் இவரும் ஒருவர்!

**ஸ்பென்சர் பெர்சிவல்**

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த் ஸ்பென்சர் பெர்சிவலைப் பற்றி 1812ல் ஜான் வில்லியம்ஸ் என்ற வங்கி அதிகாரி ஒரு கனவு கண்டார். ஸ்பென்சர் கொலை செய்யப்படுவதற்குப் பத்து நாட்கள் முன்பு அவர் கண்ட கனவில் அவர் பிரிட்டிஷ் பாராளுமன்றமான 'ஹவுஸ் ஆப் காமன்ஸின்' முற்றத்தில் இருந்தபோது நீல நிற கோட் மற்றும் வெள்ளை வெயிஸ்ட் கோட் அணிந்த ஒரு சிறிய மனிதரைச் சுட்டிக் காட்டி இவர் தான் பெர்சிவல் என்று சொல்வதைக் கேட்டார். அந்தச் சிறிய மனிதரை மெடல் பட்டன்கள் கொண்டிருந்த பொடிக் கலர் கோட் அணிந்த ஒருவன் கொலை செய்வதைப் பார்த்தார் அவர். தூக்கத்திலிருந்து எழுந்த வில்லியம்ஸ், தான் கண்ட கனவை தன் மனைவியிடம் கூறினார்.

"உளறாமல் படுக்கப் போங்கள்" என்ற மனைவியின் கட்டளையின் பேரில் படுக்கப் போன வில்லியம்ஸ் மீண்டும் இரு முறை அதே கனவை அதே மாதிரியே பார்த்தார்! அடுத்த இரு நாட்களில் சந்தித்த பலரிடமும் தான் கண்ட விசித்திரமான கனவைக் கூறினார் வில்லியம்ஸ். அந்த அளவுக்கு அந்தக் கனவு அவரைப் பாதித்திருந்தது.

பெர்சிவல் கொலை செய்யப்பட்டு இரு நாட்களுக்குப் பிறகே அந்தச் செய்தியை அறிந்தார் வில்லியம்ஸ். என்றாலும் தன் கனவைப் பெரிது படுத்த வில்லை அவர்.

ஆனால் இரு வாரங்கள் கழித்து லண்டனுக்கு வந்த அவர் கொலையைப் பற்றிய ஒரு ஓவியத்தைப் பார்த்து பிரமிப்புக்குள்ளானார்! தான் கனவில் கண்டபடியே அந்தக் காட்சி இருந்ததோடு பெர்சிவலைக் கொன்ற கொலையாளியான ஜான் பெல்லிங்ஹாம், தான் கனவில் கண்ட அதே ஆடை அணிந்திருந்ததைப் பார்த்தார்.

வில்லியம்ஸ், தான் கண்ட கனவைப் பலரிடமும் கூறியிருந்ததால் அனைவரும் அவரது கனவின் விவரத்தை உறுதிப்படுத்தினர்.

இன்னொரு முக்கிய விஷயம், லண்டனுக்கு வெகு தொலைவில் இருந்த வில்லியம்ஸ், பெர்சிவலைக் கண்டதே இல்லை என்பதுதான்! அவரது ஆழ் மனம் எதிர்காலத்தைத் திருப்பிப் பார்க்கக்கூடிய சக்தி வாய்த்திருந்தது என்பது தான் உண்மை!

எப்படி இவரின் ஆழ் மனம் எங்கோ, யாருக்கோ எதிர்காலத்தில் எப்பொழுதோ நடக்கவிருப்பதை நுணுக்கமாக ஒரு விவரமும் விடாமல் கனவில் படம் பிடித்துக் காட்டியது என்பது விளங்காத மர்மமாகவே உள்ளது!

அறிவியல் இந்தக் கனவுகளை ஆராய ஆராய உண்மை மட்டும் – அதாவது நனவான கனவுகள் மட்டும் – அறிவுக்கும் அப்பால் விலகியே செல்கிறது!

3. வருவதைக் காட்டும் கனவுகள்

**தனக்கு வரப்போகும் நல்லதையும், கெட்டதையும் கனவிலே காண்போர் ஏராளம்.**

சாதாரணமாக இது போன்ற கனவின் மூலம் கண்டு பிறகு நடைபெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் உண்மைதான் என்பதை ஆதிகாலம் தொட்டே இலக்கியங்களும் வலியுறுத்தி வருகின்றன.

**திரிஜடையின் கனவு**

ராமாயணத்தில் அசோகவனத்தில் கற்பின் கனலியாம் சீதை அல்லல் பட திரிஜடை, தான் கண்ட கனவை சீதையிடம் கூறுவது பிரசித்தமானது. வால்மீகியும், கம்பனும் இதை அற்புதமாகச் சித்தரிக்கின்றனர்.

ராமர் சீதையுடனும் இலக்குமணனுடனும் அனைவரும் துதிக்க எழுந்தருளுவதையும், ராவணன் மொட்டைத் தலையனாய், எண்ணெய் இட்டுக் கொண்டு, சிவந்த ஆடையுடன், குடித்து விட்டு, அலரிப் பூ மாலை அணிந்து கறுப்பு ஆடை உடுத்திய பெண்ணால் இழுக்கப்படுவதையும், கழுதை பூட்டிய ரதத்தில் தெற்கு நோக்கிச் செல்வதையும் சுந்தரகாண்டம் (இருபத்தேழாவது சர்க்கம்) விவரிக்கிறது.

கம்பனோ ஒரு படி மேலே போய் காட்சிப் படலத்தில் திரிஜடை சீதையிடம், "நீ தூங்குவதே இல்லை என்பதால் உனக்கு கனவே தோன்றுவதில்லை. (துயில் இலை ஆதலின், கனவு தோன்றல). நான் ஒரு கனவு கண்டேன்" என்று ஆரம்பித்து கனவை விவரித்து பாதிக்கனவில் என்னை நீ எழுப்பி விட்டாய் (என்னை நீ உணர்த்தினை: முடிந்தது இல்) என்று கூற சீதை, "அன்னையே! அதன் குறை காண்: இன்னமும் துயில்க!" என்று கூறி மீதி கனவையும் காண வேண்டுவதாக அருமையாக நயம்படச் சித்தரிப்பது படித்து ரசிக்க வேண்டிய ஒன்றாகும்!

**கோவலன் கண்ணகியின் கனவுகள்**

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கனவிற்காகவே 'கனாத்திறம் உரைத்த காதை' என்று ஒரு காதையைப் படைத்துள்ளார்.

கண்ணகி கோவலனைப் பிரிந்து பல நாட்களாகி விட்ட நிலையில் அவளது நிலை கண்டு தோழிமாரெல்லாம் வருந்தி இரங்க, பார்ப்பனத் தோழியான தேவந்தி என்பவள் கண்ணகி துன்பம் தீர்ந்து கணவனைப் பெற வேண்டும் என கோவில் சென்று இறைவனை வேண்டி, பிறகு கண்ணகியிடம் சென்று "கணவனைப் பெறுக" என்று வாழ்த்துகிறாள். அதற்கு கண்ணகி, "நீ இப்படிக் கூறுதால் நான் கணவனைப் பெறுவேன். ஆனால் நான் ஒரு கனவு கண்டேன். அதில் நானும் என் கணவரும் வேறோர் ஊருக்குச் சென்றோம். அங்கு அவர் பெயரில் வீண் பழி உண்டாகி, தீங்கு ஏற்பட நான் அரசருடன் வாதிட்டேன். அதனால் அந்த ஊருக்கும் தீங்கு ஏற்பட்டது." என்கிறாள். இதற்குப் பரிகாரமாக சோம குண்டம், சூரிய குண்டம் ஆகிய இரு துறைகளில் மூழ்கி காமவேள் கோட்டத்தைத் தொழுமாறு தேவந்தி வேண்ட கண்ணகி, "பீடன்று" என்று மறுக்கிறாள் (கணவனைத் தவிர இன்னொரு தெய்வம் கற்புடை மகளிருக்கு இல்லை என்பதால்!)

கண்ணகியின் வாயிலாக இப்படி கோவலனுக்குப் பின்னால் வர இருக்கும் தீமையை இளங்கோவடிகள் சுட்டிக் காட்டுவதோடு, மீண்டும் கோவலன் வாயிலாக கண்ணகி துயருறப் போவதையும் காட்டுகிறார்!

மாடலன் என்னும் மறையவன் கோவலனிடம், "இப்பிறவியில் நல்லதையே செய்த உனக்கு ஏற்படும் இத் துன்பம் நீ செய்த முன் வினைப் பயனோ" என்று வருந்திக்கூற கோவலன், "மதுரையில் ஒரு வஞ்சகனால் தனக்கு துன்பம் நேர்வதாயும், அதனால்

கண்ணகி துன்பப்படுவதாயும் மாதவி மணிமேகலையை பத்தருக்கு அர்ப்பணிப்பதாகவும்" தான் கனவில் கண்டதாகக் கூறுகிறாள்.

**வள்ளுவர் காட்டும் கனவு**

உலகப் பொது மறையாம் திருக்குறளில் வள்ளுவர், 'கனவு' என்ற சொல்லை பத்து இடங்களில் ஆள்கிறார். (குறட்பாக்கள்:- 819, 1054, 1211, 1213, 1214, 1215, 1216, 1217, 1219, 1220) 'கனவு நிலை உரைத்தல்' என்று ஒரு அதிகாரத்தையே கனவினுக்குத் தந்து தலைவியின் கனவுகளையும், அதன் தேவையையும் உணர்த்துவது படித்து இன்புறத் தக்கது.

இப்படித் தமிழ் இலக்கியக் கனவுகளுக்கே தனி ஒரு நூல் தேவையாக இருக்கும்.

கோவலனுக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்ணகி கனவில் கண்டதும், கண்ணகிக்கு ஏற்படும் துன்பத்தைக் கோவலன் கனவில் கண்டதும் ராவணனின் மரணத்தைத் திரிஜடை கண்டதும் – இது போன்ற கனவுகள் அறிவியல் அடிப்படையில் ஆதாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டு ஆராயப்பட்டதுண்டா?

**விபத்துக் கனவுகள்**

'Precognitive dreaming' என்னும் 'வரும்பொருள் உரைக்கும் கனவுகளில்' பிரம்மாண்டமான விபத்துக்கள் முன்பேயே கனவில் கண்டு அவை நிகழ்வதற்கு முன்பே கூறி இருக்கும் நிகழ்ச்சிகள் சுவராஸ்யமானவை!

'டைட்டானிக்' கப்பல் மூழ்கிவிடப் போகிறது என்பதை கனவில் கண்டார் அப்போது ஐந்து வயதே ஆகி இருந்த பிரபல நாவலாசிரியர் க்ரஹாம் கிரீன் (Graham Greene).

1966ல் நடந்த அபெர்பான் (Aberfan disaster) விபத்து பெரும்பாலும் குழந்தைகள் அடங்கிய 144 பேர் ஏறிய ஒரு படகு வேல்ஸில் மூழ்கியதை விவரிக்கிறது. இந்த விபத்தும் கனவின் மூலம் முன்பே அறிவிக்கப்ட்ட ஒன்று.

இவை போன்ற நிகழ்ச்சிகளால் ஆச்சரியம் அடைந்த உளவியலாளர் ஜே.ஸி.பார்க்கரும் (J.C.Barkar) பத்திரிகையாளர் பீட்டர் ஃபேர்லியும் (Peter Fairley) ஒரு அறிக்கையை வெளியிட்டு இப்படி முன்னாலேயே கனவு கண்டோர் தங்கள் கனவு விவரங்களைக் கூறுமாறு வேண்டுகோள் விடுவித்தனர். 76 அறிக்கைகள் வந்தன. அதில் 22(29%) நுணுக்கமான விவரங்களோடு ஒரு நிகழ்ச்சியை நடப்பதற்கு முன் கனவு மூலம் கண்டு பிறரிடம் தெரிவித்த ஆதாரங்களோடு இருந்தன.

இதனால் உத்வேகம் அடைந்த பார்க்கரும், ஃபேர்லியும், 'Premonitions Bureau' என்ற நிறுவனத்தையே ஆரம்பித்தார்கள். இதன் மூலம் எதிர்கால விபத்துகளை உரிய நேரத்தில் தடுக்கலாம் என்பதும் அவர்களின் எண்ணங்களில் ஒன்று. ஆனால் முடிவுகள் முற்றுப் பெறவில்லை; சில ஆண்டுகளில் இந்த ஆய்வும் நின்று போனது.

இதே போன்று அறிவியல் அடிப்படையில் இன்னும் பெரிய ஆய்வு ஒன்றை 1947ல் பிரிட்டிஷ் உளவியலாளர் ஆலிஸ் பக் (Alice Buck) என்ற பெண்மணி தொடங்கினார். அவரும் அவரது இரு துணை ஆய்வாளர்களும் விவரமான கனவு டயரிகளைத் தொகுத்து, தங்கள் பதிவுகளை 'பாதி உண்மையானவை' (PARTIAL PREDICTIONS) என்பவற்றோடு பொருத்திப் பார்த்தனர். அவர்களது பிரமிக்க வைக்கும் முடிவுகள் 1954-55ஆம் ஆண்டு வெளிவந்த்து.

மிகத் துல்லியமான கணிப்புகள் என்று கூறத்தகும் 'காமெட்' விமான விபத்துக்களை கனவுகள் முன்பே தெளிவாகக் கூறிவிட்டன! இந்தக் கனவுகளில் எல்லாம் கனவு

உருவங்கள் (Dream Images) காமெட் விமானத்தின் உலோகத் தளர்வு முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது.

பின்னால் அதிக அளவில் காமெட் ரக விமானங்களின் விபத்து நிகழவே அதை ஆராய்ந்த நிபுணர் குழு அதிர்வு மூலம் ஏற்பட்ட உலோகத் தளர்வே (Vibration induced metal fatigue). இதன் வடிவமைப்பிலேயே ஏற்பட்ட அடிப்படைத் தவறு என்னும் அதுவே விபத்திற்கான மூல காரணம் என்றும் கண்டுபிடித்தது.

மரணம் பற்றிய கனவு முன்னறிவிப்புகள் விசித்திரமாக இருக்கக் கூடும்! எண்பதுகளில் ஆட்ரி ஆட்கின்ஸன் (Audrey Atkinson) என்ற தேவானை (Devon) சேர்ந்த விதவைப் பெண்மணி கனவு ஒன்று கண்டார். ஒரு சாவும் அதைத் தொடர்ந்து வந்த இறுதிச் சடங்கையும் விவரமாகக் கண்ட அந்தப் பெண்மணி தன் "காலம் முடிந்துவிட்டது" என்ற முடிவுக்கு வந்து விட்டார்.

ஆனால் நிஜமாகவே கனவு நனவான போது அவர் சாகவில்லை; அவரது வீட்டுக்குப் பக்கத்தில் சில வீடுகள் தள்ளி இருந்த இன்னொருவர் இறந்தார்; அவரை ஆட்கின்ஸன் சந்தித்ததே இல்லை. அமெரிக்க உளவியல் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்தவர் (American society for psychical/research) லாரா டேல் (Laura Dale) என்னும் பெண்மணி. 1942ல் இவர் ஒரு அபூர்வ கனவு கண்டார். அவரது கனவில் ஒரு நாயும், வெடித்துச் சிதறிய வாக்குவம் க்ளீனர் ஒன்றும் இடம் பெறவே, கனவு விசித்திரமாக இருந்ததால் அனைவரிடமும் அதைத் தெரிவித்தார். சிறிது நாள் கழித்து சினிமா ஒன்றிற்குச் சென்ற போது கார்ட்டூன் படத்தில் கனவு கண்டது போலவே ஒரு நாயும், வெடித்துச் சிதறிய வாக்குவம் க்ளீனரையும் பார்த்தார்.

சின்ன விஷயம் தான் என்றாலும் இது லாராவுக்கு ஏன் ஏற்பட்டது? விளக்கம் யாராலும் கூற முடியவில்லை!

பின்னால் லார்ட் கில்ப்ரேகன் (Lord Kilbraken) என்று பிரபலமான ஜான் காட்லி (John Godley) 1946ம் ஆண்டில் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்வது போலக் கனவு கண்டார்.

பிறகு நிஜ வாழ்க்கையில் தன் கனவில் கண்டது போலவே குதிரைப் பந்தயங்கள் விசித்திர ஒற்றுமையுடன் நடப்பதைக் கண்டார். சற்றுத் துப்பறியும் வேலையில் ஈடுபட நேர்ந்தது அவருக்கு. ஏனெனில் கனவில் வந்த குதிரைகளின் பெயர்களும், நிஜப் பந்தயங்களில் ஓடிய குதிரைகளின் பெயர்களும் அப்படியே முழுமையாக ஒத்திருப்பதில்லை.

தனது துப்பறியும் ஆய்வு மூலம் கணிசமான ஒரு தொகையைப் பந்தயத்தில் ஜெயிப்பதன் மூலம் பெற முடியும் என்று கண்டு கொண்டார் அவர். வருடங்கள் ஓட ஓட அவரது 'பவரும்' சற்றுக் குறையத் தொடங்கியது. என்றாலும் பத்திரிகைகளில் சிறந்த டிப் தரும் ரேஸ் நிபுணராக அவர் பல வருடங்கள் திகழ்ந்தார். இதே போலவே இன்னும் பலரும் இருந்திருக்கின்றனர்!

**காலம் எத்தனை காலம்!**

கனவுகள் உண்மையாகவே நடந்து விடுவது எதனால்? அபூர்வமாக – மிகச் சிலருக்கே என்றாலும் கூட – அவை ஏன் உண்மையாக ஆகின்றன?

இதை அறிவியல் முறையில் அறிந்தே ஆக வேண்டும் என்று விரும்புவோரில் முன்னணியாளர் ஜே.டபிள்யூ.டன் (J.W.Dunne) என்பவர் ஆவார். அவரது 'காலத்துடன் ஒரு பரிசோதனை' (An experiment with Time) என்ற பிரசித்தி பெற்ற நூல் புரிந்து கொள்வதற்குக் கஷ்டமான ஒரு சித்தாந்தத்தை முன் வைக்கிறது! இந்தப் புத்தகமும்

இதைத் தொடர்ந்து அவர் எழுதிய அவரது மற்ற புத்தகங்களும் ‘தொடர் காலம்’ (Serial Time) என்ற புதிய கருத்தைத் தருகிறது.

"பின்னால் நடக்க இருப்பதை முன்னாலே கூற முடிகிறது" என்றால் "அவை ஏற்கனவே நடந்திருக்க வேண்டும்!" ஆகவே, அவர் காலத்தை இரு வகையாகப் பிரித்து காலம்-ஒன்று (Time-1), காலம்-இரண்டு (Time-2) என்று பெயரிட்டார்.

இதில் காலம்-ஒன்று, இப்போது நடக்கும் காலத்தையும், காலம்-இரண்டு, காலம்-ஒன்று பாய்ந்து செல்வதை அளப்பதற்கு உள்ள அளவு முறையோடு ஒப்பிடக்கூடிய காலமாகவும் ஆகிறது. அதாவது ஓடும் நதியின் நீரோட்ட வேகத்தை (நிலையான) கணக்கு ஒப்பிட்டு அளப்பதைப் போல!

கனவு காணுபவரின் மனம் காலம்–இரண்டைப் போலச் செயல்படுகிறது. அந்த நிலையில் இருந்து பார்க்கும் போது காலம்–ஒன்றை முழுமையாகப் பார்க்க முடிகிறது. அதாவது நிகழ்வதையும் நிகழப் போவதையும் பார்க்க முடிகிறது! தத்துவ ரீதியில் இந்தக் கொள்கைக்கு வலுவான கவர்ச்சி உண்டு.

என்றாலும் காலம்–இரண்டு என்று ஒன்று இருந்தால் அதை எதனுடன் ஒப்பிட்டு அளப்பது? காலம் மூன்றுடனா? அப்படியானால் காலம்–மூன்றை காலம்–நான்குடன் ஒப்பிடுவதா? இப்படியே போனால் எத்தனை காலங்கள்தான் இருக்கும்? இன்ஃபினிடி (INFINITY) எண்ணற்ற காலங்கள்?!

**வருவதைக் காண்பது வலது மூளையா?**

இன்னொரு விதமாக ‘பலிக்கும் கனவுகளை’ அறிவியல் ஆய்வதற்கு முற்படுகிறது! அதாவது வரப்போகும் நிகழ்ச்சிகளைக் கனவாகக் காண்பது மூளையின் வலப்பகுதியே! (Right brain) இது இடப்பகுதி (Left brain) எதையெல்லாம் முடியாது என்று எண்ணுகிறதோ அதையெல்லாம் செய்து காட்டும்! வலது மூளையே வரும் நிகழ்ச்சிகளை "வார்த்து விடுகிறது" என்று ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டோமானால், வரும் நிகழ்ச்சிகளுக்காகக் காத்திராமல் இருக்கும் நிகழ் கால நிகழ்ச்சிகைள நல்ல விதமாக "ஏற்படுத்தலாமே" என்ற வாதம எழுகிறது.

ஆகவே இப்போது இருக்கும் அறிவியல் ஆய்வின் படி வலது மூளையானது, இடது மூளை கவனிக்காத, பார்க்காத அதி நுட்பமான விஷயங்களைக் கவனித்து, பார்த்து அதனுடன் இணைந்த பல்வேறு விஷயங்களைத் தொகுத்து, சேர்த்து நடப்பதை அல்லது எதிர்காலத்தில் சாத்தியமாக நடக்கக்கூடியதைக் கனவில் காண்பிக்கிறது எனலாம்! இதுவே எதிர்கால நிகழ்ச்சிகளை கனவில் காண்பதற்கு தற்போதைக்கு அறிவியல் தரும் விளக்கம். ஆனால் விஞ்ஞானிகளை இன்னும் தடுமாற வைக்கக் ‘கனவுப் படைப்பாளிகள்’ (CREATIVE DREAMERS) ஏராளனமானோர் இருக்கின்றனர்!

## 4. கனவுப் படைப்பாளிகள்

உலகத்திலுள்ள மிகப் பிரம்மாண்டமானதும் முக்கியமானதுமான படைப்புகள், கனவுகள் மூலமே உருவாக்கப்பட்டுள்ளன என்பது ஆச்சரியம் கலந்த உண்மை!

கனவினால் உத்வேகம் பெற்று எழுந்தவை – பெரிய புத்தகங்கள், கவிதைகள், ஓவியங்கள், இசைப் படைப்புகள், புதிய சூத்திரங்கள், உலகையே மாற்றி மனிதகுலத்திற்கு உதவும் புதிய கண்டுபிடிப்புகள் என இப்படிக் கூறிக் கொண்டே போகலாம்.

உலகின் கனவுப் படைப்பாளிகளின் பட்டியல் மிக்க நீண்ட ஒன்று! **ஆர்னால்டு டாய்ன்பியின் நூல்.**

உலக சரித்திரத்தையே 'A STUDY OF HISTORY' என்ற பெயரில் 12 பாகங்களாக எழுதினார் உலகப் பிரசத்தி பெற்ற வரலாற்றுப் பேரறிஞர் ஆர்னால்டு டாய்ன்பி.

30 லட்சம் சொற்கள் அடங்கிய அற்புதமான இந்த நூலை ஆராய்ந்து எழுதுவது என்பது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட ஒன்று.

இதை எப்படி எழுத முடிந்தது என்று அவரே கூறி உள்ளார். படுத்தவுடன் கனவிலே பக்கம் பக்கமாகச் சொற்கள் அடங்கிய காட்சிகள் விரியுமாம்!

எழுந்தவுடன் அப்படியே அதை எழுதி விடுவாராம் டாய்ன்பி. கனவில் அகக் கண்ணில் விரிந்த காட்சிகள் படலம் படலமாக வர உலக சரித்திரம் மிளிர்ந்தது. இல்லையெனில் இவ்வளவு துல்லியமாக உலக சரித்திரத்தை ஆராய்ந்து 12 தொகுதிகளாக 30 லட்சம் சொற்களில் யாரால் எழுத முடியும்?

கடவுளைப் பற்றியும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பையும் விளக்கப் புகுந்த அவர் இதற்கு விடையாக தனது கனவு ஒன்றையே விவரித்துள்ளார்!

இந்தக் கனவில் சிலுவையின் அடிப்பாகத்தைப் பிடித்துக் கொண்டு, தான் இருப்பதை அவர் கண்டார். யார்ஷைஷரில் ஆம்பிள்ஃபோர்த் அப்பேயில் (Abbey of Ample forth) பெனிடிக்டின் பீடத்தின் மேல் உள்ள சிலுவையையே அவர் கனவில் கண்டார்.

பிறகு தெளிவான லத்தீனில் கம்பீரமான ஒரு அசரீரி ஒலித்த்து!

"ஆம்ப்ளெக்ஸல் எக்ஸ்பெக்டா"

இதற்கு என்ன பொருள்? "பற்றிக் கொள்; காத்திரு" (CLING AND WAIT)

இந்த நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையாளர் என்று கருதப்படும் இவரது கனவு நமது உள்ளத்தில் சிலிர்ப்பூட்டும் இறை நினைப்பை ஊட்டுகிறது அல்லவா?

ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் தனது 'Across the Plains' (1892ல் வெளிவந்தது) என்ற நூலில், தனது கதைகளை முழுமையாக ஒரு விவரம் விடாமல் கனவில் கண்டதையும் எழுந்தவுடன் அதை அப்படியே எழுதி விடுவதையும் விவரித்துள்ளார்!

டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைடு (Doctor Jekyll and Mr. Hyde) என்ற உலகப் பிரசித்தி பெற்ற அவரது நாவல் கனவினால் படைக்கப்பட்டதே!

"மனிதனது இரட்டை பெர்சானலிட்டியை சித்தரிக்க வெகு காலம் முயன்று வந்தேன்... The Travelling Companion என்ற ஒரு நாவலைக் கூட எழுதினேன்.

‘அசிங்கமானது’ எனப் பதிப்பாசிரியர் திருப்பி அனுப்பி விடவே அதை எரித்து விட்டேன். இரண்டு நாட்கள் மூளையைக் கசக்கினேன். இரண்டாம் நாள் இரவு ஜன்னலில் ஒரு காட்சியைக் கண்டேன். அது இரண்டாகப் பிரிந்தது. (Split into two) அதில் ஹைட் ஒரு பொடியைச் சாப்பிட்டு தன்னைத் தேடி வருபவர்களுடன் இணைந்து அவர்களில் ஒருவராக மாறி விடுகிறார். மூன்று ‘சீன்கள்’ கனவில் வந்தன. மீதி முழுவதையும் எழுந்தவுடன் எழுதிவிட்டேன்" என்று விவரிக்கிறார் அவர்.

விழிப்பு உணர்வும் (Walking consciousness) கனவு உணர்வும் (Dream consciousness) இணைந்தன அவரிடம்! மர்ம நாவல்களை முதன் முதலில் எழுதிய எட்கர் ஆலன் போ நாவல் எழுத தனது கனவுக் காட்சிகளை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

சாமுவேல் டெய்லர் கூலஸ்ட்ரிட்ஜ் தனது குப்ளாகான் (Kublakhaan) என்ற பிரசித்தி பெற்ற கவிதையை கனவின் மூலமே படைத்தார்.

‘சர் ரியலிஸ’ துறையில் முதன்மையாகக் கருதப்படும் ஆன்ட்ரூ ப்ரெடன் (Andrew Breton) எங்கும் நிரவி இருக்கும் கனவே அதன் அடிப்படை என்றார். சால்வடார் டாலி (Salvadar Dali), மாக்ஸ் எர்னஸ்ட் (Max Ernest) ஆகியோரின் படைப்புகள் கனவுலகத் தோற்றங்களையே தங்கள் படைப்பில் சித்திரிக்கின்றன!

**கணிதம் மூலமே கடவுளைக் கண்டவர்!**

ஈரோட்டிலே மிகுந்த ஏழ்மை நிறைந்த குடும்பத்திலே பிறந்து உலகையே தனது கணிதக் கண்டுபிடிப்புகளால் திகைக்க வைத்த சீனிவாச ராமானுஜம் (பிறப்பு:22-12-1887; மறைவு:26-4-1920) தனது கண்டுபிடிப்புகள் அனைத்திற்கும் காரணம் தனது குலதெய்வமான நாமகிரி அம்மன் தான் என்று வலியுறுத்திக் கூறி உள்ளார்.

நாமகிரி என் நாவில் எழுதுவாள்; நாமகிரி கனவு மூலம் எனக்கு உள்ளொளி தருவாள் (Namakiri would bestow insight in dreams) என்று அடிக்கடி கூறுவது அவர் வழக்கம்.

பேப்பர் வாங்கக் கூட காசில்லாது தனது தேற்றங்களை சிலேட்டில் எழுதி அழித்து நிரூபண முடிவுகளை மட்டும் படிகள் (Steps) இல்லாமல் அவர் எழுதி வைக்க அதை ‘அவிழ்க்க’ முடியாமல் கணித மேதைகள் இன்றும் திணறும் நிலையை ஏற்படுத்தி விட்ட ராமானுஜம் தான் விழித்தவுடன் அனைத்தையும் எழுதி விடுவது வழக்கம். ‘An equation has no meaning unless it expresses a thought of God’ என்ற அவரது கூற்று எண்ணி எண்ணி வியப்புறத் தக்கது.

கணித மேதை பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் திணற வைக்கும் கணிதப் பிரச்சனைகளுக்குத் தனது கனவுகளே தீர்வுகளைத் தந்ததாக்க் குறிப்பிட்டுள்ளார்.

**கெக்குலேயின் கண்டுபிடிப்பு**

வேதியல் துறையில் நிபுணரான ஜெர்மானியர் ப்ரெட்டிரிக் அகஸ்ட் கெக்குலே கார்பன் அணுக்கள் பென்ஸீனில் எப்படி அமைந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்க பல காலம் முயன்று வந்தார். 1865ம் ஆண்டு ஒரு நாள் மதியம் கனவிலே ஒரு பாம்பு தன் வாலைக் கடிப்பது போலக் கனவு கண்டார். இதிலிருந்து பென்ஸீன் அமைப்புக்கான கருத்து உருவாகி பென்ஸீன் வளையத்தைக் கண்டுபிடித்தார். நோபெல் பரிசும் பெற்றார்.

**தரிசனங்கள்**

கனவுக்கு அடுத்தபடியாக உள்ளது தோற்றம் அல்லது காட்சி அல்லது தரிசனம்! ‘Vision’ எனப்படும் இது கனவை விட மேம்பட்டது,

அருளாளர்களும், மகனீயர்களும், அநுபூதிமான்களும் அனுபவிக்கும் ஆனந்தக் காட்சி ஒருபுறமிருக்க நாளை "நடக்க இருப்பதையோ", "நடக்க வேண்டியதற்கான வித்தையோ" கனவு அல்லது அதற்கு மேம்பட்ட தரிசனம் மூலமோ பெறுகின்றனர் பலர்.

**பால் பிரண்டனின் தரிசனம்**

'எ செர்ச் இன் சீக்ரட் இன்டியா' (A search in Secret India) என்ற உலகப் பகழ் பெற்ற நூலை எழுதிய பால் பிரண்டன் என்னும் பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர் 1931ம் ஆண்டு செங்கல்பட்டில் முகாமிட்டிருந்த காஞ்சி பரமாசார்யாரைச் சந்தித்தார். 'ஆன்மிக அருள் நாட்டத்தில் வேட்கை' கொண்டிருந்த அவரை பரமாசார்யாரிடம் அனுப்பியவர் கே.எஸ்.வெங்கட ரமணி என்னும் எழுத்தாளர் ஆவார். பரமாசார்யரின் அருளொளி வீசும் வதனத்தைக் கண்டு புளங்காகிதம் அடைந்த பால் பிரண்டன் தனக்கு வழி காட்டுமாறு வேண்ட, பீடத்தில் இருக்கும் தம்மால் தனிப்பட்ட முறையில் யாருக்கும் குருவாக இருக்க முடியாது என்று தெளிவு படுத்திய ஆசார்யர் திருவண்ணாமலை செல்லுமாறு அவரைப் பணித்தார். செங்கல்பட்டு தரிசனத்திற்குப் பிறகு, அன்று இரவே சென்னை திரும்பிய பால் பிரண்டன் உறங்கத் தொடங்கினார். திடீரென விழிப்பு ஏற்பட்டது. இருளான அறையில் ஒளி உமிழும் உருவம் ஒன்று தோன்ற, எழுந்து உட்கார்ந்து அதைப் பார்த்தார். நடந்ததை அவரே கூறுகிறார்:-

"எனது திகைப்புற்ற உற்று நோக்கும் விழிகள் சங்கரசார்யரை முகம் மற்றும் உடலுடன் பார்த்தன! தெளிவாக, எந்தவித தவறுதலுக்கும் இடமில்லாமல் அவரே தான் காட்சியளித்தார். பேய் உருவம் போல அல்லாது, சாட்சாத் மனித உருவிலேயே இருந்தார். சூழ்ந்திருந்த இருளுக்கு இடையில், மர்மமான ஒரு பிரகாசம் சூழ்ந்திருக்க அவரது உரு இருந்தது.

நிச்சயமாக இந்த தரிசனம் 'முடியாத ஒன்று' அல்லவா? அவரைத் தான் செங்கல்பட்டிலேயே விட்டுவிட்டேனே!

எனது கண்களை மூடி என்னை நானே சோதித்துக் கொண்டேன். எந்த வித மாற்றமும் இல்லாது அவரை இன்னமும் தெளிவாகப் பார்க்க முடிகிறது! கண்ணியமான நட்புடன் கூடிய அவரது சான்னியத்தை அனுபவித்தேன் என்பதே போதுமானது. காவி உடையில் இருந்த அந்த உருவைக் கண் விழித்துப் பார்த்தேன். புன்சிரிப்பு தவழ 'எளிமையாக இரு; நீ தேடுவது கிடைக்கும்' என்று அவர் உதடுகள் அசைந்து சொல்வது போல இருந்தது. வந்தது போலவே அந்த தோற்றம் மறைந்தது. கலக்கமடையச் செய்யாத அந்த அதீத காட்சி, எழுச்சி மற்றும் மகிழ்ச்சியைத் தந்தது. அதைக் 'கனவு' என்று தள்ளிவிட முடியுமா என்ன?" பிறகு நடந்ததை உலகமே அறியும்.

ரமண மகரிஷியை பால் பிரண்டன் சந்தித்து மேலை நாடுகளுக்கு அறிமுகப்படுத்த, ஏராளமான வெளி நாட்டோர் ரமணரின் அருளை நாடி வந்தனர்!

**விவேகானந்தர் கண்ட காட்சி**

கடலைக் கடந்து அமெரிக்க செல்லலாமா வேண்டாமா என முடிவுக்கு வராமல் தவித்த சுவாமி விவேகானந்தரின் கனவிலே பகவான் ராமகிருஷ்ணர் தோன்றி கடல் அலைகளின் மீதிருந்து 'வா... வா' என்று வரவேற்க குருதேவரின் அருளாசி கிடைத்த உள்ளப் பூரிப்புடன் அமெரிக்கா செல்ல முடிவெடுத்தார் அவர். விளைவு, உலகமே இந்து மதத்தின் பால் ஈர்க்கப்பட்டது.

**அரவிந்தரின் காட்சிகள்**

பின்னாளில் தான் காணப்போகும் மனிதர்களை முன்பாகவே 'காட்சிகளில்' காண்பதை ஒரு 'உள்ளுணர்வு சக்தி' (It is an intuitive power) என்கிறார் மகரிஷி அரவிந்தர்.

தான் கண்ட இரு சூட்சும திருஷ்டிகளை (Subtle vision) அவர் விவரித்துள்ளார்:-

"ஒரு முறை நாங்கள் கவர்னராக ஆக வேண்டும் என்று விரும்பிய ஒருவரைக் காண முயன்றேன். ஆனால் அலுவலகத்தில் அமர்ந்திருந்தவர் முற்றிலும் வேறான ஒருவர்! நாங்கள் விரும்பியவர் அவர் அல்லர். புதிர் போல இருந்த அதன் அர்த்தத்தை என்னால் காணமுடியவில்லை. ஆனால் சிறிது காலம் கழித்து என் மைத்துனர் போஸ் அரசு அதிகாரி ஒருவருடன் சண்டை போட்டார். அவரை அரசு அலுவலகம் வரச் சொல்லி சம்மன் வரவே, கடிதம் 'போஸ்' என்பதற்கு பதிலாக 'கோஷ்' என்று வரவே, அரவிந்த கோஷான என்னைத் தவறுதலாக அழைத்துச் சென்றனர்.

அங்கே நான் முன்னால் யாரைக் கண்டேனோ அவரே கவர்னராக வீற்றிருந்தார்."

அரவிந்தர் கண்ட இன்னொரு திருஷ்டியில் பிரபல எழுத்தாளரான வ.ரா. வைக் கண்டார்.

"ஒரு சமயம் சி.ஆர். தாஸின் நண்பரான வ.ரா. என்னைக் காண வருவதாக இருந்த்தது. அவரது தோற்றம் எப்படி இருக்கும் எனக் காண விரும்பினேன். நன்கு ஒட்டிய தலையோடு உரம், முரட்டு இயல்போடு கூடிய தோற்றத்தைக் கண்டேன். ஆனால் வ.ரா. நேரில் வந்த போது சாந்த முகம் உள்ள தென்னிந்திய அந்தணருக்கே உரித்தான தோற்றத்துடன் விளங்கினார்! ஆனால் இரு வருடங்களுக்குப் பிறகு அவரை மீண்டும் சந்தித்த போது நான் முதலில் எப்படிக் கண்டேனா அப்படி மாறி விட்டிருந்தார் அவர்! இது ஒரு தீர்க்க தரிசனக் காட்சியே (Prophetic vision)."

அரவிந்தர் கூறும் இன்னொரு காட்சி மிகுந்த வியப்பைத் தரும்! 'டீ அடிமையாக' இருந்த முந்தைய நாட்களில் நிறைய வேலைகள் காத்திருக்க டீ சாப்பிடாமல் எதையும் தொடங்க முடியவில்லை அவரால். தனது மைத்துனர் எப்போது டீ கொண்டு வருவார் என்று அவர் எண்ணிய சமயத்தில் எதிரே இருந்த சுவரில் டீ வரும் சரியான நேரம் எழுத்தில் எழுதப்பட்டிருந்தது! அதே நேரத்தில் டீயும் வந்தது.

"அன்று முதல் டீ வரும் நேரம் அதே போல சுவரில் தினமும் எழுதப்படுவதைக் கண்டேன்" என்று எழுதி உள்ளார் அவர்! 30-05-1923 அன்று அரவிந்தர் 'நேற்று ஒரு கனவு கண்டேன்' என ஆரம்பித்து ஒரு கனவை விரிவாக விளக்கி உள்ளார். மந்திரவாதி ஒருவரும் விஞ்ஞானி ஒருவரும் ஒரு பெண்ணைக் காப்பாற்ற முற்படும் காட்சியை விவரிக்கும் அவர், இதன் மூலம் பூமியின் ரகசியமும் அதன் பௌதீக இயற்கையும் உருவகமாக தரப்பட்டது என முடிக்கிறார்.

விசித்திரமான இந்தக் காட்சிகளுக்கெல்லாம் அறிவியல் விளக்கம் தர முடியாவிட்டாலும் கூட அரவிந்தர், "இவையெல்லாம் தேவையெனில் ஸ்வப்ன சமாதியில் இருந்து ஒருவர் தெரிந்து கொள்ளலாம்" என்கிறார்!

தான் பூஜித்த விக்கிரகங்கள் ஆற்றில் எறியப்பட்ட, தாங்க முடியாத துக்கம் அடைந்த தியாகராஜ ஸ்வாமிகள் மனமுருகி வேண்ட; 'நான் இங்கு இருக்கிறேன்' என்று ராமரே அவர் கனவில் தோன்றி கூற அங்கு சென்று விக்கிரகங்களை மீட்ட வரலாறு முதல் "போகாதே, போகாதே, என் கணவா; பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்" என்ற வெள்ளையம்மாளின் கனவு நாட்டுப் புறப் பாடலில் பதிவாகும் அளவு பலிக்கும் கனவுகள் ஏராளம் உள்ளன.

இவற்றை வியந்து பார்க்கும் அறிவியல் எப்படி எல்லாம் கனவு உருவாகிறது என்று விளக்கம் தந்து ஓய்ந்து விடுகிறது. ஏன் அவை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது என்று விளக்கம் தர முடியவில்லை!

ஷேக்ஸ்பியர் கூறியபடி 'Cry to dream again' என்று மனிதன் நல்ல கனவுகளைக் காண விரும்புவது இயற்கை தான்! ஏனெனில் அறிவியல் கூட உலகின் பண்டைய மர்மங்களில் ஒன்றான கனவைப் பற்றி விளக்குகையில் 'உறக்கத்தின் விளைவாக எழுவது அல்ல கனவு; அதன் லட்சியமே அது தான்' என்கிறது. 'நம்மோடு இருக்கும் அன்னியன்' கனவு (A stranger within) என்று அறிவு விளக்க அந்த புரியாத அன்னியன் அறிவுக்கு அப்பாலாக இன்னும் இருப்பதே வியப்புக்குரிய விஷயம்!

**5. ஒருவரே இரு இடங்களில் தோன்றுதல்**

ஒவ்வொருவருக்கும் ஸ்தூல சரீரம் என்று ஒன்று இருப்பது போலவே சூட்சும சரீரம் என்ற ஒன்றும் இருக்கிறது என்பதைக் காலம் காலமாக அனைவரும் நம்பி வருகின்றனர்.

இந்த உடலைப் போலவே சுதந்திரமாக உலவி வர அதற்கும் உரிமை இருக்கிறது என்பதோடு, அது வெவ்வேறு அடர்த்தியில் விண்வெளியில் உலவி வர முடியும் என்பதையும் ஏராளமான சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

கிறிஸ்தவம் இதை, 'பைலொகேஷன்' (Bilocation) என்ற பெயரில் ஒப்புக் கொள்கிறது.

கி.பி.1226ம் ஆண்டு, ஒரு புனித வியாழக்கிழமை, லிமோஜெஸ் (Limoges) என்னுமிடத்தில் செயிண்ட் பியரி டு க்வயராய்க்ஸ் சர்ச்சில் செயிண்ட் அந்தோணி ஆப் படுவா மத போதனை செய்ய ஆரம்பித்தார். திடீரென அவருக்கு அதே நகரில் இன்னொரு கோடியில் உள்ள ஒரு மத போதகர் மடாலயத்தில் அதே நேரத்தில் இருப்பதாகத் தாம் வாக்கு அளித்திருந்தது நினைவிற்கு வந்தது. தனது அங்கியை இழுத்துத் தலை மேல் போர்த்திக் கொண்டு மண்டியிட்டார் அவர். எதிரே இருந்த மொத்தக் கூட்டமும் பயபக்தியுடன் சில நிமிடங்கள் காத்திருந்தது. அதே சமயம், அந்த முனிவர் நகரின் மறு கோடியில் இருந்த மடாலயத்தின் உயரமான பீடத்திலிருந்து இறங்கி வருவதையும், தான் படிக்க வேண்டியவற்றைத் தெளிவாகப் படித்து விட்டு உடனே மறைந்து விட்டதையும் அங்குள்ள மதபோதகர்கள் பார்த்தனர்.

இதே போன்று ஒருவரே இரு இடங்களில் ஒரே சமயத்தில் இருப்பதைப் பல ஆயிரம் சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

ரோம் நகரில் செயிண்ட் க்ளிமெண்ட், செயிண்ட் அம்ப்ரோஸ் போன்றவர்கள் இதே போன்று இரு இடங்களில் ஒரே சமயத்தில் தோன்றி உள்ளதற்கான ஆதாரங்கள் உள்ளன!

இவற்றில் குறிப்பிடத் தகுந்த சம்பவம் ஒன்று உண்டு! 1774ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் தேதி நடந்தது அது! அரெஜ்ஜோ என்ற நகரில் சிறையிலே ஒரு அறையில் அடைக்கப்பட்டிருந்த அல்போன்ஸ் டிலிகுவாரி என்பவர் திடீரென ஒரு நாள் மிகுந்த அமைதியடைந்தவராக மாறியதுடன் எதுவுமே சாப்பிடவில்லை! ஐந்து நாட்கள் கழித்து படுக்கையிலிருந்து விழித்தவர் தாம் பதினான்காம் போப் க்ளிமெண்டின் மரணப் படுக்கைக்குச் சென்று வந்ததாகக் கூறினார்! உடனே இது சரி பார்க்கப்பட்டு அவரது கூற்று உண்மை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இறந்து கொண்டிருந்த போப்பின் படுக்கை அருகே ஆஜரானவர்களில் அவரும் ஒருவர்!

விஞ்ஞானமும், மெய்ஞானமும் இவற்றை 'டபிள் (Double)' என்றும், ஆஸ்ட்ரல் ட்ராவல் (Astral Travel) என்றும், உடலை விட்டு வெளியேறிய அனுபவம் (Out of Body experience) என்றும் வெவ்வேறு பெயரிட்டுக் கூறுகின்றன!

உலகின் புகழ் பெற்ற சம்பவம் கவிஞர் கதேயைப் பற்றியது! அவரது சுயசரிதையான 'பொயட்ரி அண்ட் ட்ருத்' (Poetry and Truth) நூலின் மூன்றாம் பாகத்தில் பதினொன்றாம் அத்தியாயத்தில் அவருக்கு நேர்ந்த சம்பவத்தை மிக விவரமாக எழுதி உள்ளார்.

அவரது வார்த்தைகளிலேயே அதைக் காண்போம்:- "அப்போது நான் ட்ரஸன்ஹெய்ம் நகர் நோக்கி நடைபாதையில் சவாரி செய்து கொண்டிருந்தேன். எதிர் கொண்ட நிகழ்ச்சி என்னை ஆச்சரியப்பட வைத்தது! என்னை நானே அதே வழியில் எதிர்த்தாற்போல் குதிரை மீது சவாரி செய்து வருவதைப் பார்த்தேன்! ஆனால் எனது உடைகள் மட்டும் வேறாக இருந்தன! பொன்வண்ணம் இணைந்த க்ரே கலரில் ஆடைகள் இருந்தன.

இந்தக் கனவிலிருந்து திடீரென்று நான் விழித்துக் கொண்டேன். நான் கண்ட காட்சி முழுவதுமாக மறைந்திருந்தது. இதில் குறிப்பிடத்தகுந்த விஷயம் என்னவென்றால் என்னை அதே சாலையில் எட்டு ஆண்டுகள் கழித்து நானே ஃபெரெடெரிகா செல்வதற்காகச் சென்று கொண்டிருந்த பொழுது பார்க்க முடிந்தது! கனவில் கண்ட அதே ஆடைகள் தாம்! அப்பொழுது அவை தற்செயலாக அணியப்பட்டவை. இந்த அற்புதமான காட்சி என் மீது ஒரு நிரந்தரமான விளைவை ஏற்படுத்தி விட்டது!"

கதேயின் வாழ்வில் நிகழ்ந்த இன்னொரு சம்பவம் ஆச்சரியத்தைத் தரும்! ஃபாண்டஸம்ஸ் ஆப் த லிவிங் (Phantasms of the living) என்ற புத்தகத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த நிகழ்ச்சி!

உல்ஃப்கேங் கதே கோடைக்காலத்தில் ஒரு மழை பெய்யும் நாளின் மாலை நேரத்தில் 'கே' என்ற தனது நண்பருடன் வெய்மர் நகரில் பெல்விடீர் என்ற இடத்திலிருந்து திரும்பி நடந்து வந்து கொண்டிருந்தார்! திடீரென்று அவர் யாரோ ஒருவர் தன்னுடன் பேச வருவதைப் போல் ஒரு கணம் நின்றார். ஆனால் 'கே'க்கு யாரும் தென்படவில்லை! திடீரென்று கதே பேசலானார்:- "மை காட்! என்னுடைய நண்பர் ஃப்ரெடரிக் இந்த நேரத்தில் ஃப்ராங்க்போர்டில் அல்லவா இருக்க வேண்டும்! ஆனால் அவரேதான் இவர்!"

அடுத்த கணம் கண்ணுக்குப் புலப்படாத நண்பருடன் பேசலானார்!

"நீங்கள் இங்கே வெய்மரிலா இருக்கிறீர்கள்? ஆனால் ஏன் இப்படி உடை அணிந்திருக்கிறீர்கள்? உங்களது கவுன், உங்கள் இரவுத் தொப்பி, காலில் எனது செருப்புகளுடன் இந்த நெடுஞ்சாலையில் நிற்கிறீர்களே!"

'கே'க்கு யாரும், எதுவும் தென்படவில்லை! அவர் கவிஞருக்கு 'ஏதோ' நேர்ந்து விட்டதென்று கலக்கமடைந்தார். ஆனால் கதே தான் 'கண்ட காட்சியில்' இருந்த நண்பருடன் மேலும் பேசலானார்! ஃப்ரெடெரிக்! உங்களுக்கு என்ன ஆயிற்று? அருமை நண்பர் 'கே'! நம்மைப் பார்க்க வந்த அந்த நண்பர் எங்கே சென்றார்? அவரைப் பார்த்தீர்களா?"

அதிர்ச்சி அடைந்த கே பதிலே பேசவில்லை.

கவிஞர் தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்து விட்டு கனவு கண்ட குரலில் பேசலானார்:- "ஆஹா! நான் புரிந்து கொண்டேன்!... இது ஒரு காட்சி. ஆனால் இதன் அர்த்தம் என்ன? எனது நண்பர் திடீரென்று இறந்து விட்டாரா? அல்லது நான் கண்டது அவரது ஆவியா?"

பிறகு கதே வீட்டிற்குத் திரும்பினார். அங்கே ப்ரெடரிக் ஏற்கனவே வந்திருந்தார்.

கதேக்கு மயிர்க்கூச்செறிந்தது!

"அட, பிசாசே!" முகம் வெளிறக் கூறினார் கதே!

"எனது நண்பரே! இதுதான் உங்கள் அருமை நண்பருக்கு நீங்கள் தரும் வரவேற்பா?" என்றார் ஃப்ரெடெரிக்.

"ஆ, இது ஆவி இல்லை! சதையும் ரத்தமும் உள்ள ஆள்தான்!" என்று உணர்ச்சி பொங்கக் கூவினார் கதே!

நண்பர்கள் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டனர்.

ஃப்ரெடெரிக், தான் கதே வீட்டிற்கு மழையில் நனைந்தவாறே வந்ததாகவும், கதேயின் நாற்காலியில் அமர்ந்து தூங்க ஆரம்பித்ததாகவும் கதேயைச் சந்திக்க வெளியே செல்வது போலக் கனவு கண்டதாகவும் அவரைச் சந்தித்த கதே, "நீங்கள் இங்கே வெய்மர்

நகருக்கு வந்திருக்கிறீர்களா? என்ன ஆச்சரியம்! உங்கள் கவுன், இரவுத் தொப்பி இவற்றோடு எனது செருப்புகளை அணிந்து நெடுஞ்சாலையில் நிற்கிறீர்களே!" என்று கூறுவது போல இருந்ததாகவும் கூறினார்.

இந்த நிகழ்ச்சி கதேயை மிகவும் வியப்புக்குள்ளாக்கியது! அன்றிலிருந்து அவர் புனர் ஜென்மக் கொள்கையை நம்ப ஆரம்பித்தார்.

டாக்டர் சொலியர் (Dr.Sollier) தனது புத்தகத்தில் (Les Phenomenes d' autoscopie) ஆல்ப்ரெட் டீ மஸ்ஸெட், ஷெல்லி, மாப்பஸான், டாக்டர்கள் லாஸ்க்யூ, ஃப்ரெ, ரௌகினோவிட்ச், லெமாய்ட்டர் ஆகியோரது அனுபவங்களுடன் தனது சொந்த கேஸ்கள் பன்னிரெண்டையும் தொகுத்துள்ளார்!

டாக்டர் ஃப்ரெ கீழ்க்கண்ட சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்:- "வீட்டின் தாழ்வாரத்தில் ஒரு மருத்துவர் கண்ணாடியில் தோன்றுவது போன்ற தெளிவான தனது தோற்றத்தை முதன் முறையாகத் திடீரென்று கண்டார். அதிலிருந்து இந்த மாயத் தோற்றம் அவருக்கு அடிக்கடி தெரிய ஆரம்பித்தது! மாலை நேரங்களில்தான் இது தோன்றும்! ஒவ்வொரு முறையும் இந்த உரு தனது அசல் உருவின் நடை உடை பாவனைகளையே செய்யும்."

மாப்பஸானின் நண்பர் ஒருவர் டாக்டர் சொலியரிடம் தந்த தகவல் இது:-

1889ம் ஆண்டு நாவலாசிரியர் மாப்பஸான் பக்கவாத நோயின் முழுத்தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்த சமயம்.

ஒரு நாள் மதிய நேரத்தில் தனது டேபிள் அருகே உட்கார்ந்திருந்த போது கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

மாப்பஸான் திரும்பிப் பார்த்தபோது தனது உருவமே உள்ளே நுழைந்து வந்து அவருக்கு எதிரேயே உட்கார்ந்து அவரது கைகளில் தன் தலையைப் புதைத்து எழுத வேண்டியதைக் கூற ஆரம்பித்தது. எழுத வேண்டியது எழுதி முடிக்கப்பட்டவுடன் அது எழுந்து நின்றது! பின் மாயத் தோற்றம் மறைந்தது!

பல கேஸ்களை ஆய்வு செய்த டாக்டர் சொலியர் இந்த 'அருவ' உரு மனதிலே தோன்றுவது போல இருப்பதிலிருந்து, கண்ணாடியில் தெளிவாகக் காண்பது போல இருப்பது வரை வெவ்வேறு விதங்களில் தோன்றி இருப்பதைக் கண்டறிந்தார். தோன்றும் உருவத்தைத் திடீரெனப் பார்த்து ஆச்சரியம் அடைந்தால் அது உடனே மறைந்து விடுகிறது!

ஆவி உரு பலவித தோற்றங்களில் பலவித ஆடைகளுடன் சிறிய உருவமாகவும் இருப்பதோடு ஒரு சில நிமிடம் முதல் சில மணி நேரம் வரை தெளிவாகவோ மங்கலாகவோ இருப்பதையும் அவர் கண்டறிந்தார்.

ஆழ்ந்த தியான நிலையிலோ, தன்னை ஒரு முகப் படுத்தும் நிலையிலோ மயங்கிய நிலையில் இருக்கும் போதோ, மாலை நேரங்களில் இந்த 'அருவ' உரு தோன்றுகிறது. சில அடி தூரத்திலிருந்து மிக நெருக்கமாக இருப்பது வரை தூரமும் மாறுபடுகிறது. சில சமயம் அது பார்ப்பவரை நோக்கி முன்னேறி திடீரென மறையும்; சில சமயம் திரும்பும்; சில சமயம் பக்கவாட்டில் நடப்பதுடன் பார்ப்பவர் எப்படி நடக்கின்றனரோ அது போலவே நடக்க ஆரம்பிக்கும்.

பொதுவாக இந்த உரு பேசுவதில்லை. அரிதான சில சமயங்களில் இந்த 'உருவும்' உருவத்தை உடைய சொந்தக்காரரும் பேசுவதோ அல்லது ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிப்பதோ நடைபெறுகிறது.

‘உருவின்’ ஆடைகள் பொதுவாக கறுப்பு நிறத்தில் இருக்கிறது! சில சமயம் அந்த ஆடை, உருவத்தின் சொந்தக்காரர் போற்றும் வீரர் அணியும் ஆடை அல்லது ஏற்கனவே அணிந்த பழைய ஆடை போலத் தோன்றுகிறது!

இவ்வளவு நுட்பமாக நூற்றுக்கணக்கான சம்பவங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டாலும் இவை ஏன் ஏற்படுகின்றன என்பது இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை!

விஞ்ஞான ஆய்வுகளில் இதற்கு விளக்கம் எப்படி கொடுப்பது? டாக்டர் சொலியர், தனது சகஜ புத்தி மற்றும் புலனை இழந்தவர்கள் இந்த விதமாக ‘டபிளைக்’ காண்கின்றனர் என்கிறார்.

டாக்டர் யூஜென் ஆஸ்டி (Eugen Osty) உணர்வுகளின் பரிமாற்றத்தால் தனது டபிள் அல்லது மாற்றுருவே ‘எண்ணுகின்ற மனிதராக’ (Thinking Self) ஆகிறது என்று ரிவ்யூ மெடாசைக்கிக் என்ற பத்திரிகையில் (மே-ஜன் 1930) குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் ரிச்செட் ‘தர்ட்டி இயர்ஸ் ஆப் சைக்கிகல் ரிஸர்ச்’ (30 years of Psychical Research) என்ற தனது நூலில் இதை விட ஆச்சரியகரமான தகவல் ஒன்றைத் தருகிறார்!

மாற்றுருவை அல்லது டபிளை பலரும் ஒரே நேரத்தில் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார் அவர்!

**6. இரு இடங்களில் தோற்றம்!**

டாக்டர் சார்லஸ் ரிச்சட் (பிறப்பு: 26.8.1850) தனது முப்பது வருட ஆராய்ச்சியில் ஒரே மனிதர் இரு இடங்களில் இருப்பதைப் பலரும் பார்த்ததை உறுதிப் படுத்துகிறார்.

தன் உருவத்தைத் தானே பார்ப்பதையோ அல்லது ஒருவரை ஒரே சமயத்தில் இரு இடங்களில் ஒருவர் பார்ப்பதையோ மனப் பிரமை, புத்தி பேதலிப்பு என்று கூறி ஒதுக்கி விடலாம்.

ஆனால் ஒருவரைப் பல பேர் இரு இடங்களில் ஒரே சமயத்தில் பார்ப்பதை உறுதிப் படுத்தும் போது, பார்த்த அனைவரும் 'பைத்தியக்காரர்கள்' என்று கூறி விட முடியாதல்லவா?

**பாபாவின் தோற்றம் இரு இடங்களில்**

இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அற்புத புருஷராக உலக ரிக்கார்டுகள் அனைத்திலும் பதிவு செய்யப்பட்ட ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உருவத்தை ஒரே சமயத்தில் இரு இடங்களில் பல பேர் பார்த்த சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

மஞ்சேரி என்பது கேரள மாநிலத்தில் உள்ள ஒரு கிராமம். அங்கே ராமானந்த ராவ் என்பவர் பாபாவின் பக்தர் ஆவார். ஒரு நாள் அவரது வீட்டிற்கு விஜயம் செய்த பாபா பல மணி நேரம் அக்குடும்பத்தினருடன் இருந்துள்ளார். பிறகு பஜனைப் பாடல்களை அவர்கள் பாட அவற்றை பாபா கேட்டதோடு தானும் பாடி உள்ளார். அங்குள்ள பக்தர்கள் சிலருக்கு நேரடி பேட்டி வேறு கொடுத்துள்ளார். பாபா மஞ்சேரியில் இருந்த அதே நாள் அதே சமயம் அவர் வெங்கடகிரி அரண்மனையில் இருந்துள்ளார். மஞ்சேரியிலிருந்து 600 மைல் தள்ளி உள்ளது இது! அன்று மாலையே 30 மைல் தள்ளி இருந்த காளஹஸ்தியில் ஒரு பெரிய கூட்டத்தில் பேசி இருக்கிறார்.

உண்மையில் ராமானந்தராவிடம் பாபா மதியம் தான் காளஹஸ்தியில் ஒரு நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டுமென்று கூறினார். அந்த இடம் மஞ்சேரியிக்கு அருகில் உள்ள ஒரு இடம் என்று ராமானன்ந்த ராவ் கருதினார். சாலையில் அவரைப் பின் தொடர அவரை அனுமதிக்கவில்லை பாபா.

இந்தச் சம்பவத்தை பாபா வசிக்கும் பிரசாந்தி நிலைய வெளியீடான 'சனாதன சாரதி'யில் வெளியிட விரும்பினார் பாபாவின் தொண்டர்களில் முதன்மையானவரும் பாபாவின் வரலாற்றை 'சத்யம் சிவம் சுந்தரம்' என்று நான்கு பாகங்களில் எழுதியவருமான திரு.கஸ்தூரி அவர்கள். பாபா மறுக்க முடியாத ஆதாரங்களைப் பலரிடமும் சேகரிக்குமாறு கஸ்தூரியிடம் கூறி பின்னர் இந்த அனுபவத்தை உலகத்தாருடன் பகிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

சம்பவம் பிரசுரமானது. இதைப் படித்தார் கார்லிஸ் ஒஸிஸ். ஒஸிஸ் அமெரிக்காவில் அதீத உளவியல் ஆராய்ச்சி சங்கத்தின் டைரக்டர் ஆவார்! அவரே நேரடியாக இந்தியாவிற்கு வந்து மஞ்சேரிக்கும் வெங்கடகிரிக்கும் விஜயம் செய்தார். அங்கே இந்த இரு இடங்களிலும் பாபாவைப் பார்த்த பலரையும் நேரடி பேட்டி கண்டார். 'உடலை விட்டுச் செல்லும் அனுபவம்' எனப்படும் 'Out of body experience' பற்றி பாபாவைப் பற்றிய விவரங்களால் தனக்கு பெறுதற்கரிய அனுபவம் கிடைத்ததாக அவர் கூறினார்.

உலகப் பிரசித்தி பெற்றவரும் அதீத உளவியல் துறையில் தலையாய விஞ்ஞானியாகக் கருதப்படுபவருமான இவர் தனது சகா ஈ.ஹரால்ட்ஸனுடன் (E.Haroldson) மூன்று முறை இந்தியாவிற்கு வந்து பாபாவைப் பல்வேறு விதமாக ஆராய்ந்து இறுதியில்... "எங்களைப் போன்ற நிபுணத்துவம் வாய்ந்த அதீத உளவியல் விஞ்ஞானிகளுக்கு இங்கு காணப்படும் அளப்பற்கரிய குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சிகளும் அற்புதங்களின் பிரம்மாண்டமான

விளைவுகளும் முற்றிலும் ஆச்சரியத்தைத் தருகின்றன! நான் கடந்த 25 வருடங்களாக இத் துறையில் தீவிர ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறேன்.

உலகெங்கும் பயணம் செய்திருக்கிறேன. ஆனால் பாபா ஆற்றும் தினசரி அற்புதங்களையும், தெளிவான சக்தி வாய்ந்த ஆன்மீக நிதர்சனத்தையும் எங்குமே காணவில்லை!" என்கிறார்.

அறிவுக்கும் அப்பால் உள்ள இந்த அதிசயம் தினந்தோறும் பிரசாந்தி நிலையத்தில் இன்றும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தகுந்தது. (பிரசாந்தி நிலையம் ஆந்திர மாநிலம் ஆனந்தபூர் மாவட்டத்தில் தர்மாவரம் அருகே உள்ளது)

**ரமணரின் தோற்றம்**

மதுரையில் வெங்கட்ராமனாக இருந்த சிறுவன் தெற்கு கோபுரத்தின் எதிரே உள்ள சொக்கப்பன் நாய்க்கன் தெருவில் உள்ள ஒரு வீட்டின் (இன்றும் உள்ளது – ரமண மந்திரமாக) மாடியில் தான் இறந்தது போல அனுபவம் பெற ஆத்ம தூண்டுதலால் திருவண்ணாமலை சென்று ரமண மகரிஷி ஆனார். (பிறப்பு 29.12.1879) 1896ம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி திருவண்ணாமலை வந்தடைந்த ரமணர் 1950ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 8.47க்கு மறையும் வரை அங்கிருந்து வேறு எந்த ஊருக்கும் செல்லவே இல்லை. அவர் மறைந்த அந்த வினாடி வானில் ஒரு பெரிய ஜோதி பறந்து சென்றதை உலகோர் கண்டு வியந்தனர்.

அவரது பெருமையை அறிந்து அவருக்கு 'ரமணர்' என்ற பெயரைச் சூட்டிய பெரியவர் 'காவ்ய கண்ட' கணபதி சாஸ்திரிகள் ஆவார்.

அவரது அனுபவம் பிரமிக்க வைக்கும் ஒன்றாகும். எல்லையற்ற கருணை மழை ரமணரிடமிருந்து பொழிய அவரது அருளை மேலும் பெற திருவொத்தியூரில் வேண்டிக் கொண்டார் கணபதி சாஸ்திரிகள். அதே வினாடி அவர் இருக்கும் இடத்தில் ரமணர் நுழைந்தார். கணபதி சாஸ்திரிகள் அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

அவர் எழுந்திருக்க முயன்ற போது ரமண மகரிஷி அவர் தலை மீது தன் கையால் தொட்டு ஆசிர்வதித்தார். உடனே பெரும் சக்தி கணபதி சாஸ்திரிகள் உடலில் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

இருப்பிடத்தை விட்டு ஒரு சிறிதும் நகராத ரமணர், திருவண்ணாமலையை விட்டுச் செல்வதாவது? எவருமே நம்ப முடியாத விஷயம்! ஏனெனில் தினம் தோறும் ஆசிரமத்தில் ஏராளமானோர் அவரை தரிசித்த வண்ணம் இருக்கின்றனர். இந்த சம்பவத்தைப் பற்றிப் பல வருடங்கள் கழித்து ரமண மகரிஷி கூறியதாவது:

"சில வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் நான் படுத்திருந்தேன். விழித்த போது எனது உடல் மேலே, இன்னும் மேலே எழும்புவதை உணர்ந்தேன். எல்லாப் பொருள்களும் சிறிது சிறிதாக ஆகி முற்றிலுமாக மறைவதைக் கண்டேன். என்னைச் சுற்றி எங்கும் ஒளி வெள்ளம்! சிறிது நேரம் கழித்து உடல் மெதுவாக கீழே இறங்குவதை உணர்ந்தேன். எல்லாப் பொருள்களும் தெரிய ஆரம்பித்தன. இந்தச் சம்பவத்தை முழு உணர்வுடன் அறிய முடிந்தது. கடைசியில் இது போலத்தான் சித்தர்கள் வெகு தூரம் உள்ள இடங்களை குறுகிய நேரத்தில் அடைந்தும் அங்கிருந்து மர்மமாக மறைந்தும் போகின்றனர் என்ற முடிவுக்கு வந்தேன். இப்படி உடல் தரையில் இறங்கும் போது தான், திருவொத்தியூரை முன்னொரு போதும் கண்டிராத போதிலும் அங்கு வந்ததாகத் தோன்றியது. ஒரு பெரிய சாலையில் இருப்பதை உணர்ந்தேன். அதிலேயே நடக்கலானேன். கொஞ்ச தூரத்தில் கணபதி சாஸ்திரிகள் இருந்த பிள்ளையார் கோவில் இருந்தது. உள்ளே நுழைந்தேன்."

சித்தர்களுக்கெல்லாம் சக்கரவர்த்தி எனக் கருதத் தகும் ரமணர், "இப்படித்தான் சித்தர்கள் ஓரிடம் விட்டு ஓரிடம் செல்வார்கள் போலும் என்று 'ஒன்றுமே தெரியாதது' போல இந்தச் சம்பவத்தைக் கூறுவது அவரது எளிமையையும், அடக்கத்தையும் உணர வைக்கிறது !"

ரமணரின் முதல் மேலை நாட்டு பக்தரான எஃப். ஹெச். ஹம்ப்ரீஸ் (F.H.Humphreys) என்பவர் ரகசிய சாஸ்திரத்தில் (Occultism) பயிற்சி உள்ளவர். அவர் 1911ல் வெல்லூரில் போலீஸ் அதிகாரியாகப் பணியாற்ற வந்த போது தனக்கு தெலுங்கு கற்பிக்க வந்த ஆசிரியர் நரசிம்மய்யாவை முன்பே பார்த்திருப்பதாக்க் கூறினார்.

"பம்பாயில் நான் பார்த்த முதல் நபர் நீங்கள் தான்" என்று அவர் கூறி போதும் நரசிம்மய்யா அதை பலமாக ஆட்சேபித்து தான் ஒரு போதும் பம்பாய் சென்றதில்லை என்றார். இதற்கு ஹம்ப்ரீஸ், "நான் பம்பாயை அடைந்தவுடன் உடல் நலம் குன்றி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன். வலியை மறக்க என் மனதை வெல்லூர் பக்கம் திருப்பவே நான் அங்கு உடலுடன் (Astral Body) வந்து இறங்கி உங்களைப் பார்த்தேன்" என்றார்.

பின்னால் ரமணரின் உபதேசத்தின் பேரில் இந்த ரகசிய சித்தியில் அவருக்கு ஆர்வம் குறைந்து அதை விட உயரிய நிலை அடைவதில் பற்று ஏற்பட்டது.

**சேஷாத்ரி சுவாமிகளின் வாழ்விலே...**

திருவண்ணாமலையிலே ரமணர் வாழ்ந்த அதே காலத்தில் வாழ்ந்த இன்னொரு மகான் – சித்தர் – சேஷாத்திரி சுவாமிகள் (பிறப்பு 22.1.1870: சமாதி 4.1.1929) ஆவார்.

இவரும் தனது ஒரு சரீரத்தை நாலைந்து சரீரங்களாக எடுத்துக் கொண்டு ஒரே சமயத்தில் நாலைந்து இடங்களில் காட்சி அளித்துள்ளார் ! சேஷாத்திரி சுவாமிகளுக்கு அநேக பக்தர்கள் உண்டு. அவர்களில் டி.கே.சுந்தரேச ஐயர், ராமாராவ், வெங்கடராம ஐயர் முதலிய நாலைந்து பேர்கள் சேஷாத்ரி சுவாமிகளின் இந்த சித்தியைப் பற்றி அறிய விருப்பம் கொண்டு மாலை 4.45 மணியை ஒரு குறிப்பாக வைத்துக் கொண்டு அதே நேரத்தில் பற்பல தெருக்களில் தனித்தனியாக சுவாமிகளைக் கண்டு களித்தனர்.

**வடலூர் வள்ளலார் சுவாமிகள் வாழ்விலே !**

அண்மையிலே தமிழகத்திலே தோன்றி பெரும் சித்திகளைச் செய்து காட்டி மரணமிலாப்பெரு வாழ்வு வாழ அனைவரையும் அறை கூவியழைத்து 'கடை விரித்தோம்; கொள்வார் இல்லை' என்று உடலுடனேயே மறைந்த ஒப்பற்ற உலக அதிசயமாம் வடலூர் ராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கையில் நடந்த மூன்று சம்பவங்கள் இங்கு குறிப்பிடத்தகுந்தவை ! (பிறப்பு 5.10.1823); உடலுடன் மறைவு;- ஸ்ரீ முக வருடம் தை மாதம் 19ம் நாள் இரவு 12 மணி – 1874ம் வருடம் ஜனவரி மாதம் 30ம் நாள்.

அவரது அணுக்கத் தொண்டர்களுள் ஒருவரான தொழுவூர் வேலாயுதம் முதலியார் எழுதியுள்ள வள்ளலார் வாழ்க்கை வரலாற்றில் 50வது சம்பவமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இது:-

**சித்தரின் வருகை**

மற்றொரு நாள் இரவு கூடலூர் அப்பாசாமி செட்டியாரின் வீட்டினுள்ளிருக்கும் அறை ஒன்றில் ஐயா அவர்கள் (வள்ளலாரை முதலியார் குறிப்பிடும் விதம் இது) தனித்திருக்கின்ற காலத்தில் திடீரென யாரோ ஒரு மனிதர் தங்கு தடையின்றி அவ்வீட்டினுள் பிரவேசித்தார். அதனைக் கண்ட அவ்வீட்டுத் திண்ணையிலிருந்த சிலர் அப்புது மனிதரைப் பின் தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் உள்ளே சென்றதும் முன்னால் சென்ற அந்த மனிதர்

மாயமாய் மறைந்து விட்டார். ஆதலால் இவர்கள், ‘அம்மனிதர் எங்கேயாவது ஒளிந்து கொண்டாரோ’ என்னும் ஐயமுடையவர்களாய் அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையையும் பரிசோதிக்கத் தொடங்கி ஐயா அவர்கள் (வள்ளலார்) இருக்கும் அறை நீங்கலாக மற்றைய அறைகளையும் இடங்களையும் பரிசோதித்தும் அம்மனிதர் புலப்படாது போகவே கடைசியா ஐயா அவர்கள் இருக்கும் அறைக்குச் சென்று அவர்களிடத்தில் இந்த நிகழ்ச்சி முழுவதையும் எடுத்துக் கூற, பெருமனார் புன்னகையோடு அவர்களை நோக்கி, "வந்தவர் மனிதர் அல்ல; அவர் ஒரு சித்தர். அவர் எம்மைக் காணவே இங்கு வந்தார். இந்நேரம் அவர் காசியில் இருப்பார். அவர் கொடுத்துப் போனதே இந்த லட்டு" என்று அவர்களுடைய சந்தேகத்தை விளக்கி அருளினார். அவ்வருள் மொழிகளைக் கேட்ட அன்பர்கள் அனைவரும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**சித்துருக் காட்டினமை!**

75வது சம்பவமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் இது:-

"திருவதிகைக்கு ஐயா அவர்கள் (வள்ளலார்) ஒரு பகல் இறைவழிபாட்டிற்காகச் சென்ற காலத்து தம்மைப் பார்க்க விரும்பிய அன்பர்களது கூட்டம் அதிகமாகி விட்டதை உணர்ந்து, தம்முருவை இரண்டு மூன்று இடங்களில் அன்பர்களுக்கு காட்டி அருள் புரிந்தார்."

**அங்கும் இங்கும் இருந்த அற்புதம்**

79வது சம்பவமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் இது:

சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றவராகிய கூடலூர் தேவநாயகம் பிள்ளை என்பவர் ஒரு கால், தம்முடைய ஒரே புதல்வராகிய ஐயாசாமி என்பவர், அவருடைய 20ம் ஆண்டில் நோய்வாய்ப்பட, வைத்தியர்களால் கைவிடப்பட்ட அக்காலத்தில், நம் பெருமானை நினைத்துக் கொண்டு, "என் ஐயாவே! என் செய்வேன்? எனக்கு வாய்த்த ஒரே மகனை எவ்வாறு பிரிவேன்? ஆண்டவரே! இது தருணம் காக்க கருணை இல்லையா?" என்று பிரார்த்தித்த அந்நள்ளிரவு 11 மணிக்கே நம் ஐயா அவர்கள் கூடலூரிலுள்ள அத் தேவநாயகம் பிள்ளை இல்லத்திற்குச் சென்று, அவருக்கும் அவருடைய புதல்வருக்கும் திருநீறு வழங்கி, "நாளை குணமாகும். பயப்படாதீர்கள்" என்று ஆறுதல் தேறுதல் கூறி மீண்டார். நிற்க, எந்த இரவு கூடலூருக்குச் சென்று தேவநாயகம் பிள்ளை அவர்களின் குமாரரது தீராப் பிணியைத் தீர்த்து வந்தாரோ, அந்த இரவு முழுவதும் சத்திய தரும சாலையிலும் அன்பர்களோடு நம் ஐயா அவர்கள் உபந்நியாசம் செய்திருக்கின்றார்கள். சாலையிலிருந்த அன்பர்களுக்கு சுவாமிகள் செய்த இவ்வற்புதம் தெரியாமல் இருந்தது! பிறகு இதனை தேவநாயகம் பிள்ளையால் அறிந்து, அன்பர்கள் பெரிதும் வியப்புற்றனர்.

**காய வ்யூகம்**

ஹிந்து சாஸ்திரங்களில் வரும் ஒரு சொற்றொடர் "காய வ்யூகம்" ஆகும்.

"காய வ்யூகம்" என்றால் அனேக சரீரம் எடுத்தல் எனப் பொருள்! இது ஒரு வகை சித்தி! இந்த சித்தியைக் கொண்டு ஸௌபரி என்ற மகரிஷி ஐம்பது ராஜகுமாரிகளை மணக்க ஒரே சமயத்தில் தன் தேகத்தை ஐம்பது தேகங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்.

**கிருஷ்ண லீலை**

பாகவதம் கூறும் கிருஷ்ண லீலைகளில் முக்கியமான லீலை, பகவான் கிருஷ்ணர் நூற்றுக்கணக்கான கோபிகைகளுடன் ஒரே சமயத்தில் இருந்ததாகவும், அவர்கள் ஒவ்வொருவரும் தன் அருகிலேயே கிருஷ்ணர் இருப்பதாக எண்ணியதாகவும் விவரிக்கிறது!

இது போன்ற ஏராளமான சம்பவங்களை நமது இதிகாசங்களும், புராணங்களும் விளக்கமாக எடுத்துரைக்கின்றன !

## 7. கிருஷ்ண விஜயம்

நமது இதிஹாச, புராணங்களில் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளில் ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றும் அற்புத லீலையை நிறைய இடங்களில் காணலாம்!

பாகவதத்தில் தசம ஸ்கந்தத்தில் 86வது அத்தியாத்தில் 13 முதல் 59 முடிய உள்ள சுலோகங்களில் கூறப்படும் ஒரு அற்புத சம்பவம் குறிப்பிடத்தகுந்தது.

விதேக தேசத்தில் மிதிலை நகரில் வாழ்ந்து வந்த அந்த நாட்டு மன்னன் பஹுலாஸ்வன் என்பவன் சிறந்த கிருஷ்ண பக்தன். அதே நகரைச் சேர்ந்த அந்தணரான சுருததேவரும் சிறந்த கிருஷ்ண பக்தர்.

ஒரு முறை ஸ்ரீ கிருஷ்ணர் இவர்கள் இருவரின் பரம பக்தியை மெச்சி, தம்முடன் சிறந்த முனிவர்களான நாரதர், வாமதேவர், அத்ரி, வேதவ்யாஸர், பரசுராமர், அஸிதர், ஆருணி, சுகர், பிருஹஸ்பதி, கண்வர், மைத்ரேயர், சியவனர் இன்னும் பலரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவர்கள் இருவரையும் பார்க்க மிதிலை விரைந்தார்.

கிருஷ்ணரின் ரத சாரதியான தாருகன் ரதத்தை ஓட்ட ரதம் நகர் வாயிலை அடைந்தது.

அங்கு ஸ்ரீ கிருஷ்ணரை எதிர் கொண்டழைக்க தயாராக மன்ன்ன் பஹுலாஸ்வனும், அந்தணர் சுருத்தேவரும் நகர் மக்களோடு காத்திருந்தனர். கிருஷ்ணர் நகரை அடைந்தவுடன் இருவரும் அவர் காலில் விழுந்த வணங்கி தம் தம் இல்லத்திற்கு ரிஷிகளுடன் வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

கிருஷ்ணர் இருவரிடமும் 'உங்கள் வீட்டிற்கு வருகிறேன்' என்று கூறினார்!

இரண்டு உருவங்களை எடுத்து ஒரே நேரத்தில் இருவரது வீடுகளுக்கும் சென்றார். ஒருவருக்கு மற்றொருவர் வீட்டிற்கும் அவர் சென்றிருப்பது தெரியாது!

இதை பரிட்சித்திற்கு விவரித்த சுகர், 'சர்வம் விஷ்ணுமயம்' என்ற கருத்தை இந்த லீலை விளக்குவதாகக் கூறுகிறார். பிருந்தாவனத்தில் பசுக்கள் மாயமாக மறைந்த சம்பவத்தில் பிரம்மாவிற்கு ஒரு பாடம் கற்பித்த கிருஷ்ணருக்கு இப்படிப் பல இடங்களில் ஒரே சமயத்தில் தோன்றுவது இயல்பான ஒரு விஷயமாக இருந்தது.

இது போன்ற ஏராளமான சம்பவங்களை, புராணங்கள் விளக்குவதைப் படிப்பதோடு, பாரத தேசத்தில் தோன்றிய எண்ணற்ற மகான்களின் வாழ்க்கையிலும் நேரடியாகக் கண்டு அனுபவித்தோர் ஏராளம்!

இதை அறிவியல் நோக்கில் ஆராயப் புகுந்த விஞ்ஞானிகள் சோதனைச் சாலை முறைப்படி வழி வகை, உண்மைகளைப் பதிவு செய்வது என்ற அறிவியல் நோக்கில் ஆராய்ந்தனர்.

இவற்றை ரிக்கார்டு பூர்வமாகத் தொகுக்கும் முயற்சியில் பல அறிவியல் நிபுணர்கள் ஈடுபட்டனர். கர்னல் ரோசஸ் என்பவரின் (Colonel Rochas) குறிப்புகளே முதன் முதலாகத் தொகுக்கப்பட்ட குறிப்புகளாகும். தனது சோதனையை அவர் நிகழ்த்திப் பார்த்த போது, ஆழ்ந்த ஹிப்னாடிச நிலையில் அவரது யோசனை மூலமாகத் தூண்டிவிடப்பட்டதால் உருவான அலைவட்டங்கள் உடலைச் சுற்றி இடப்பக்கமும் வலப்பக்கமும் குவிந்தன. இறுதியில் அவை ஒன்று கூடி ஒரு ஆவித் தோற்றமாக (Phantasmal enlargement of body) உருப்பெற்றது.

இந்த ஆவி உருவை ஒரு மாக்னடைசர் மூலமாக நீளப்படுத்த முடியும். அது பொருள்களை ஊடுருவிச் செல்லும் தன்மை வாய்ந்ததாக இருந்தது. இதுவே உணர்வின் அடிப்படை இடம் என்று அவர் கண்டு பிடித்தார்.

ஒரு சிற்பி கையில் இருக்கும் மெழுகை அவன் விரும்பிய சிலையாக உருவாக்குவது போல கர்னல் ரோசஸ் தான் சோதனைக்குட்படுத்தியவரை உருப் பெறவிருக்கும் ஆவி உரு அவரது அம்மாவைப் போல ஆக வேண்டும் என்று யோசனையை நினைக்கத் தூண்டியவுடன் அப்படியே அவரது அம்மாவின் உருவம் பெறப்பட்டது.

பாரிஸில் அற்புதமான இந்த சோதனைகளில் ஒன்று நிகழ்த்தப்பட்டதை அனைவரும் பார்த்து வியந்தனர்!

கர்னல் ரோசஸைத் தொடர்ந்து அடுத்தாற்போல ஹெச். டர்வில்லி (H.Durville) தனது சோதனைகளை ஆரம்பித்தார். அவரது சோதனைக்குட்பட்டவர்களுள் இருவரின் பெயர்கள் நினட் (Ninette) மற்றும் மார்த்தா (Martha) ஆகும். தலையிலிருந்து ஆரம்பித்து நெற்றி, தொண்டை, கால் வரை தெளிவான ஒரு உருவை அவரால் சோதனையின் போது காண முடிந்தது. மீடியத்திடமிருந்து இருபது முதல் இருபத்தி நான்கு அங்குல தூரத்தில் இந்த உருவம் காணப்பட்டது.

இந்த உருவம் மீடியத்தின் தொப்புளுடன் ஒரு கொடியால் இணைக்கப்பட்டிருந்தது! ஒளியுடன் கூடியதாக இருந்தது இந்த உருவம்! இந்தச் சோதனைகளின் போது ஆச்சரியப்பட வைக்கும் தகவல்களை அவர்கள் சேகரித்தனர்.

இந்த ஒளி உருவின் எடையையே நிறுத்து விட்டார் அடுத்த ஆராய்ச்சியாளர்களான டாக்டர் மால்டா (Doctor Malta) மற்றும் ஜால்பெர்க் வான் ஜெல்ஸ்ட் (Zaal Berg Van Zelst) ஆகியோர்.

ஒரு சிக்கலான இயந்திரம் மூலம் உடலின் இந்த உருவை சோதனையாளர் தமது எண்ணப்படி பெரிதாகவோ, சிறிதாகவோ ஆக்க முடிவதை அவர்கள் சோதனை மூலம் கண்டறிந்தனர்! பெரிதான உருவம் 126 மிலி மீட்டர் அளவு இருந்தது. அதாவது சோதனையாளரின் கன அளவில் 1/40,000,000 பங்கு (நான்கு கோடியில் ஒரு பங்கு) இருந்தது.

குறைந்த உருவம் 8 மிலி மீட்டர் இருந்தது! கன அளவின்படி பார்த்தால் 1/62,50,000 பங்காக (அறுபத்தி இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரத்தில் ஒரு பங்கு) இருந்தது.

'ஸ்பெசிபிக் எடை' ஹைட்ரஜனை விட லேசாக 12.24 மிலி கிராமாகவும் காற்றை விட 176.5 பங்கு லேசாகவும் இருந்தது!

எண்ணிக்கை அளவின் படி கூற வேண்டுமானால் எடை சரியாக 69.5 கிராம்.

இந்த உருவின் அணுக்கள் அனைத்தும் ஏதோ ஒரு விவரிக்க இயலாத சக்தி மூலம் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த சோதனைகளின் முடிவு ஒரு பக்கம் வந்த வண்ணம் இருக்க அதே சமயம் டாக்டர் டங்கன் மக்டௌகல் (Duncan McDoughall) என்பவர் இறந்து கொண்டிருக்கும் நோயாளிகளின் எடையை எடுக்க ஆரம்பித்தார். அவரது சோதனை முடிவுகள் டாக்டர் மார்டாவின் சோதனை முடிவுகளை உறுதிப்படுத்தின!

நோயாளிகள் இறக்கும் போது அளவு ஸ்கேல் திடீரென்று மேலே போவதை அவர் பார்த்தார்! ஆறு கேஸ்களில் நோயாளியின் எடை இறக்கும் தருணத்தில் 65 கிராம் குறைவது தெளிவாகக் காணப்பட்டது! (அதாவது ஒளி உருவத்தின் எடை இந்த

உடலிலிருந்து நீங்கி விடுகிறது) சில அபூர்வமான, ஆர்வத்தைத் தூண்டும் சோதனைகளை மேலும் நடத்திய கர்னல் ரோசஸ், இந்த 'டபிள்' (மாற்றுரு) ஒவ்வொருவரின் ஏழாவது வயதில் முழுமையை அடைகிறது என்று நம்புகிறார்.

ஒளி உரு (Astral Shape) பிறப்பிற்குச் சிறிது நேரம் முன்னர் உடலில் இணைவதையும், ஒரு பங்கு மட்டுமே சேர்வதையும் அவர் கண்டுபிடித்தார்.

மாக்ஸ்வெல் மிகுந்த உணர்ச்சி மிக்க இளம் பெண்ணை குழந்தை ஒன்றை வளர்க்கும் பொறுப்பை அவள் ஏற்ற நாளிலிருந்து ஆராய ஆரம்பித்தார். குழந்தையின் உடலைச் சுற்றிப் பெரிய ஒளி மிகுந்த உரு ஒன்று இருந்ததை அந்தப் பெண் கண்டார்.

இந்த நிழல் 'உரு' குழந்தையிடமிருந்து தள்ளியே இருந்தது. மெல்ல மெல்ல குழந்தையுடன் இணைந்தது!

14 மாதங்களில் இந்த ஊடுருவல் மூன்றில் இரண்டு பங்கு முடிந்த்து.

**போட்டோ படமும் எடுக்கலாம்**

டாக்டர் ஒகாரோவிச் (Dr. Ochorowicz) ரேடியோகிராபி மூலம் சில சோதனைகளைச் செய்ய ஆரம்பித்தார். 1911ம் ஆண்டு செப்டம்பர் 11ம் தேதி ஈதர் உடலின் கையை அவர் போட்டோ படம் எடுத்தார்!

ஆஸ்ட்ரல் (Astral) பயணம் என்னும் 'ஒளி உருப் பயண' சோதனை, சாதாரணமாக உறங்கப் போகுமுன் ஆரம்பித்து இரவில் யாரைப் பார்ப்பது என்ற முடிவோடு உறங்கச் செல்வது வழக்கம்!

'Phantasms of the living' என்ற நூலில் உள்ள ஒரு சம்பவம் குறிப்பிடத் தகுந்தது.

ஸ்டெயிண்டன் மோஸஸ் (Stainton Moses) என்பவரது அனுபவம் இது:-

"ஒரு நாள், பல மைல் தொலைவில் உள்ள 'இஸட்' (பெயருக்கு பதிலாக 'இஸட்' எனச் சொல்லப்படுகிறது) என்பவரது வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன்.

இப்படி ஒரு சோதனை மூலம் நான் வரப் போவதை அவருக்கு முன் கூட்டியே சொல்லவில்லை.

நள்ளிரவு நேரத்திற்கு முன்பு 'இஸட்' மீது என் எண்ணங்களைக் குவித்தேன். அவரது இல்லம், அதில் உள்ள அக்கறைகள் அனைத்தும் எனக்கு நன்கு பரிச்சயமானவை.

சிறிது நேரத்தில் நன்கு உறங்கி விட்டேன். மறுநாள் காலை எழுந்த போது இரவில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது."

சில நாட்கள் கழித்து இஸட்டைச் சந்தித்த நான் "சனிக்கிழமை இரவில் உனது அறையில் குறிப்பிடத்தகுந்தபடி ஏதேனும் நிகழ்ந்ததா?" என்று வினவினேன்.

'ஆம்' என்று பதிலளித்த அவர், "ஒரு பெரிய சம்பவம் நடந்தது. கணப்பருகே குளிர் காய்ந்தவாறே 'எம்' என்பவரோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தேன்.

பன்னிரெண்டு மணிக்கு அவர் எழுந்து விடை பெற்றுச் சென்றார். மீண்டும் கணப்பருகே வந்து சிகரட் பிடிக்க ஆரம்பித்த போது 'எம்' எழுந்து சென்ற நாற்காலியில் நீ உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன்.

நீ தானா அது என்று உற்றுப் பார்த்த நான், கண்ட காட்சி நிஜம் தானா என்று உறுதிப்படுத்த செய்தித் தாள் ஒன்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

அதை கீழே வைத்த சமயம் கூட நீ அங்கேயே இருந்தாய். நான் உற்றுப் பார்த்தவாறே இருக்க, ஒரு வார்த்தையும் பேசாமல் நீ மறைந்து விட்டாய்."

இப்படிப்பட்ட சோதனைகளை நன்கு விவரிக்கும் இன்னொரு புத்தகம் 'The Projection of Astral Body' என்பதாகும். இதை எழுதியவர் சில்வன் ஜே மல்டூன் (Sylvan J Muldoon) மற்றும் கேரிங்டன் (Carrington) ஆகியோர்.

விசேஷமான சில பயிற்சிகள் இப்படிப்பட்ட 'Out of Body' சோதனைகளுக்குத் தேவை என்று அதில் வலியுறுத்தப்படுகிறது.

பெரிய கடலின் விளிம்பில் இருந்தவாறே அலைகடலின் ஆழத்தைக் கணக்கிட முயல்வது போல இப்படிப்பட்ட சோதனைகள் கடந்த நூறு ஆண்டுகளாக நடந்து கொண்டே இருக்கின்றன !

முடிவுகள் நம்மை அதிசயிக்க வைத்து கொண்டே இருக்கின்றன.

## 8. டெலிபதி

மனித மனத்தின் ஆழத்தை யார் தான் உணர முடியும்?

பிறர் எண்ணும் எண்ணங்களை எல்லோராலும் அறிய முடியுமா? முடிந்திருந்தால் காவியம் ஏது? ராவணனின் எண்ணத்தை அறிந்திருந்தால் சீதா பிராட்டியார் குடிலை விட்டு வெளியே வந்திருக்க வாய்ப்பே இல்லை! இராமாயணம் இருக்காதே!

துரியோதனனின் எண்ணத்தை அறிந்திருந்தால் சூதாட்டத்திற்கு தர்மர் இணங்கியிருக்க மாட்டாரே! மகா பாரதமே தோன்றியிருக்காதே!

மனம் மனதோடு பேச முடியுமா? பிறர் நினைப்பதை உணர முடியுமா?

காலம் காலமாக மனதைப் பற்றி ஆயிரக்கணக்கான கேள்விகள் எழுந்துள்ளன!

மற்றவருடன் மானசீகமாக மனதின் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவியல் இப்போது உணரத் தொடங்கி உள்ளது.

வேத ரிஷிகளும், மகான்களும் முக்காலமும் உணர்ந்தவர்கள் என்று நமது புராணங்கள் கூறுவதோடு அவர்கள் எளிதில் மற்றவர் மனத்தை அறிய வல்லவர்கள் என்றும் உரைக்கின்றன.

'டெலிபதி' என்ற வார்த்தையை முதன் முதலாக 1882ம் ஆண்டில் உருவாக்கியவர் எப்.டபிள்யூ.ஹெச். மையர்ஸ் (F.W.H.Myers) என்பவர்.

எண்ணத்தை இன்னொருவருக்கு அனுப்ப முடியுமா (Thought transference) என்ற ஆராய்ச்சியில் கர்னி (Gurney), சிட்விக் (Sidwick), புரபஸர் பாரட் (Prof. Barret) ஆகியோருடன் இணைந்து மையர்ஸ் ஈடுபட்டார்.

முதன் முதலில் இந்த வார்த்தைக்கு பொருள் சொல்லும் போது, "இருவரது எண்ணங்கள் தற்செயலாக ஒத்துப் போவதோடு அது பற்றிய தேவையான விளக்கத்தையும் உணர்த்துவது டெலிபதி" என்றனர்.

"உணரக்கூடிய புலன்களின் வழியே எண்ணத்தை அனுப்புவது" என்று டெலிபதிக்கு இலக்கணத்தை வரையறுத்தனர். ஒரு மனம் இன்னொரு மனதோடு தொடர்பு கொண்டு ஒருவர் விரும்பிய போதும் அல்லது விரும்பாத போதும் எண்ணங்களை அனுப்புவது; ஒரு மர்மமான தொடர்பு ஆழ்மனதிற்கும் புறமனதிற்கும் இருப்பதோடு, ஒருவரின் ஞாபகத்திலிருந்தோ பல்வேறு சம்பவங்ளை கடந்த் காலத்திலிருந்தோ அல்லது எதிர்காலத்திலிருந்தோ தேர்ந்தெடுக்க முடியும் என்பது இவற்றை டெலிபதி என்ற சொற்றொடர் விளக்க ஆரம்பித்தது.

முதலில் 'ஆவி உலகக் கொள்கைக்கு' டெலிபதி எதிரானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

'டெலிபதிக்கும், எண்ணம் அனுப்புதலுக்கும்' ஒரு வேறுபாட்டை அனைவரும் கூற ஆரம்பித்தனர்.

"டெலிபதி சோதனைக்கு உட்படுத்த முடியாத ஒன்று; ஆனால் எண்ணம் அனுப்புதலோ சோதனைக்கு உட்படுத்தக் கூடியது" என்றனர்

டெலிபதி பிரபஞ்சத்தில் பரவி இருப்பதாக மையர்ஸ் நம்பினார்.

1848-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஒரு சம்பவம் குறிப்பிடத்தகுந்தது:-

"1848ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் தேதி மூல்டான் முற்றுகையின் போது மேஜர் ஜெனரல் 'R' மற்றும் C.B ஆகியோர் போரில் பலத்த காயம் அடைந்தனர். 'ஆர்' தான் இறக்கப்போவதை எண்ணி தனது மோதிரத்தை எடுத்து தனது மனைவிக்கு அனுப்ப வேண்டும் என்று விரும்பினார்.

அதே தருணத்தில் 150 மைல்கள் தள்ளி பெரோஜ்பூரில் இருந்த அவரது மனைவி படுக்கையில் தூங்குவதும் விழிப்பதுமாக இருந்தார்.

தனது கணவன் போர்க்களத்திலிருந்து தூக்கிச் செல்லப்படுவதைக் கண்டதோடு, 'இந்த விரலிலிருந்து மோதிரத்தை எடுத்து என் மனைவிக்கு அனுப்பி விடுங்கள்' என்று கூறும் அவரது குரலையும் தெளிவாகக் கேட்டார்!

இந்தச் சம்பவம் பின்னால் சிறு விஷயம் கூட விடப்படாது சரிபார்க்கப்பட்டது. உளவியல் சங்கத்தின் (Society for Psychical Research) தலைமையகம் ஒவ்வொரு பெயரையும் சரி பார்த்து இது உண்மைதான் என்று கூறியது!

வில்லியம் டி.ஸ்டெட் என்பவர் உயிருள்ளவர்களிடமிருந்தே பல செய்திகளை "ஆடொமேடிக் ரைட்டிங்" என்று கூறப்படும் கையால் "எழுதும் முறையைக்" கையாண்டார்.

ஒரு பெண்மணியிடம் இப்படி ஆடோமேடிக் ரைட்டிங் மூலம் தொடர்பு கொண்ட அவர், ஒரு முறை இப்படி எழுதினார்:-

"பெரிதும் வேதனை அடைந்த, வருத்தகரமான ஒரு செய்தியை உனக்குச் சொல்ல வெட்கப்படுகிறேன். ஹஸ்லமேரை விட்டு பகலில் 2.27 மணிக்கு புறப்பட்ட நான் ரயிலில் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறினேன். அதில் இரண்டு சீமாட்டிகளும் ஒரு ஆசாமியும் இருந்தார்.

ரயில் கிளம்பியவுடன் அவன் என்னை நோக்கி வந்து என் அருகே அமர்ந்தான். எச்சரிக்கை அடைந்த நான் விலகினேன். அவன் நெருங்கி வந்து என்னை முத்தமிட முயன்றான். கோபம் அடைந்த நான், அவனை எதிர்க்க, தொடர்ந்து ஒரு பெரும் போராட்டமே நடந்தது. அவனது குடையைப் பிடித்து இழுத்து அடித்தேன். அது உடைந்து விட்டது. அந்த ஆள் என்னைப் பிடிப்பது நிச்சயம் என்று நினைத்த சமயம் ரயில் அடுத்த ஸ்டேஷனான கில்ட்போர்டை நெருங்கவே வேகத்தைக் குறைத்து மெதுவாகச் செல்ல ஆரம்பித்தது. பயந்து போன அவன் என்னைப் போக விட்டான். ரயில் பிளாட்பாரத்தை அடைந்து நின்றவுடன் அவன் தாவிக் கீழே குதித்து ஓடி விட்டான். கலக்கமுற்ற மனதுடன் நான் நின்றேன். அவனது குடை மட்டும் என்னிடம் இருந்தது."

ஸ்டெட் இந்தச் சம்பவத்தை எழுதிய பின் தனது செயலாளரை அழைத்து அந்தப் பெண்மணிக்கு ஒரு கடிதம் எழுதச் சொன்னார்.

நடந்த சம்பவம் குறித்து வருத்தப்படுவதாகவும் அந்த மனிதனின் குடையை மறந்து விடாமல் புதன்கிழமை கொண்டு வருமாறும் அதில் எழுதியிருந்தார். கடிதத்தைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண்மணி உடனே பதிலை அனுப்பினார்:- உங்களுக்கு இந்த விஷயம் தெரிந்தது குறித்து வேதனை அடைகிறேன். இதை யாருக்கும் சொல்லக் கூடாது என்று உறுதி பூண்டிருந்தேன். அந்த உடைந்த குடையைக் கொண்டு வருகிறேன்.

ஆனால், அந்தக் குடை என்னுடையது. என்னை எதிர்த்த ஆசாமியுடையது இல்லை."

தனக்கு நேர்ந்ததை யாருக்கும் சொல்லக் கூடாது என்று அந்தப் பெண்மணி உறுதி பூண்டிருந்த போதும், டெலிபதி செய்தியைப் பெற முடிந்திருக்கிறது என்றால் ஒருவரது மனதிற்குத் தெரியாமலேயே அது பிறரை அடைய முடியும் என்று ஆகிறது. இந்த டெலிபதி

எப்படி ஏற்படுகிறது என்பதை விஞ்ஞானிகள் ஆராய ஆரம்பித்த புதிதில் "வேவ் தியரி" என்ற ஒன்றைக் கண்டுபிடித்தனர். ஆனால் பின்னால் இது மறுக்கப்பட்டு விட்டது.

**'வேவ் தியரி'**

அறிவியல் முன்னேற்றத்திற்கான பிரிட்டிஷ் அறிவியல் சங்கத்தில் அதன் தலைவரான சர் வில்லியம் க்ரூக்ஸ் (Sir William Crookes) தலைமையுரை ஆற்றுகையில், "டெலிபதி என்று ஒன்று இருக்குமானால் நம்மிடையே இரண்டு பௌதிக உண்மைகள் முன்னே வருகின்றன. 'ஏ' மற்றும் 'பி' இருவரில் முதலாமவர் எண்ணத்தைத் தூண்டுபவராகவும் இரண்டாமவர் எண்ணத்தை ஏற்றுக் கொள்பவராகவும் வைத்துக் கொண்டோமானால் 'ஏ' யின் மூளையில் ஏற்படும் பௌதிக மாற்றமும் அந்தக் கருத்தை ஏற்கும் 'பி' யின் மூளையில் ஏற்படும் பௌதிக மாற்றமும் ஆக இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். இந்த 'தூண்டுவது' மற்றும் 'ஏற்பது' ஆகிய இரண்டு பௌதிக சம்பவத்திற்கு இடையே சில காரணங்கள் இருக்க வேண்டும். அறிவு முன்னேற, வைப்ரேஷன் அல்லது அதிர்வுகள் சக்தி வாய்ந்தவை என்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதோடு எண்ணங்களையும் ஏற்றிச் செல்ல வல்லவை என்று அறிகிறோம்" என்றார்.

எக்ஸ்ரே போல சிறிய ஆம்ப்ளிடியூடனும் அதிக "ப்ரீகவென்ஸி"யையும் கொண்டு ஒன்றுக்கொன்று பாய்வதாக சர் வில்லியம் நம்பினார். இவை முதல்வரின் மூளையில் ஏற்படுத்தும் உருவத்தையே இரண்டாமவரின் மூளையிலும் ஏற்படுத்துகிறது என்றும் அவர் நம்பினார். ஆனால் இது ஏற்கப்படவில்லை.

என்றாலும் மிலன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கஜ்ஜாமலி (Gazzamali), "மனித மூளை சிறிய அலைகளை அதிக ப்ரீக்வென்ஸியுடன் உணர்ச்சிக் கொந்தளிப்பான நேரத்தில் வெளிப்படுத்துகிறது" என்று நிரூபித்தார். யோசனையின் தூண்டுதலால், உணர்ச்சிக் கொந்தளிப்பான நேரத்தில் "செரிப்ரல் ரேடியேஷன்களை" அலைகளாக அவர் போட்டோகிராபிக் பிளேட்டுகளில் பதிவு செய்தார். இந்த அறிக்கைகள் "Reveu Meta Psychique" இதழ்களில் 1925 ஆகஸ்ட் மாதமும், 1927ம் ஆண்டு மார்ச், மே, ஜுலையிலும் வெளிவந்தன.

**வுல்ப் மெஸ்ஸிங்**

இது ஒரு புறமிருக்க வுல்ப் மெஸ்ஸிங் என்னும் பிரபல (சைக்கிக்) உளவியலாளரை மகாத்மா காந்தி, ஐன்ஸ்டீன், சிக்மண்ட் பிராய்டு ஆகியோர் சோதித்து தங்கள் வியப்பைத் தெரிவித்துள்ளனர்!

மனித மனதில் தோன்றும் எண்ணத்தை இன்னொருவரால் கண்டுபிடிக்க முடியும் என்று ஒவ்வொரு முறையும் வுல்ப் மெஸ்ஸிங் நிரூபித்தார்!

**மகாத்மா காந்தியுடன் சந்திப்பு**

1927ல் வுல்ப் மெஸ்ஸிங் இந்தியாவிற்கு வந்தார். மகாத்மா காந்தியைச் சந்தித்தார். சிறிது நேரம் இருவரும் அரசியல் பேசினர். பிறகு மகாத்மா மெஸ்ஸிங்கிடம் சோதனைக்குத் தயாரா என்று கேட்டார்.

மகாத்மா தன் மனம் மூலமாக மெஸ்ஸிங்கிற்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். அதைக் கண்டுபிடித்துச் செயல் படுத்த வேண்டியது மெஸ்ஸிங்கின் பொறுப்பு!

மகாத்மா மெஸ்ஸிங்கிற்கு தன் மனதிற்குள்ளாக கொடுத்த உத்தரவு சிறியது தான்!

"மேஜை மேலிருக்கும் புல்லாங்குழலை எடுத்து அறையில் இருக்கும் யாரிடமேனும் கொடுங்கள்."

மெஸ்ஸிங் உடனே அப்படியே செய்தார்!

பிறகு புல்லாங்குழலை உதடில் வைத்து அற்புதமாக இசைக்க ஆரம்பித்தார்.

திடீரென்று அந்த அறையில் இருந்த ஒரு கூடை நடுங்கி, பின் அசைய ஆரம்பித்தது. ஒரு நாகப்பாம்பு அதனுள்ளிருந்து வெளி வந்து மகுடிக்கு ஏற்ப ஆடியது! இதைப்பார்த்த அனைவரும் வியந்தனர்.

**ஐன்ஸ்டீனின் அழைப்பு**

பிரபல விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இளம் மெஸ்ஸிங்கைத் தனது வீட்டிற்கு அழைத்தார்.

மெஸ்ஸிங் அந்த அறையில் இருந்த புத்தகங்களைப் பார்த்து வியந்து, "எங்கு பார்த்தாலும் புத்தகங்கள்! ஹாலின் முகப்பிலிருந்து எங்கும் ஒரே புத்தகங்கள்!" என்று கூவினார்.

சைக்கோ அனாலிஸிஸின் தந்தை என்று கூறப்படும் சிக்மண்ட் பிராய்டு, ஐன்ஸ்டீனுடன் அறையில் இருந்தார். ஐன்ஸ்டீன் அவரை அறிமுகப்படுத்தினார்.

"இன்னொரு பிறப்பு எனக்கு இருக்குமாகில் சைக்கிக் (Psychic) ஆராய்ச்சியிலேயே அதைச் செலவிடுவேன்" என்று கூறிய சிக்மண்ட் பிராய்டு, மெஸ்ஸிங்கின் அற்புத ஆற்றலைப் பார்த்து வியந்தார். பல தீவிர சோதனைகனை நடத்தினார்.

ஃபிராய்டு, மெஸ்ஸிங்கிற்கு மனதிற்குள்ளாக ஒரு உத்தரவு இட்டார்.

"குளியல் அறைக்குச் சென்று அங்குள்ள அலமாரியிலிருந்த ஒரு ட்வீஸரை (சிறிய கிடுக்கி) எடுங்கள்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அருகே வந்து அவரது மீசையிலிருந்து மூன்று முடியை எடுங்கள்."

மெஸ்ஸிங் நேராக குளியலறை சென்றார். அலமாரியிலிருந்து ட்வீஸரை எடுத்தார். பிறகு ஐன்ஸ்டீன் அருகே வந்து நின்றார்.

அவரிடம் பணிவாகத் தன்னை மன்னிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்!

அவரது நண்பர் இட்ட பணியை விளக்கிக் கூறினார்.

புன்முறுவல் பூத்த ஐன்ஸ்டீன் தன் மீசையைக் காட்ட ஃபிராய்டின் உத்தரவை மெஸ்ஸிங் நிறைவேற்றினார்.

தனது உத்தரவை பிசிறின்றி மெஸ்ஸிங் நிறைவேற்றி விட்டாரே என்று பிராய்டும் சிரித்தார்.

மெஸ்ஸிங்கை ஸ்டாலின் செய்த சோதனைகள் நம்மை பிரமிக்க வைக்கும்.

## 9. டெலிபதி – ஸ்டாலினின் சோதனைகள்!

மக்கள் நிரம்பி இருந்த ஒரு அரங்கத்தில் இரண்டு பச்சை நிற சீருடை அணிந்த சோவியத் போலீஸார் நுழைந்தனர். திடீரென்று அரங்க மேடையில் ஏறிய அவர்கள், "வருந்துகிறோம், காட்சி முடிந்து விட்டது!" என்று கூறினர். கோமல் என்ற அந்த நகர் மக்கள் திகைப்படைந்து பார்த்துக் கொண்டே இருக்க, நிகழ்ச்சியை நடத்தியவர் வுல்ப் மெஸ்ஸிங். டெலிபதி மூலம் பிரபலமானவர். அவரை அழைத்துச் சென்ற போலீஸார், காரை அடையாளம் தெரியாத இடம் நோக்கி ஓட்டினர்.

இது நடந்த ஆண்டு 1940. ரஷியாவில் திடீர் திடீரென போலீஸார் வந்து நினைத்தவரைப் பிடித்து அழைத்துச் செல்லும் காலம். அப்படிப் போலீஸுடன் சென்றவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியதே இல்லை! திரும்பாததற்கு ஒரு காரணமும் தெரிவதும் இல்லை!

"எனது ஹோட்டல் பில் பணத்தை யார் கொடுப்பார்கள்? எனது பெட்டி என்னவாயிற்று?" என்று கேட்டார் மெஸ்ஸிங். ரகசிய போலீஸார், "ஹோட்டல் பில்லைக் கட்டி விட்டோம். உங்கள் பெட்டி இனி உங்களுக்குத் தேவைப்படாது!" என்று கூறி விட்டனர்.

"எங்கோ ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தோம். எந்த இடம் என்று எனக்குத் தெரியாது" என்று ஆரம்பித்த மெஸ்ஸிங் நடந்ததைக் கூறுகிறார்:-

"ஒரு அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டேன். ஒரு ஹோட்டல் அறை போல அது இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து அங்கிருந்து இன்னொரு அறைக்கு அழைத்துக் செல்லப்பட்டேன். மீசையுடன் ஒருவர் உள்ளே வந்தார். வந்தவர் யார் தெரியுமா? ஸ்டாலின்!"

போலாந்தில் என்ன நடக்கிறது. போலாந்தில் உள்ள தலைவர்கள் என்ன திட்டம் தீட்டி உள்ளனர் என்பதை டெலிபதிஸ்ட் மெஸ்ஸிங் மூலம் அறிய விரும்பினார் ஸ்டாலின்! 'ஸைக்கிக் ரீடிங்' எனப்படும் "உள்ளத்தைப் படிப்பது" பற்றிய துறையில் அவர் ஆர்வம் காட்டவில்லை. தனக்குத் தெரிந்த போலிஷ் நண்பர்களைப் பற்றிய தனிப்பட்ட விஷயங்களை அறியவே அந்தச் சந்திப்பில் அவர் விரும்பினார். மெஸ்ஸிங்கின் ஸைக்கிக் சக்தியைச் சோதனை செய்யவும் அவர் விரும்பினார்.

வுல்ப் மெஸ்ஸிங் சாதாரணமானவர் அல்ல; உலகம் முழுவதும் சுற்றியவர். டெலிபதி சம்பந்தமாக அரங்கு நிறைந்த காட்சிகள் ஏராளமானவற்றை நடத்தியவர். ஐன்ஸ்டீன், பிராய்டு, மகாத்மா காந்தி போன்ற மாபெரும் மனிதர்களால் சோதனை செய்யப்பட்டவர்.

மெஸ்ஸிங், ஹிட்லரால் படை எடுக்கப்பட்டிருந்த போலந்தை விட்டு ஓடி வந்து விட்டார். ஹிட்லர் மெஸ்ஸிங்கின் தலைக்கு இரண்டு லட்சம் மார்க் என்று விலை நிர்ணயம் செய்திருந்தார்! முதல் சந்திப்பைத் தொடர்ந்து சர்வாதிகாரி ஸ்டாலினுடன் மேலும் பல சந்திப்புகள் தொடர்ந்தன.

தன்னுடைய எண்ணத்தை அடுத்தவர் மனத்திலே விதைத்தல், மற்றவர் மனதை ஸ்தம்பிக்க வைத்தல், அல்லது தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருதல் போன்ற அனைத்தையும் வுல்ப் மெஸ்ஸிங்கால் செய்ய முடியும் என்பதை ஸ்டாலின் அறிந்திருந்தார்.

### ஸ்டாலினின் கட்டளை

தனது 'ஸைக்கிக்' சக்தி மூலமாக மெஸ்ஸிங், மாஸ்கோ வங்கியில் ஒரு கொள்ளை அடிக்க வேண்டும் என்று ஸ்டாலின் கட்டளை இட்டார். வங்கியில் என்ன நடக்கிறது என்று பார்க்க தனது உதவியாளர்களையும் அனுப்பி வைத்தார்.

ஒரு லட்சம் ரூபிளை 'மாஸ்கோ வங்கியிலிருந்து' எடுத்து வர வேண்டும். இது தான் உத்தரவு. அந்த வங்கியில் யாருக்குமே மெஸ்ஸிங்கைத் தெரியாது.

வங்கியில் நடந்ததை மெஸ்ஸிங் கூறுகிறார்: "நேராக காஷியரிடம் சென்றேன். ஸ்கூல் நோட்புக்கிலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு பேப்பரை அவரிடம் தந்தேன்."

தன் கையிலிருந்த சூட்கேஸை கவுண்டரில் வைத்தார் மெஸ்ஸிங். பிறகு தனது மனம் மூலமாக காஷியர் அந்தப் பெருந்தொகையைத் தர வேண்டும் என்று கட்டளையிட்டார்.

வயதான அந்த காஷியர் பேப்பரைப் பார்த்தார். காஷ் பெட்டியைத் திறந்து ஒரு லட்சம் ரூபிள்களை எடுத்தார். மெஸ்ஸிங் நோட்டுக்களை சூட்கேஸில் அடுக்கினார். அங்கிருந்து கிளம்பினார்.

ஸ்டாலினின் இரண்டு உதவியாளர்களும் அங்கே நடப்பதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் சென்று பணத்தைக் காட்டினார்.

சோதனையில் அவர் வெற்றி பெற்று விட்டதை அவர்கள் உறுதிப்படுத்தினர். பிறகு காஷியரிடம் திரும்பிய மெஸ்ஸிங் அவரிடமிருந்து பெற்ற நோட்டுக்களைத் திரும்பக் கொடுத்தார்! மெஸ்ஸிங்கைப் பார்த்த அவர் ஒன்றும் எழுதாத வெற்றுப் பேப்பரைப் பார்த்தார். அப்படியே "ஹார்ட் அட்டாக்" வந்து மயங்கிக் கீழே விழுந்து விட்டார்!

"நல்ல வேளை, அவர் உயிருக்கு ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை" என்றார் மெஸ்ஸிங்!

**மாளிகையை விட்டு வெளியேறு!**

அடுத்தாற் போல இன்னும் ஒரு கடினமான சோதனையைச் செய்தார் ஸ்டாலின்.

மெஸ்ஸிங் க்ரெம்ளின் மாளிகையின் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டார்.

பாதுகாப்பு வீரர்கள் அடங்கிய மூன்று வெவ்வேறு குழுக்களுக்கு மெஸ்ஸிங்கை வெளியே விடாமல் பாதுகாக்குமாறு உத்தரவு போடப்பட்டது. அவருக்கு வெளியே செல்வதற்கான அட்டை "பாஸ்" தரப்படவில்லை.

"எந்தவித கஷ்டமுமின்றி அந்த வேலையைச் செய்து முடித்தேன்" என்றார் மெஸ்ஸிங்.

"ஆனால் மாளிகையை விட்டு வெளியே வந்தவுடன் என்னை வெளியே அனுமதித்த அதிகாரியைத் திரும்பிப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. மேல் மாடியில் நான் இருந்த அறையின் ஜன்னலை நோக்கி கையை அசைத்தவாறே நடந்தேன்" என்றார் மெஸ்ஸிங்.

**ஸ்டாலின் ஒரு ஆராய்ச்சியாளர்**

ஸ்டாலினைப் பற்றிய ஏராளமான செய்திகள் உலகில் உலவுகின்றன. ஆனால் அவர் ஒரு 'அதீத உளவியல் ஆராய்ச்சியாளர்' என்பது பலருக்கும் தெரியாது! இந்த சம்பவங்கள் வதந்திகள் என்றோ, இரும்புத் திரை நாட்டிலிருந்து 'ஹேஷ்யமாக' வெளி வந்த செய்தி என்றோ, சாதாரணமாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. 'சயின்ஸ் அண்ட் ரெலிஜன்' என்ற ரஷ்யாவின் அதிகாரபூர்வமான பத்திரிகையில் இவை வெளியிடப்பட்டுள்ளன!

"About Myself" என்ற மெஸ்ஸிங்கின் சுயசரிதையில் ஸ்டாலின் அவருக்கு ஏற்படுத்திய சோதனைகள் அனைத்தும் விரிவாக இடம் பெற்றுள்ளன!

ரஷ்ய சென்ஸாருக்குத் தப்பி ரஷ்யாவிலேயே இவை வெளியிடப்பட்டதிலிருந்தே இவரது அதீத உளவியல் சக்தி எவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதை அனைவரும் அறியலாம்!

கம்யூனிஸ்டு விஞ்ஞானிகளும், ஸ்டாலினின் நண்பர்களும் ஸ்டாலினின் பேத்திகளும் ஸ்டாலின் நடத்திய இன்னும் ஒரு சோதனையைப் பற்றிக் கூறி உள்ளார்.

**என்னைச் சந்திக்கவும் – ஸ்டாலினின் கட்டளை**

ஒரு வித 'அனுமதி அட்டை'யும் – Entry Pass இன்றி மெஸ்ஸிங், குண்ட்சேவோ என்ற இடத்தில் இருந்த ஸ்டாலினின் அறைக்குள் நுழைய வேண்டும்! – இதுவே சோதனை!

ஸ்டாலினின் வீட்டைச் சுற்றி ஏராளமான பாதுகாவலர்கள் துப்பாக்கியை ஏந்திய வண்ணம் வலம் வருவர்.

ஸ்டாலினுக்கு அருகிலேயே அவரைக் காக்கவென்றே ஒரு தனிப்படையே உண்டு. அங்கிருந்த அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் ரகசிய போலீஸைச் சேர்ந்தவர்களே.

சில நாட்கள் கழித்து, ஸ்டாலின் தனது அறையில் பேனாவுடன் பல பேப்பர்களைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் சாதாரணமான தோற்றம் உடைய ஒருவர் அந்தக் கட்டிடத்திற்கு வந்தார். ஸ்டாலினின் பாதுகாவலர்கள் அவரைப் பார்த்து மரியாதையுடன் நின்றனர்! உள்ளே இருந்த பணியாளர்களும் அவரை உள்ளே செல்ல அனுமதித்தனர்.

பல அறைகளைக் கடந்த அவர் ஸ்டாலின் படித்துக் கொண்டிருந்த அறைக்கு உள்ளே வந்து நின்றார்.

நிமிர்ந்து பார்த்த ஸ்டாலின் பிரமித்து விட்டார். வுல்ப் மெஸ்ஸிங் அல்லவா அவர் முன் நின்று கொண்டிருக்கிறார்!

எப்படி அவரால் இதைச் செய்ய முடிந்தது?

பாதுகாவலர்களிடமும், பணியாளர்களிடமும் தனது மனம் மூலமாக, "நான் பெரியா, நான் பெரியா" என்று கூறினார் மெஸ்ஸிங்.

லாவரெண்டி பெரியா தான் அந்தக் காலத்தில் ஸ்டாலினின் நம்பிக்கைக்குரிய ஒரே ஆள்! பெரியாவிற்குத் தனி மரியாதை உண்டு. ரகசிய போலீஸ் ஸ்தாபனத்தில் தலைவரான அவர் ஸ்டாலினை அடிக்கடி பார்க்க வருவது வழக்கம்.

சுருட்டை முடி உடைய மெஸ்ஸிங்கின் தோற்றத்திற்கும், பெரியாவின் தோற்றத்திற்கும் சிறிது கூட சம்பந்தம் இல்லை. பெரியா போலத் தோற்றமளிக்க கொஞ்சம் கூட மெஸ்ஸிங் முயலவில்லை!

மாஸ்கோவின் உயர் மட்ட சமுதாயத்தில், ஸ்டாலின், மெஸ்ஸிங் மீது நடத்திய சோதனைகளைப் பற்றிய செய்திகள் பரவின. சிலர் மெஸ்ஸிங்கைப் பயங்கரமான ஆள் என்று கருதினர். ஆனாலும் ஸ்டாலின் அவரை அப்படிக் கருதவில்லை! இறுதியில் ரஷியா முழுவதும் பயணம் செய்ய உயர் அதிகாரிகளிடமிருந்து அவருக்கு அனுமதி வந்தது.

ஸ்டாலின் மட்டுமல்ல, மற்ற பலரும் மெஸ்ஸிங்கின் ஆற்றலை வியந்து பாராட்டி உள்ளனர். ரஷியாவில் நோபல் பரிசு பெற்ற கெமிஸ்ட், டாக்டர் நிகோலெய் செமியோளாப் 'சயின்ஸ் அண்ட் ரெலிஜின்' பத்திரிகையில் 1966 செப்டம்பர் இதழில் "வுல்ப் மெஸ்ஸிங்கின் 'ஸைக்கிக்' சக்தியைப் பற்றி அறிவியல் பூர்வமான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டியது முக்கியமான ஒன்று" என்று எழுதியுள்ளார்.

25 வருட காலம் பிரபலமான அற்புத மனிதராகக் கருதப்பட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த வுல்ப் மெஸ்ஸிங் அறிவியலுக்கு ஒரு பெரும் சவாலாக விளங்கினார்.

மனதின் பெரும் மர்மங்களில் ஒரு சிறிய பகுதியை அவர் காட்டினார்! அதைப் பார்த்தே உலகம் பிரமித்தது!

## 10. டெலிபதி நிபுணர் – மெஸ்ஸிங்கின் அதிசய வாழக்கை

மற்றவர்களின் மனதில் உள்ளது எப்படி உங்களுக்குத் தெரிகிறது என்று மெஸ்ஸிங்கைப் பலமுறை கேட்டதுண்டு. அது குருடர்கள் தேசத்தில் பார்வை என்றால் என்ன என்பதை விளக்குவது போல ஆகும்! உங்களுடைய மூளை அலைகளை இ.இ.ஜி. (E.E.G) மூலமாகப் பதிவு செய்ய முடியும். ஆனால் உங்கள் எண்ணங்களை ஒரு மனிதன் அல்லாது எந்த விதமான கருவியாலும் பதிவு செய்ய இதுவரை முடியவில்லை. ஒரு வேளை எலெக்ட்ரோ மாக்னடிக் பிரதேசம் மூலம் அல்லது இது போன்ற நாம் இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய ஏதேனும் ஒரு வழி மூலமோ டெலிபதி நிகழ்கிறது.

பிரசித்தி பெற்ற அஸ்ட்ரோ பிஸிஸ்டான டாக்டர் நிகோலெய் கோஜிரெவ் டெலிபதி கிராவிடேஷனல் பீல்டுடன் கூட இணைந்து செயல் படலாம் என்று கருதுகிறார்.

"விஞ்ஞானம் டெலிபதியை சித்தர்கள் வேலை என்று சொல்வதை விட்டு விட்டு அது எப்படி நிகழ்கிறது என்று ஆராயப் புக வேண்டும். ஏனெனில் அது நிகழ்கிறதே! சில வருடங்களுக்கு முன்னர் நமக்கு ரேடியோ அலை பற்றி ஒன்றுமே தெரியாது. அதைப் போலவே டெலிபதி இன்னொரு அதிசயத்தை ஏன் கொண்டு வரக் கூடாது? விஞ்ஞானிகள் டெலிபதி நிகழ்வுகள் ஏற்படுகின்றன என்பதை ஏன் உணருவதில்லை அல்லது உணர ஆசைப்படுவதில்லை என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! அது எல்லோருடைய வாழ்விலும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இடைக்காலத்தில் வாழ்ந்த அரிஸ்டாட்டிலின் கொள்கையிலிருந்து விலக மறுத்து, காலம் காலமாக மின்னல் அடித்துக் கொண்டிருந்த போதிலும் மின்சாரம் என்று ஒன்று இருப்பதை நம்ப மறுத்த்தைப் போல அல்லவா இது இருக்கிறது" என்றார் மெஸ்ஸிங்.

ஸ்டாலின் தந்த விசேஷ அனுமதியால் ரஷியாவின் மூலை முடுக்கெல்லாம் அவர் சென்று வந்தார். தனது மானசிக வித்தைகளால் டெலிபதி மூலம் மக்களை பிரமிக்க வைத்தார்.

தனது நிகழ்ச்சிகள் மூலம் பெரும் பணம் ஈட்டி பெரிய பணக்காரராகி விட்டார் மெஸ்ஸிங்! அவர் எவ்வளவு பெரிய பணக்காரராகி விட்டார் தெரியுமா?

தனது சொந்த சம்பாத்தியத்திலிருந்து இரண்டு போர் விமானங்களை வாங்கி, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது சோவியத் விமானப்படைக்கு அவற்றை வழங்கினார்.

அந்த விமானங்களின் வயிற்றுப் பகுதியில் அவரது பெயர் பெரிதாக கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டது. அவற்றைப் பெற்றுக் கொண்ட ரஷிய அதிகாரிகள் விமானங்களின் அருகில் மெஸ்ஸிங்கை நிற்கச் செய்து படம் பிடித்துக் கொள்வதை பெரிய பேறாக எண்ணி மகிழ்ந்தனர்! அந்த புகைப்படங்கள் 1942ல் சோவியத் தினசரிப் பத்திரிகைகள் அனைத்திலும் வெளியாகின.

**மெஸ்ஸிங்கின் வாழ்க்கையே சுவையான ஒரு கதை தான்!**

ரஷியாவின் எல்லையில் வார்ஸாவுக்கு அருகில் கோரா கல்வாரியா என்ற சிறிய நகரில் 1899ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் தேதி மெஸ்ஸிங் பிறந்தார். அதாவது அவர் ஒரு போலந்துக்காரர். அன்றைய நாளில் அது ரஷியாவின் பிடியில் இருந்தது. மெஸ்ஸிங் யூத இனத்தைச் சேர்ந்தவர். குழந்தையாக அவர் இருந்த போது ஷோலாம் அலெய்க்கெய்ம் என்ற பிரபல எழுத்தாளரிடம் அவரைக் காண்பித்தனர். "பிரகாசமான எதிர்காலம் உனக்கு இருக்கிறது" என்று வாழ்த்தினார் அவர். அலெக்கெய்ம் தீர்க்கதரிசன வாக்கை அருளவில்லை என்று பின்னால் கூறிய மெஸ்ஸிங், பார்க்கும் எந்தக் குழந்தையையும் அவர் அப்படி வாழ்த்துவது வழக்கம் என்றார்.

என்றாலும் மெஸ்ஸிங்கின் வாழ்க்கை ஒப்பற்ற, தனித்துவம் வாய்ந்த, அபூர்வமான வாழ்க்கையாக இருந்ததோடு பிரகாசமான புகழ் பெற்ற வாழக்கையாக அமைந்தது!

அவரது குடும்பமோ மிக்க வறுமையான குடும்பம். மதப்பற்று நிறைந்த அக்குடும்பத்தில் அதீதமான நினைவாற்றல் படைத்த மெஸ்ஸிங் தனது ஆறாம் வயதிலேயே 'டால்மூட்' என்ற யூத வேத புத்தகத்தைப் பாராயணம் செய்யும் திறமையைப் பெற்றிருந்தார்.

அவரது தந்தை அவரை 'ரபி' என்று அழைக்கப்படும் யூத மத குருவாக வர வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் மெஸ்ஸிங்கிற்கோ அது பிடிக்காமல், 'அந்த வேத பாடசாலைக்குப் போக மாட்டேன்' என்று அடம் பிடித்து அங்கு போக மறுத்து விட்டார்.

அதற்குப் பிறகு தான் அவரது வாழ்வில் முதல் அற்புதம் நிகழ்ந்தது. ஒரு நாள் அவரது தந்தை அவரை சிகரட் வாங்கி வருமாறு அனுப்பினார். வெளியில் இருள் சூழ ஆரம்பித்த மாலை வேளை, வீட்டின் வாசல் இருண்டு கிடந்தது. திடீரென்று வாசல் படியில் ஒரு பிரம்மாண்டமான கரிய உருவம் வெள்ளை அங்கியை அணிந்து தோன்றியது.

"எனது மகனே! வானிலிருந்து உனக்காக வந்த தூதன் நான்! உன் எதிர்காலத்தை முன் கூட்டியே சொல்ல வந்துள்ளேன்... பாடசாலைக்குப் போ! உனது பிரார்த்தனை சொர்க்கத்திற்கு இன்பம் நல்கும்" என்று பேசியது அந்த உருவம். பின்னர் திடீரென்று காட்சி மறைந்தது.

அந்தக் காட்சியையும் அது ஏற்பட்ட பதிவையும் விளக்கவே முடியாது என்று மெஸ்ஸிங் கூறினார்:

"ஒரு க்ஷணத்தில் மின்னல அடிப்பது போல, இடி இடிப்பது போல அது நிகழ்ந்தது. அப்படியே தரையில் விழுந்து மூர்ச்சையானேன்."

"நான் மயக்கம் தெளிந்து எழுந்த போது எனது தந்தையும், தாயும் என்னருகே எனக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். அவர்களின் கவலை தொனித்த முகங்களைப் பார்த்தேன். நான் தெளிந்து எழுந்தவுடன் தான் அவர்கள் அமைதி அடைந்தனர். எனக்கு என்ன நிகழ்ந்தது என்பதை நான் விவரித்தேன்." நிகழ்ந்ததைக் கேட்ட தந்தை, "அவன் விருப்பம் அதுவாக இருக்கிறது" என்றார். அம்மாவோ மௌனமாக இருந்தார். இதற்குப் பிறகு தினமும் வேத பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தார் மெஸ்ஸிங்.

அனால் தொடர்ந்து இதைச் செய்ய பிடிக்காமல் பதினோராவது வயதில் பதினெட்டு (செண்ட்) காசுகளுடன் சொல்லாமல், கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிவிட்டார் அவர்.

டிக்கட்டில்லாமல் திருட்டு ரயில் பயணம் மேற்கொண்டார் அவர். அந்த ரயில் எங்கே போகிறது என்று அவருக்குத் தெரியாது. டிக்கட் பரிசோதகர் இல்லாத காலி பெட்டி ஒன்றில் ஏறி பெஞ்சுக்கு அடியில் படுத்து ஒளிந்து கொண்டார் அவர். ரயில் ஏதோ ஒரு நிலையத்தில் நின்றது. உள்ளே ஏறிய டிக்கட் பரிசோதகர் ஒருவர் அவரைப் பார்த்தார்.

"தம்பீ! எங்கே உன் டிக்கட்?" என்று பெஞ்சுக்கு அடியில் குனிநத பார்த்து கேட்டார்.

மெஸ்ஸிங் நடுநடுங்கினார். என்ன செய்வதென்று புரியாமல் தனது கால்சட்டை பாக்கட்டிலிருந்து ஒரு துண்டு காகித அட்டையை எடுத்தார். மனம் படபடக்க "இதை டிக்கட்டாக நினைத்துக் கொள்ளுங்கள்" என்று மனம் மூலம் டிக்கட் பரிசோதகரிடம் கூறிக் கொண்டே அந்தத் துண்டு அட்டையைத் தந்தார்.

அதை வாங்கிப் பார்த்த டிக்கட் பரிசோதகர் தம்மை அறியாமலேயே அதை நிஜ டிக்கட் என்று எண்ணி, அதில் ஓட்டையைப் போட்டுத் திருப்பித் தந்து விட்டு, "உன்னிடம் தான் டிக்கட் இருக்கிறதே! ஏன் பெஞ்சின் அடியில் போய் படுத்திருக்கிறாய்! எழுந்து சீட்டின் மீது உட்கார். இன்னும் இரண்டு மணி நேரத்தில் பெர்லின் வந்து விடும்" என்றார்.

முதன் முதலாக தன்னிடம் உள்ள ஒரு அபூர்வ சக்தியை மெஸ்ஸிங் உணர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆரம்பித்து, மெஸ்ஸிங், ஏராளமான தடவைகள் எல்லோரது முன்னிலையிலும் மற்றவர் மனத்தை இருட்டடிப்பு செய்யும் (Cloud Men's Mind) அபூர்வமான தனது மானசீக சக்தியை நிரூபித்துக் காட்டியிருக்கிறார். பெர்லினில் மெஸ்ஸிங்கிற்கு, யூதர்கள் வாழும் பகுதியில் எடுபிடி வேலை ஒன்று கிடைத்தது. ஒரு நாள் மூட்டையை பெர்லினின் புற நகர் பகுதிக்கு எடுத்துச் செல்லும் போது பசியினால் வாடி ஒரு பாலத்திற்கு அடியில் மயக்கம் போட்டு விழுந்தார். உதவியின்றி அனாதை போலக் கிடந்த அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். நாடித் துடிப்பே இல்லை. மூச்சும் நின்று விட்டது! அவரை சவக்கிடங்கிற்கு அனுப்பி விட்டார்கள்.

யாரும் கவனிக்காமல் இருந்திருந்தால் புதைகுழியில் புதைக்கப்பட்டிருப்பார் அவர்.

ஆனால் அவரது அதிர்ஷ்டம், மருத்துவக் கல்லூரி மாணவர் ஒருவர் அவரது நெஞ்சில் இலேசான துடிப்பு இருப்பதைக் கண்டுபிடித்தார்.

உடனே அவர் உயிரை மீட்கும் முயற்சி நடந்தது. முழு உணர்வு வர மெஸ்ஸிங்கிற்கு மூன்று நாட்கள் ஆயின.

டாக்டர் ஏபல் என்னும் சைக்கிரியாட்ரிஸ்ட் அவர உயிரை மீட்டதுமல்லாமல் அவரிடம் இருந்த அபூர்வமான மனோசக்தியையும் உணர்ந்து கண்டுபிடித்துக் கூறினார்.

"அதீத உளவியல் சக்தி உன்னிடம் இருப்பதோடு, சுயமாகவே சமாதி நிலை அடையும் சக்தி உன்னிடம் இருக்கிறது" என்றார் அவர்.

டாக்டர் ஏபல் மெஸ்ஸிங்கிற்கு ஊக்கமூட்டினார். டாக்டர் ஸ்மிட், அவரது மனைவி ஆகியோருடன் ஏபல் மெஸ்ஸிங்கிற்கு டெலிபதி பயிற்சிகளை அளித்தார்.

பிறகு செல்மிஸ்டர் என்ற தரகர் மூலமாக பெர்லினில் மெழுகு பொம்மை கொலு மண்டபத்தில் மெஸ்ஸிங்கிற்கு ஒரு வேலை வாங்கித் தந்தார் அவர். அவர் வாங்கித்தந்த வேலை விசித்திரமான ஒன்று! மெழுகு பொம்மைகளோடு பொம்மையாக ஒரு கண்ணாடி சவப்பெட்டியில் படுத்துக் கொண்டு பிணம் போல மூன்று நாள் அப்படியே இருக்க வேண்டும்! "அதிசய பையனான" மெஸ்ஸிங் வெள்ளிக்கிழமை அன்று அந்தக் கண்ணாடி பெட்டியில் சமாதி நலை எய்தி ஞாயிறு மாலை வரை அப்படியே இருப்பார். இதற்கு சம்பளம் ஒரு நாளைக்கு ஐந்து மார்க்குகள் தாம்!

இப்படி மூன்று மாதம் "பிணமாக" இருக்கும் வேலையைச் செய்தேன் என்றார் மெஸ்ஸிங்.

வேலை இல்லாத மற்ற நான்கு நாட்களில், பிறருடைய மனதில் தோன்றும் எண்ணங்களைக் கண்டறியும் தனது திறமையைக் காட்டுவார். கடை வீதியில் போவோர் என்ன நினைக்கின்றனர் என்பதைக் கவனிப்பார்.

அவர்கள் மனதில் தோன்றும் பிரச்சினைகள் அனைத்தும் மெஸ்ஸிங்கின் மனதில் பளிச் பளிச்செனப் படம் போலக் காட்சி அளிக்கும்! அவற்றிற்கு என்ன தீர்வு, அது எப்போது நடக்கும் என்பதும் அவர் மனதிலே தோன்றும். உடனே சம்பந்தப்பட்ட நபரை அழைத்து அவரது பிரச்சினையையும் அது தீரும் விதம் மற்றும் தேதியையும் கூறுவார் மெஸ்ஸிங்.

சம்பந்தப்பட்டவர் பிரமிப்பார்.

மெதுவாக மெஸ்ஸிங்கின் திறமையை மக்கள் உணரவே அவர் புகழ் உலகெங்கும் பரவ ஆரம்பித்தது. அனைவரும் அவரிடம் "நல் வாக்கு" கேட்பதற்காக வர ஆரம்பித்தனர்.

## 11. உலகம் வியந்த மெஸ்ஸிங்

மெஸ்ஸிங்கிற்கு வந்த சன்மானங்கள் அவரைப் பள்ளிக்கூடம் போகாமல் படிப்பை விட்ட குறையைத் தீர்க்க உதவியது. ஒரு ஆசிரியரிடம் போய்ப் படிப்பை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். விடாமல் முழு மூச்சுடன் ஓய்வு ஒழிவின்றிப் படித்தார்.

பெர்லினில் உள்ள விண்டர்கார்டன் என்ற காட்சியகத்தில் அவருக்கு அடுத்த வேலை கிடைத்தது. இந்த முறை அவர் ஒரு பக்கிரி வேஷம் போட்டார்! உடம்பெல்லாம் அலகு அதாவது ஊசிகளைக் குத்திக் கொண்டு தனது உடலில் எந்த பாகத்தையும் நினைத்த நேரத்தில் 'மரக்க' வைக்க முடியும் (anesthetize) என்று நிரூபித்தார்! மார்பிலே ஏராளமான ஊசிகள் குத்தப்பட்ட போதும் ஒருவித வலியும் இன்றி சாதாரணமாக இருந்தார்.

அடுத்தாற் போல 'அற்புத டிடெக்டிவாக' காணாமல் போன நகைகள், ஒளித்து வைக்கப்பட்ட பொருள்களை பார்வையாளர்கள் எதிரிலேயே கண்டுபிடித்தார். போர் நடந்து கொண்டிருந்த போதும், வியன்னாவில் கூட பல காட்சிகளை நடத்தினார் மெஸ்ஸிங். அந்த சீஸனின் முத்திரை நட்சத்திரமாக ஆகிவிட்டார் அவர். பதினாறே வயதான மெஸ்ஸிங் வியன்னாவில் மானசிக சக்தியின் அற்புத நிகழ்ச்சிகளை நடத்தியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அங்கே தான் ஐன்ஸ்டினுக்கும், ஃப்ராய்டுக்கும் எதிரே அவர் நடத்திக் காட்டிய நிகழ்ச்சிகள் பரபரப்பூட்டின!

தனது அதீத மானச சக்திகளைச் செய்து காட்டியவாறே பத்து ஆண்டுகள் உலகெங்கும் சுற்றினார் மெஸ்ஸிங். ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, பிரேஜில், ஜப்பான், அர்ஜெண்டினா, லண்டன், பாரிஸ், ரோம், ஸ்டாக்ஹோம், ஜெனிவா என்று எந்த இடத்தையும் விட்டு வைக்கவில்லை அவர்.

காணாமல் போன பொருள்களைக் கண்டுபிடிக்க மெஸ்ஸிங்கை அனைவரும் கூப்பிட்டனர். ஒரு முக்கியமான கேஸை போலந்தின் பெரிய செல்வந்தரான கவுண்ட் ஜார்ட்டோரிஸ்கிக்காக (Count Czartoryski) அவர் கண்டுபிடித்தார். பெரும் செல்வந்தரான அவரது வீட்டில் குடும்ப நகைகள் காணாமல் போய் விட்டன. அதன் மதிப்பு சுமார் எட்டு லட்சம் ஜிலாடிஸ் (போலந்து நாணயம்) ஆகும். இதைக் கண்டு பிடித்தால் இரண்டரை லட்சம் ஜிலாடிஸ் சன்மானம் தருவதாக செலவந்தர் கூறினார்.

போலீசும், துப்பறியும் நிபுணர்களும் பல மாதங்கள் முயன்றும் இந்த நகைகளைக் கண்டுபிடித்தபாடில்லை!

இந்த நிலையில் மெஸ்ஸிங் செல்வந்தரின் பிரத்யேகமான விமானத்தல் அவரது கோட்டைக்குப் பறந்து சென்றார். நேராக நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடம் நோக்கி அவர் நடந்தார்!

செல்வந்தரது வீட்டு வேலைக்காரனது குழந்தை விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு விரைந்த மெஸ்ஸிங், அங்கு குழந்தை விளையாடிய கரடி பொம்மை ஒன்றை எடுத்தார். பஞ்சால் ஆன அந்த பொம்மையைக் கிழிக்கவே, உள்ளே இருந்து பளபளப்பான கண்ணாடித் துண்டுகளும், கோலிகளும் வெளியே விழுந்தன. அவற்றுடன் எட்டு லட்சம் ஜிலாடிஸ் மதிப்புள்ள நகைகளும் விழுந்தன! பளபளப்பான அனைத்து பொருட்களின் மீதும் ஆசைப்பட்ட குழந்தை நகைகளையும் எடுத்து கரடி பொம்மைக்குள் போட்டிருந்தது. செல்வந்தர் காணாமல் போன குடும்ப நகைகள் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் வாக்களித்த இரண்டரை லட்சம் ஜிலாடிற்கும் மேலாக சன்மானமாகத் தர முன் வந்தார். ஆனால் மெஸ்ஸிங்கோ ஒரு காசு கூட வாங்க மாட்டேன் என்று கூறிவிட்டார்! தமது யூத இனத்தவருக்கு மட்டும் உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் போலந்து நாடாளுமன்றத்தில் யூதக் குடிமக்களுக்குத் தீங்கு பயக்கும் விதத்தில் அவர்கள் உரிமைகளைப் பறிக்க வகை செய்யும் ஒரு மசோதா

வரவிருந்தது. அதைத் தனது செல்வாக்கு மூலமாக நீக்க உதவுமாறு கேட்டுக் கொண்டார் மெஸ்ஸிங். செல்வந்தரும் மெஸ்ஸிங்கின் வேண்டுகோளை ஏற்று அந்த மசோதாவை தள்ளுபடி செய்யச் செய்தார். இப்படி பொதுமக்களின் நன்மைக்காக தன்னால் முடிந்த அனைத்தையும் அவர் செய்தார்.

மெஸ்ஸிங்கிற்கு ஆவி விஷயத்திலும் ஈடுபாடு உண்டு. அதன் பலனாக தனது மானசீக சக்தி மேலும் வளர்ச்சியுற்றிருக்கிறது என்று கூறிய அவர், "நான் சித்தர்கள் (Mystics) கூட்டத்தைச் சேர்ந்தவன். என்றாலும் நான் ஒரு நாஸ்திகன்" என்று கூறினார். அந்த காலத்தில் ஆவி விஷயம் பற்றிய ஆராய்ச்சியில் உலகமே மூழ்கிக் கிடந்தது.

மெஸ்ஸிங் பலவித ஆவிகளையும் வரவழைத்தார்! கரும்பலகையில் சாக்பீஸால் ஆவிகள் செய்திகளை எழுதின. சிலர் கிதார் வாசிக்கும் ஆவிகளையும் அழைக்கக் கூறவே அவைகளையும் அழைத்தார் அவர்! போலந்தின் பிரசித்தி பெற்ற மீடியமான ஜன் குசிக் (Jan Gusik) என்பவர் மெஸ்ஸிங்குடன் இருக்கும் போது அவரது விருப்பத்திற்கு இணங்க நெப்போலியன், மாவீரன் அலெக்ஸாண்டர் ஆகியோரது ஆவிகளையும் அழைத்தார் அவர்!

இயல்பாகவே இரக்க சுபாவம் கொண்ட மெஸ்ஸிங் மக்களின் துன்பத்தைக் கண்டு இளகி விடுவார்.

"துயரங்களை அனுபவிக்கும் இவர்களுக்காக எனது சக்தியை உபயோகிக்க எப்போதுமே நான் தயாராக இருந்தேன்" என்றார் அவர்.

தனது மானசீக சக்தி மூலம் மற்றவர்களின் மனதில் எண்ணங்களை விதைப்பதில் கை தேர்ந்தவர் என்பதால், தற்கொலை செய்து கொள்ள எண்ணிய பலரின் மனதையும் மாற்றி அவர்களின் மனதில் உத்வேகத்தை மூட்டினார். நம்பிக்கை, தைரியம், வலிமை ஆகிய குணங்களை அளிக்கும் எண்ணங்களை தற்கொலை செய்யவிருந்தோரின் மனதிலே விதைத்து அவர்களைக் காப்பாற்றினேன் என்றார் அவர். தனது உலகப் பயணத்தின் போது மெஸ்ஸிங் மானசீக சக்தி வாய்ந்த இதரர்களை ஆராயவும் செய்ததோடு, அதில் மோசடிப் பேர்வழிகளையும் இனம் கண்டு உலகிற்கு அறிவித்தார். வார்ஸாவில் ஒரு பக்கிரி, வித்தை ஒன்றை செய்ய ஆரம்பித்தார். நாற்காலியில் அசையாமல் சமாதியில் இருப்பது போலக் கிடந்த அவரின் இருதயத் துடிப்பை டாக்டர்கள் சோதித்தனர். இதயத் துடிப்பே இல்லை! சமாதி எய்தி விட்ட நிலையில் இருப்பது போலவே இருந்தது.

"ஆனால் எனக்கு இது சமாதி இல்லை என்று நன்கு தெரியும். நான் எனது டாக்டரை பக்கிரியின் அருகிலே போகுமாறு பணித்தேன்.

ஒரு இரும்பு உறையைத் தன் மேல் வைத்து அதன் மூலம் தன் மீது இன்னொரு மனிதனை வைத்து அவர் எடையைத் தாங்கும்படி செய்திருந்தார் அவர். இரண்டு இரும்பு உருளைகள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை கக்கத்தில் வைத்து தற்காலிகமாக ரத்த ஓட்டத்தை நிறுத்தி நாடித் துடிப்பை நிறுத்தி இருந்தார் அவர்."

சமாதி நிலை அடைந்ததாகக் கூறுவோரிடம் எல்லாம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் செய்து அவர்கள் மோசடியை அம்பலமாக்கியதால் உண்மையான மானசிக சக்தி படைத்தவர்களையும் அவர்களால் நம்ப முடியாமல் போனது!

அறிவியலின் பட்சபாதமற்ற ஆராய்ச்சி ஒரு புறமிருக்க, மோசடிப் பேர்வழிகளை அம்பலப்படுத்த தீவிரமாக பாடுபட்டார் மெஸ்ஸிங். ஏராளமான விஞ்ஞானிகள் அவரை சோதனைக்கு உட்படுத்தினர். அதையெல்லாம் ஏற்றார் அவர்.

உல்ப் மெஸ்ஸிங் உண்மையிலேயே அதி மானசிக சக்தி படைத்தவர் தானா?

அவரது சுயசரிதைகளைப் படித்துக் குறிப்பிட்ட சோவியத் நிபுணர் லூட்மிலா ஸ்விங்கா ஜைலன்ஸ்கி, "அப்போது ரஷியாவில் இருந்த கடுமையான கட்டுப்பாடுகளின் போதும் மெஸ்ஸிங் பலரது சோதனைகளுக்கும், விமரிசனங்களுக்கும் தணிக்கைகளுக்கும் மீறி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டி இருந்தது.

ஆகவே மோசடி செய்து சுலபமாக தப்புவதற்கு அவருக்கு வழியே இல்லை! இப்படிப்பட்ட கடுமையான சூழ் நிலையில் அவர் பல காலம் வாழ்ந்து நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியதன் மூலமே அவர் உண்மையானவர் தாம் என்று நம்ப வேண்டி இருக்கிறது" என்றார்.

டெலிபதி மூலம் மற்றவரின் மனதைத் தடுமாறச் செய்யும் அபூர்வ சக்தியும் மெஸ்ஸிங்கிற்கு இருந்தது. அவரது சுய சரிதையில் கூறப்படாத இன்னொரு விஷயமும் உண்டு.

தீர்க்க தரிசனமாக எதிர்காலம் பற்றி அவர் கூறிய விஷயங்கள் தாம் அவை! கம்யூனிஸ்டு ரஷியாவில் எதிர்காலம் பற்றிய ஜோஸ்ய கூற்றுகள் தடை செய்யப்பட்டிருந்தன!

1940ல் சோவியத் – ஜெர்மன் உறவுகள் சீர் கெடாது இருந்தது. 1939ல் தான் ஸ்டாலின், ஹிட்லருடன் ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்ற இரு தேச உடன்படிக்கை ஒன்றை செய்திருந்தார்!

ஆனாலும் 1940லேயே "ரஷ்யாவின் டாங்கிகள் பெர்லினை நோக்கிச் செல்லும்!" என்று மெஸ்ஸிங் மாஸ்கோ கிளப் ஒன்றில் தன் நண்பர்களிடையே கூறினார்.

இந்த செய்தி பரவவே, பெரிய பரபரப்பை ஏற்படுத்தி விட்டது! நல்ல வேளை, ஸ்டாலின் இதை பெரிது படுத்தவில்லை! என்றாலும் ஜெர்மன் தூதரகம் இதை அறிந்து இதற்கு கடும் ஆட்சேபணை தெரிவித்தது.

ஏனெனில் ஹிட்லருக்கு மெஸ்ஸிங்கை கண்டாலே பிடிக்காது! அவரது சாவு பற்றிய ஜோசிய கூற்றை மெஸ்ஸிங் கூறியிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை!

இறுதியாக சோவியத் தூதரகம், எதிர்காலம் பற்றிய ஜோஸியர்களின் கூற்றுக்கெல்லாம் ரஷிய தூதரகம் பதில் கூறிக் கொண்டிருக்க முடியாது என்று கூறி விவாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்தது!

## 12. மென்டல் ரேடியோ !

உலகையே வியக்க வைத்த வுல்ப் மெஸ்ஸிங்கின் ஆற்றல் ஒரு புறம் இருக்க டெலிபதியில் குறிப்பிடத் தகுந்த ஒரு அதிக மானசிக சக்தி படைத்த இன்னொருவரைக் குறிப்பிடலாம். அவரது பெயர் மேரி க்ரெய்க் சிங்க்ளேர்.

அப்டன் சிங்க்ளேர் (Upton Sinclair) என்ற அமெரிக்க நாவலாசிரியரின் மனைவி இவர்.

மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத பல விஷயங்களை துணிச்சலுடன் கூறி அந்த விஷயங்களுக்காகப் பாடுபட்ட முன்னோடியான அப்டன் சிங்க்ளேர் 1930ல் ஒரு அற்புதமான நூலை எழுதி வெளியிட்டார்.

'MENTAL RADIO: DOES IT WORK AND HOW?' – "மனம் என்னும் ரேடியோ; அது வேலை செய்கிறதா? எப்படி?" என்ற அவரது புகழ் பெற்ற நூல் டெலிபதியின் பல பரிமாணங்களை விளக்குகிறது.

இந்த நூலின் ஆங்கிலப்பதிவுக்கு பேராசிரியர் வில்லியம் மக்டௌகல் அறிமுக உரை எழுதினார். ஜெர்மன் பதிப்பிற்கு ஐன்ஸ்டீன் முன்னுரை எழுதினார்.

### மேரி சிங்க்ளேரின் அபூர்வ ஆற்றல்

மேரி சிங்க்ளேர் அதிமானசிக சக்தி படைத்தவர். தன்னுடன் நெருக்கமான நட்பு கொண்ட பலபேர் இறந்ததன் பின்னர் தனக்குள்ள அசாதாரணமான சக்தியை அவர் உணர்ந்தார்.

போலாந்தைச் சேர்ந்த ஜன் என்பவரது தொடர்பால் இந்த சக்தி மேலும் வலுவடைந்தது. ஜன் (Jan) இந்தியாவிற்கு வந்து யோகம் பயின்றவர். இந்திய சித்தர்களின் ஆற்றலைப் போல சில சித்திகளைச் செய்து காண்பிக்க வல்லவர். இவர் சில காலம் சிங்க்ளேர் வீட்டில் தங்கி இருந்தார்.

தனது மனைவியின் அதீத சக்தியால் அப்டனே பல சமயம் எரிச்சல் அடைந்திருக்கிறார்! விழித்திருக்கும் போதும், கனவு நிலையிலும் மேரி சிங்க்ளேர் தனது கணவர் செல்லும் இடத்திற்கெல்லாம் சென்று அங்கங்கே நடப்பதைக் கண்டு கூறி விடுவார். முதலில் மிகுந்த எரிச்சல் அடைந்து வந்த அப்டன், இறுதியில் இதை ஆராயப் புகுந்தார்.

தனது மனதிற்குத் தோன்றிய ஏதேனும் ஆறு படங்களை சோதனைக்காக வரைவது அவர் வழக்கம். இவற்றை மடித்து வைத்து விடுவார். மேரி சிங்க்ளேர் இவற்றை ஒன்றன் பின் ஒன்றாக எடுப்பார். அதைத் தொட்டுத் தன் எண்ணத்தைச் சொல்வார்; அல்லது தாம் உணர்வதை வரைந்து விடுவார்.

இதில் ஆச்சரியப்படத் தகுந்த விஷயம் என்னவென்றால் பல சமயம் முதல் படத்தைப் பற்றிச் சொல்லி முடிப்பதற்கு முன்பே இரண்டாவது படம் அவர் மனதில் தோன்றி விடும்!

எடுத்துக்காட்டாக கழுத்தில் கட்டும் டையின் படத்தைப் பார்க்கும் போதே, அதன் நுனியிலிருந்து புகை கிளம்புவது போல் உள்ள அடுத்த படம் அவருக்குத் தோன்றிவிடும்1 அடுத்த பொருளாக எரிகின்ற தீக்குச்சி தெரியும்.

இதையெல்லாம் ஆராய்ந்து வியந்த சிங்க்ளேர் எழுதினார். "டெலிபதியை விட மேலான ஏதோ ஒன்றும் இருக்கிறது! ஏனெனில் கவரிலிருந்து என்ன படத்தை எடுத்தோம் என்று எந்த மனிதரின் மனமும் உணரவே முடியாது. மேரியின் மனம் தான் ஒரு சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம் என்றும் உணர முடியாது. சூப்பர் மனித மனம் ஒன்று இருக்க

வேண்டும் அல்லது நாம் சாதாரணமாக (கண்களால்) பார்ப்பதை விட வேறு ஏதோ ஒன்றால் பார்க்கும் முறை ஒன்று இருக்க வேண்டும்!"

சிங்க்ளேரின் சோதனைகளை 'THE SINCLAIR EXPERIMENTS: DEMONSTRATING TELEPATHY' என்று டாக்டர் டபிள்யூ.பிராங்க்ளின் பிரின்ஸ் ஒரு நூலாக வெளியிட்டார்.

**பிரபஞ்ச மனம்**

தனி மனிதனின் மனத்திற்கு மேலான "பிரபஞ்ச மனம்" என்று ஒன்று இருப்பதாக சிங்க்ளேர் நம்பினார். "இந்த பிரபஞ்ச மனத்திலிருந்து உருவாகும் நாம், அங்கேயே போய்ச் சேர்கிறோம் என்று ஏன் இருக்கக் கூடாது?" என்று அவர் வினவினார்.

COLLECTIVE CONSCIOUSNESS என்ற அவரது வார்த்தைகள் 1920லேயே எழுதப்பட்டன. இதே வார்த்தைகளை கார்ல் ஜங் தனது ஆய்வின் மூலம் கண்டு பிடித்து பின்னால் கூறினார்.

'மென்டல் ரேடியோ' நூலின் பதினெட்டாம் அத்தியாத்தில் தன்னால் எப்படி இந்த நிலையைப் பெற முடிந்தது என்பதை மேரி சிங்க்ளேர் விளக்கி உள்ளார்.

நல்ல ஒரு முனைப்புள்ள நிலை முதலாவதாக வேண்டும் என்கிறார் இவர்.

ஏதோ ஒன்றை நினைத்து ஒரு முனைப்பு நிலையை ஏற்படுத்த வேண்டும். மனம் விழிப்புடன் இருக்கும் ஒரு உயரிய நிலையை எய்த வேண்டும். அதே சமயத்தில் நல்ல ஓய்வான, (ரிலாக்ஸான) நிலையில் இருத்தல் வேண்டும். இந்த ஓய்வு பெற்ற தளர்வான நிலை 'தூக்கம் போன்ற' நிலையைக் கொண்டு வந்து விடும். இந்த நிலை வரும் போது, டெலிபதி தானாக வர ஆரம்பிக்கிறது.

மெதுவாக உயரிய இந்த நிலையை அடையும் போது, தானாக நமக்குள் மறைந்திருக்கும் சக்திகள் வெளிப்பட ஆரம்பிக்கின்றன.

**ப்ளேபேரின் ஆராய்ச்சி**

இதே போன்ற நிலையை உணர்ந்த இன்னொரு சைக்கிக் ஆராய்ச்சியாளர் கை ப்ளேபேர் (Guy Playfair) என்பவராவார். (இருபதாம் நூற்றாண்டில்) எழுபதுகளின் ஆரம்பத்தில் ரியோடி ஜெனிரோவில் இந்த அதீத மன ஆற்றலில் தற்செயலாக ஈடுபட்டார் அவர். இரவு நேரம் மிகுந்த புழுக்கமாக இருந்ததால் அவரால் உறங்கவே முடியவில்லை. அப்போது "பார்டர் லைன்" (Border Line) நிலை எனப்படும் உறக்கம் வந்தும் வராத நிலைநை அவர் அடைவது வழக்கம். அந்த நிலை வந்தவுடனேயே அவருக்குப் பல காட்சிகள் தெரிய ஆரம்பித்து விடும்.

மாயத் திரை ஒன்றில் கலர் சிலைடுகள் காண்பிக்கப்படுவது போல அவர் கண்களை மூடியவுடன் திரையில் காட்சிகள் ஓட ஆரம்பிக்கும்.

ஒவ்வொரு நாள் இரவும் இந்த 'சிலைடு ஷோ' தவறாமல் வந்து விடும்.

பல நாட்கள் அனுபவத்திற்குப் பின்னர் நீல வண்ணத்தை நினைப்பது இந்த நிலையை அடைவதற்கு மிக்க அனுகூலமானது என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

டெலிபதியைத் தூண்ட ஆராய்ச்சியாளர்கள் இதே முறையைக் கையாளுவதைப் பின்னால் அவர் தெரிந்து கொண்டார்.

**ப்ளேபேரின் சோதனை !**

கேம்ப்ரிட்ஜில் உள்ள ஆராய்ச்சியாளர் டாக்டர் கார்ல் சார்ஜண்ட்டுடன் இணைந்து பல சோதனைகளில் அவர் ஈடுபட்டார். ஒரு நாள் லண்டனிலிருந்து திரும்பி வரும் போது நள்ளிரவில் டெலிபதி சோதனை செய்ய அவரும் சார்ஜெண்டும் முடிவு செய்தனர்.

அன்று இரவு படுக்கையில் படுத்ததும் மனதில் "வெறுமை சூழ்நிலையை" உருவாக்கிக் காத்திருந்தார். திடீரென்று அவர் ஒரு "காட்சியைப்" பார்த்தார். பீடம் ஒன்றில் தலையைச் சுற்றி ஒளியுடன் கூடிய ஒரு உருவத்தை அவர் கண்டார். முதலில் மாசேதுங்கின் சிலை அது என்று நினைத்தார் ப்ளேபேர். அடுத்த நாள் சார்ஜெண்டைச் சந்தித்த ப்ளேபேர் எந்தப் படத்தை டெலிபதி மூலம் அவர் "அனுப்ப" முயற்சி செய்தார் என்று கேட்டார்.

இதற்கு பதிலாக வில்லியம் ப்ளேக்கின் மகிழ்ச்சி தினம் (Glad Day) என்ற படத்தை அனுப்ப முயன்றதாக சார்ஜென்ட் கூறினார்.

அந்தப் படத்தில் பாறை ஒன்றின் மீது கைகளை விரித்த நிலையில் ஒரு மனிதன் ஒளி வட்டம் சூழ்ந்திருக்கும் தலையுடன் நின்றிருப்பது சித்தரிக்கப்பட்டிருந்தது.

ப்ளேபேரின் டெலிபதி சோதனை வெற்றிகரமாக முடிந்தது !

பின்னால், ப்ளேபேர் அரங்கம் நிறைந்திருந்த மக்களிடையே டெலிபதி சோதனையை நடத்த விரும்பினார். முதலில் "உஸ்" ஸென்ற சப்தம் மூலம் அறையை நிரப்பினார். தனது "ஆடியன்ஸை" ரிலாக்ஸாக இருக்கும் படி கூறினார் அவர். உறக்கம் வந்தால் உறங்கும் படியும் கூறினார். பிறகு படங்கள் உள்ள நான்கு கார்டுகளிலிருந்து ஒரு கார்டை எடுத்து திரை ஒன்றிற்கு பின்னால் அமர்ந்து அதை "ஒளி பரப்ப" முயற்சி செய்தார்.

"சாட்ஸ்வொர்த் ஹவுஸ்" என்ற அந்தப் படத்தை ஆழ்ந்து உற்றுப் பார்த்துவிட்டு, "கோட்டை, பாலம், நதி, மரங்கள்" என்ற வார்த்தைகளைத் திருப்பி திருப்பிக் கூறினார் அவர்.

இறுதியில் அரங்கத்தில் குழுமி இருந்தோரிடம் அவர்கள் எதைப் பார்த்தார்கள் என்று கேட்டார்.

முதலில் வந்த பதில்கள் நதி, மரங்கள், பாலம் என்று இருந்தன.

பிறகு நான்கு கார்டுகளையும் அரங்கத்தில் சுற்றுக்கு விட்டு நான்கில் எதைப் பார்த்தீர்கள் என்று கேட்டார். சாட்ஸ்வொர்த் ஹவுஸுக்கு 35 விழுக்காடு வோட் விழுந்தது. அடுத்து ப்ளெமிஷ் சித்திரம் ஒன்றுக்கு கோட்டையையும் மரங்களையும் சித்தரித்த படம் – 25 விழுக்காடு வோட் விழுந்தது. அடுத்த இரு படங்கள் 10, 12 விழுக்காடு பெற்றன.

இதிலிருந்து ஒவ்வொருவருக்கும் 'டெலிபதி சக்தி' இருக்கிறது என்பதை நிரூபித்த அவர் ரிலாக்ஸாக இருக்கும் போது டெலிபதி செயல்படுகிறது என்றும் வலியுறுத்தினார்.

## 13. தூர திருஷ்டி

டெலிபதி பற்றிய அறிவியல் ஆராய்ச்சியில் அப்டன் சிங்க்ளேருக்குத் தனி இடம் உண்டு. இவருடன் இந்த ஆராய்ச்சியில் முன்னோடியாக இருந்த இன்னொருவர் பிரான்ஸ் நாட்டு இன்ஜினியரான ரெனே வார்காலியர் (Rene Warcollier) ஆவார். 1930ல் அப்டன் சிங்க்ளேரின் ஆராய்ச்சிகள் 'மென்டல் ரேடியோ' (Mental Radio) என்ற நூலாக வெளி வந்த்த்தைத் தொடர்ந்து, 1948ல் 'மைண்ட் டு மைண்ட்' (Mind to Mind) என்ற பிரமிக்க வைக்கும் நூலை ரெனே வார்காலியர் வெளியிட்டார். இதில் 'டெலிபதியை' அடைவதற்காக என்னென்ன திறமைகள் வேண்டும், அதை எப்படிக் கற்பது என்ற விவரங்கள் உள்ளன.

இந்த இரு புத்தகங்களை முன்னோடியாகக் கொண்டு அமெரிக்காவும் ரஷியாவும் தீவிர ஆராய்ச்சிகளை ஆரம்பித்தன. முக்கியமான தொலை தூரங்களில் என்ன நடக்கிறது, மற்றவர்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய இந்த இரு நாடுகளும் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிழித்து வருகின்றன.

முக்கியமான ராணுவ முடிவுகளுக்கும், இதர முடிவுகளை எடுக்கவும் இந்த இரு நாடுகளும் துடிக்கின்றன.

'நாஸா' எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆய்வுக் கழகம் பல கோடி டாலரை இத்துறைக்காக ஒதுக்கி இதில் பல நிபுணர்களை ஈடுபடுத்தி ஆராயத் தூண்டியது.

இந்தத் துறையில் குறிப்பிடத்தகுந்த இருவர் ரஸ்ஸல் டார்க் மற்றும் கெய்த் ஹராரி ஆவர். (Russel Tark and Keith Harary).

அமெரிக்காவில் இன்று இத்துறையில் அடைந்த வெற்றிகள் யாவை என்பதை விரிவாக இவர்கள் எழுதி வருகின்றனர்.

இவர்கள் தூர திருஷ்டி என்று நாம் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பேசி வந்ததை 'Remote Viewing' என்ற பெயரில் ஆய்ந்து வருகின்றனர். 'Remote Viewing' என்ற சொற்றொடரைத் தாங்களே உருவாக்கியதாக, இவர்கள் கூறுகின்றனர். நமக்கு இது மிக பழைய சமாசாரம்!

இந்த தூரதிருஷ்டியைப் பற்றிய முதலாவது சரித்திர பூர்வ விவரமாக ஹெரோடோட்டஸ் தரும் ஒரு சம்பவத்தை அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

### தூர திருஷ்டி சம்பவம்

கி.மு. 550ல் லிடியா நாட்டை க்ரோஸ்ஸ் (Croesus) என்ற மன்னன் ஆண்டு வந்தான்.

கிரேக்க நாட்டில் ஏராளமானோர் அந்தச் சமயம் இறைவன் அருளுடன் அருள்வாக்கு ஆருடம் (Oracle) கூறிப் புகழ் பெற்றிருந்தனர்.

க்ரோஸஸ் மன்னன் பெர்சிய நாட்டு மக்கள் வலுவுள்ள வீரர்களாக இருப்பதோடு நாளுக்கு நாள் அதிக வலிமை பெற்று வருவதை நினைத்து மிகவும் கவலைப்பட்டான்.

புகழ் பெற்ற அறிஞர் ஹெரோடோட்டஸ் வாயிலாகவே நடந்த சம்பவத்தைக் காண்போம்:- "பெர்சியா நாளுக்கு நாள் வலிமை பெற்று வருவதை மனதில் கொண்டு, கிரேக்க நாட்டு அருள்வாக்கு ஆருடங்கள் உண்மைதானா என்று க்ரோஸஸ் பரிசோதிக்க எண்ணினான்.

லிடியா நாட்டில் ஒருவரையும் பரிசோதிக்க எண்ணினான்.

ஆருடங்களைப் பரிசோதிக்க அனுப்பபட்ட தூதர்களுக்குக் கண்டிப்பான தெளிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. சார்டிஸ் என்ற இடத்திலிருந்து கிளம்பியவுடன் ஒவ்வொரு நாளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சரியாக நூறு நாட்கள் கழித்து ஆருடத்தை பரிசோதிப்பதற்காக அதைக் கூறுபவர்களிடம் அந்த நூறாவது நாளில் அந்தக் கணத்தில் லிடியா மன்னன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று கேட்க வேண்டும். ஆருடம் கூறுவோர் கூறிய விடைகளை அப்படியே எழுதிக் கொண்டு உடனே திரும்பி வர வேண்டும்."

"டெல்பியில் முக்காலமும் உணர்ந்த புனிதர் அந்த வினாக்களைக் கேட்டு விடையை அளிப்பது வழக்கம். இந்தக் கேள்விகளை அங்குள்ள கோவிலில் உள்ள பெண் பூசாரி ஒரு புனிதமான இலையை மென்று, கோவிலில் உள்ள புனித தீர்த்தத்தைக் குடிப்பார்.

பிறகு தன்னை மறந்த உயர்ந்த நிலைக்குச் சென்று தனக்குத் தோன்றுவதைக் கூறுவார். அதை உரிய முறையில் விளக்கம் கூறுவார் புனிதர். இந்த விளக்கம் பாடல் ரூபத்தில செய்யுள் செய்யுளாக இருக்கும்."

2500 ஆண்டுகளுக்கு முன்பேயே அதிமானசிக சக்தி படைத்தவர் கண்டவற்றை இன்னொருவர் விளக்கம் கூறுவதைக் காண்கிறோம்!

இன்று அமெரிக்காவில் நாஸாவில் நடக்கும் பரிசோதனைகளில் தூர திருஷ்டிக் காட்சிகளைக் கண்டவர் இன்னொருவரிடம் அதைக் கூற அவரே இந்தக் காட்சிகளை "விளக்கி" உதவுவார்.

க்ரோஸஸ் கதைக்கு வருவோம்.

டெல்பியை அடைந்த வீரர்கள் தங்கள் கேள்வியைக் கேட்டனர்.

குறி சொல்லும் பெண் பூசாரி அறுசீர் விருத்தப் பாடலில் தான் கண்டவற்றைக் கூறினார்.

**"என்னால் மணலை எண்ண முடியும்**

**என்னால் கடலை அளக்க முடியும்**

**மௌன மொழியைக் கேட்க வல்ல**

**காதுகள் என்னிடம் உள்ளன**

**ஊமைகள் என்ன சொல்ல வருகிறான்**

**என்பதையும் அறிவேன் நான்!**

**ஆஹா! எனது உணர்வில் இப்போது**

**உணர்வது என்ன தெரியுமா?**

**ஓடுள்ள ஆமை ஒன்று தீயெரியும்**

**உலையிட்டுத் துடிக்கிறது**

**அதிலிருந்து வரும் நாற்றத்தை**

**உணர்கிறேன்; கொப்பரை**

**ஒன்றில் ஆட்டின் சதையும் வேகிறது.**

**'கீழே இருப்பதும் பித்தளை பாத்திரம்;**

**அதன் மூடியும் பித்தளை தான்' !"**

லிடியா வீரர்கள் இதை அப்படியே எழுதிக் கொண்டு சார்டிஸ் நகருக்குத் திரும்பி வந்தார்கள்.

ஹெரொட்டோட்டஸ் விவரிக்கிறார்:- "எல்லா தூதர்களும் தங்களுக்குக் கிடைத்த விடைகளுடன் திரும்பி வந்தனர்.

க்ரோஸஸ் அந்த ஓலைச்சுருள்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படித்தான். டெல்பியிலிருந்து வந்த ஆருடத்தைப் படித்ததும் 'இது தான் உண்மை' என்று கூறினான்.

தனது வீரர்களை அனுப்பிய க்ரோஸஸ், யாரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத செயல் ஒன்றை நூறாவது நாளன்று செய்ய வேண்டும் என்று எண்ணினான்.

அதன்படியே நூறாவது நாளன்று தான் நினைத்ததைச் செய்தான். ஒரு ஆமையையும், ஒரு ஆட்டையும் துண்டுகளாக தன் கைகளாலேயே வெட்டினான். ஒரு பித்தளை கொப்பரையில் போட்டு கொதிக்க வைத்தான். கொப்பரை மீது ஒரு பித்தளை மூடியையும் போட்டு மூடினான்.

தனது பரிசோதனையின் முடிவில் மிகவும் திருப்தியுற்றான் க்ரோஸஸ்.

டெல்பியில் உள்ள கடவுளுக்கு நன்றி செலுத்த எண்ணினான்.

பிரார்த்தனை செய்த்தோடு, டெல்பி கடவுளுக்கு ஒரு யாகம் செய்ய எண்ணினான். ஒவ்வொரு மிருக வகையிலும் 3000 எடுத்து பலியாகத் தந்தான்.

யாகம் முடிந்தவுடன் தங்கக் கட்டிகளை நிறைய எடுத்து உருக்கினான். 117 பாளங்களாக அவற்றை ஆக்கினான். அந்தப் பாளங்களைத் தான் நேரில் ஹெரோடோட்டஸ் பார்த்தார்.

'இந்தத் தங்கக்கட்டிகள் மீது தங்கத்தால் ஆன ஒரு சிங்கத்தை வைத்தான். இதன் எடை மட்டும் 570 பவுண்டுகள். இதன் இன்றைய மதிப்பு மட்டும் 1000 லட்சம் டாலருக்கு மேல் ஆகும்! '

The Delphi Oracle என்ற தனது புத்தகத்தில் (1953ல் வெளி வந்த்து) ஆக்ஸ்போர்டு சரித்திரக் வல்லுநர் ஹைச் டபிள்யூ பார்க் (H.W.Parke) இதைப் பற்றிக் கூறுகையில், "அபரிதமான மதிப்புடைய இந்தக் காணிக்கை ஒருவனின் மூச்சையே நிறுத்தி வைக்கும் அளவு இருக்கிறது.

ஆனால் ஹெரோடோட்டஸ் தந்துள்ள உண்மையான, நுணுக்கமான விவரங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவையாக உள்ளன. இன்றைய நவீன யுக அறிஞர்கள் சில சமயம் பிடிவாதக்காரர்களாக இருக்கிறார்கள் என்றாலும்; டெல்பியில் உள்ள பொக்கிஷம் பற்றி யாரும் சந்தேகம் கொள்ள முடியாது."

ஆகவே ஹெரோடோட்டஸ் காலத்திலிருந்தே 'தூரதிருஷ்டி' ஆராய்ச்சி தீவிரமாக இருந்த்து என்பது உண்மையே!

**1900ல் அப்டன் சிங்க்ளேர் இதை அறிவியல் பூர்வமாக்கினார்.**

**இரண்டாயிரத்தில் - இன்று, நாஸா இதைத் தீவிரப்படுத்தி வருகிறது!**

**14. அமெரிக்க நிறுவன ஆராய்ச்சிகள்!**

அதி மானசிக சக்தியின் திறனை அதிகரிக்க ரஷ்யாவும், அமெரிக்காவும் பல கோடி ரூபாய்களை செலவழிக்கத் தொடங்கின.

1981ல் அமெரிக்க காங்கிரஸ் ஒரு கமிட்டியை அமைத்தது. அந்தக் கமிட்டியின் அறிக்கையின் முக்கியமான பகுதி இதோ:-

நிகழ்கால மற்றும் எதிர்கால அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை பற்றிய ஆய்வறிக்கை.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கமிட்டி அமெரிக்க பிரதிநிகளின் சபை

97வது காங்கிரஸ் – ஜன் 1981

"தூர திருஷ்டி மற்றும் அதீத உளவியலில் சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனைகள் மனித மனம் மற்ற மனங்களுடனும் பொருளுடனும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. மனத்தோடு மனம் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருப்பது பற்றிய பரிசோதனைகளின் முடிவுகள் மிக்க ஊக்கமூட்டுபவையாக உள்ளன... இந்த சோதனைகளின் முடிவுகளின் விளைவு மனித மனம் எந்த ஒரு தகவலையும் காலம், இடம் இவற்றைக் கடந்து பெற முடியும் என்பதைத் தெரிவிக்கிறது. அதிக சக்தி வாய்ந்த்தாகவும், கற்பனைக்கு அப்பாற்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் இந்தத் துறையின் அறிவை கருத்தில் கொண்டும், ரஷ்யா அதிகார பூர்வமாகவே இந்தத் துறைக்கான ஆராய்ச்சிக்கு ஏராளமான ஆதரவைத் தருகிறது என்பதை உணர்ந்தும் இதைப் பார்க்கும் போது (அமெரிக்க) காங்கிரஸ் இதை தீவிரமாக ஆய்ந்து ஒரு முடிவுக்கு வர விரும்பக் கூடும்."

Survey of Science and Technology Issues

Present and Future

Committee on Science and Technology

U.S. House of Representatives

Ninety – Seven Congress

June 1981

Recent experiments in remote viewing and other studies in Para-Psychology suggest that there is an "inter connectedness" of the human mind with other minds and with matter... Experiments on mind-mind interconnectedness have included some encouraging results...

"The implication of these experiments is that the human mind may be able to obtain information independent of geography and time... Given the Potentiality Powerful and far-reaching implications of knowledge in this field, and given that the Soviet Union is widely acknowledged to be supporting such research at a for higher and more official level, congress may wish to develop a serious assessment of research in this country"

அமெரிக்க நாடாளுமன்றமே அங்கீகரித்த ஒரு ஆய்வு இது என்பதை எண்ணும் போது பிரமிப்பாக இருக்கிறதல்லவா?

அமெரிக்காவிலும் மற்ற பல நாடுகளிலும் 46 சோதனைகள் தூர திருஷ்டி பற்றி நடத்தப்பட்டன. அவற்றில் 23 சோதனைகளின் முடிவு வெற்றிகரமாக அமைந்தன! முடிவுகள் தந்த புள்ளி விவரங்கள் முக்கியமான தகவல்களையும் தந்தன!

இந்த அனைத்து முடிவுகளும் ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. காலம், இடம் (Space and time) இவற்றின் தொடர்பு பற்றி நாம் நம்பிக் கொண்டிருக்கும் சித்தாந்தம் முழுமையானதில்லை என்பதை உணர்த்துகின்றன அவை!

இந்த ஆய்வுகளை அமெரிக்காவில் தொடங்க இரு பெரும் நிபுணர்கள் முன் வந்தனர். ரஸ்ஸல் டார்க் (Russell Targ) இயற்பியல் துறை விஞ்ஞானி. லேசர், மைக்ரோவேவ், பிளாஸ்மா, ஆராய்ச்சிகளில் நிபுணர். டாக்டர் ஹெரால்டு புத்தோஃப் (Dr.Harold Puthoff) என்பவரோடு இணைந்து 'ஸ்ரீ' (SRI) என்ற நிறுவனத்தைத் துவக்கினார். SRI என்ற எழுத்துக்கள் STANFORD RESEARCH INSTITUTE என்பதைக் குறிக்கும். இப்போது SRI INTERNATIONAL என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. தூர திருஷ்டி (REMOTE VIEWING – RV) பற்றிய ஆய்வுகளை இது நடத்துகிறது.

கெய்த் ஹராரி (Keith Harory) என்பவர் அதிகமானசிக ஆராய்ச்சி நிபுணர் ஆவார். உலகெங்கும் பல இடங்களில் அவரை சோதித்தும் இருக்கிறார்கள்.

இவர்களது ஆய்வறிக்கையின் படி எந்த ஒரு மனிதரும் கண்களை மூடிக் கொண்டு இருந்த இடத்தில் அமர்ந்தபடியே அதிமானசிக சக்தியை உபயோகப்படுத்தி தொலைதூரத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை இடம் மற்றும் இதர அனைத்து விவரங்களையும் மிகத் துல்லியமாகக் கூற முடியும்! பூமியில் மட்டுமல்ல, இதர கிரகங்களில் நடப்பவற்றைக் கூட அவர்கள் கூற முடியும்!

சோதனைச் சாலையில் இப்படி "தூர திருஷ்டியில்" சம்பவங்களைப் பார்ப்பவர்கள் – வழக்கமாக சோதனைக்கு ஆட்படுபவர்களைக் கூறும் 'Subjects' என்ற சொல்லை உபயோகப்படுத்தாமல் – Viewers – "பார்ப்பவர்கள்" என்று அழைக்கின்றனர்.

இப்படிப்பட்ட சோதனை எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பார்ப்போம்!

1972ல் 'SRI' ஆய்வுக்குழு பனிரெண்டுக்கும் மேலான "பார்ப்பவர்களை" ஈடுபடுத்தி தொலை தூரத்தில் உள்ள கட்டிடங்கள், பார்க்குகள், பாலங்கள் ஆகியவற்றைத் துல்லியமாக விவரிக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட சோதனைகளை நடத்தியது. இவை அனைத்தும் சான்பிரான்ஸிஸ்கோவில் நடத்தப்பட்டன.

இரண்டு ஆராய்ச்சி நிபுணர்கள், ஒரு "பார்ப்பவரை" சந்திப்பர். தங்களில் ஒருவர் இன்னும் தீர்மானிக்கப்படாத ஏதேனும் ஒரு இடத்திற்கு அனுப்பப்படவிருப்பதாக "பார்ப்பவரிடம்" கூறுவர். இப்படி தொலை தூரத்திற்கு செல்பவரை (Out Bound Experimenter) வெளியிட சோதனையாளர் என்பர். தொலை தூர இடத்தை 'இலக்கு இடம்' (Target Site) என்பர்.

'பார்ப்பவரை' விட்டு நீங்கிய சோதனையாளர் 60 சோதனை இடங்களில் தனக்குத் தோன்றிய ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திற்குச் செல்வார்.

இரண்டாவது ஆராய்ச்சியாளரை – பேட்டியாளர் - (Interviewer) என்பர். இவர் "பார்ப்பவரை நோக்கி" மனதை ஒரு முகப்படுத்தி 'இலக்கு இடத்தை' விவரிக்கும்படி கூறுவார். பேட்டியாளருக்கும் வெளியிட சோதனையாளர் எந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார் என்பது தெரியாது!

"பார்ப்பவர்" தான் 'கண்டதை' விவரிப்பார். எடுத்துக்காட்டாக பல மைல்கள் தள்ளி உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழக ஆர்ட் ம்யூஸிய வளாகத்திற்கு 'வெளியிட

சோதனையாளர்' சென்றார். வழக்கம் போலவே, பல இடங்களிலிருந்து இந்த இடம் "அப்போது தான்" தேர்ந்தெடுக்கப்பட்டது.

மனதை ஒரு முகப்படுத்திய "பார்ப்பவர்" பேட்டியாளரிடம் ஒரு கட்டிடத்தைப் பற்றி நுணுக்கமாக விவரித்தார். அதன் படத்தையும் வரைந்தார்.

"பார்ப்பவர்" வரைந்த படத்தையும் "இலக்கு இடமான" அசல் கட்டிடத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ச்சியாளர் வியந்தனர்!

ஏனெனில் பார்த்த இடமும், வரைந்த படமும் மிகத் துல்லியமாக ஒன்று போல இருந்தது.

## 15. தூர திருஷ்டி சோதனைகள்

**1978**ம் ஆண்டு தூர திருஷ்டி பற்றிய சில சோதனைகள் ஸ்ரீ (SRI) ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டன. இந்த சோதனைகள் அனைத்திலும் ஹெல்லா ஹம்மித் (Hella Hammid) என்ற பெண்மணி ஈடுபடுத்தப்பட்டார். இவர் திறமை வாய்ந்த புகைப்பட நிபுணர். ஸ்ரீ ஆராய்ச்சி நிறுவனத்தில் ஊக்கத்துடன் செயலாற்றியவர்.

ஆறு 'தூர திருஷ்டி' சோதனைகள் நடத்தப்பட்டன. அவற்றில் முதல் மூன்றில் ஹெல்லா மிகத் தெளிவான 'இலக்கு இடங்களை' விவரித்தார். ஒவ்வொரு சோதனை முடிந்த பின்னரும், உடனேயே அவர் 'இலக்கு இடத்திற்கு' அழைத்துச் செல்லப்பட்டார்.

கட்டுப்பாடான சோதனைகள் எப்போதுமே முன்பே நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் நடத்தப்படுபவை. ஆனால் தொடர்ந்து மூன்று இலக்கு இடங்களை சரியாக விவரிக்க முடியாத நிலையில், ஹெல்லா தனது சொந்த இருப்பிடமான லாஸ் ஏஞ்சல்ஸிற்குத் திரும்ப மறுத்து விட்டார்.

சோதனைச் சாலையில் விவரித்த இடத்திற்கு நேரே அழைத்துச் செல்லப்படும் சோதனை பற்றிய விளைவை (FEED BACK) அவர் பெரிதும் விரும்பினார்.

மூன்று சோதனைகளில் வெற்றி; மூன்றில் தோல்வி என்ற நிலையில் வீடு திரும்ப மறுத்த ஹெல்லாவிற்காக இன்னும் ஒரு சோதனை நடத்த நிறுவனம் ஒப்புக் கொண்டது. சான்பிரான்ஸிஸ்கோவில் அறுபது இடங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது.

இரண்டு "தொலை தூரத்திற்குச் செல்பவர்" (Out Bound Experimenter) ஒரு புதிய மறைவிடத்திற்கு அனுப்பப்பட்டனர். ஹெல்லா அவர்களை அந்த மறைவிடத்தை – கண்டு பிடிக்க வேண்டும்!

இந்தக் கூடுதலான சோதனையும் சோதனைச் சாலை முறைப்படியே நடத்தப்பட்டது. முந்தைய ஆறு சோதனைகளும் மூன்றே நாட்களில், ஒரு நாளுக்கு இரண்டு வீதம் நடத்தப்பட்டன.

அடுத்த நாள் வியாழக்கிழமை. ஹெல்லாவின் இறுதிச் சோதனை காலை பத்து மணிக்கு நடத்தப்பட்டது. இது முடிந்தவுடன் காரில் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தன் வீடு நோக்கி ஹெல்லா செல்வதற்கான ஏற்பாடுகளும் நடந்தன.

ரஸ்ஸல் டார்க்கும், ஹெல்லாவும் ஜன்னலே இல்லாத, ஆனால் மிக்க வசதியுடன் கூடிய ஒரு அறையில் தங்கள் சோதனையை ஆரம்பித்தனர். 'ஸ்ரீ' நிறுவனத்தில் ரேடியோபிஸிக்ஸ் கட்டிடத்தில் மூன்றாவது மாடியில் சோதனை ஆரம்பிக்கப்பட்டது.

காலை காப்பியைக் குடித்து விட்டு அடுத்தாற்போல நடக்க வேண்டியதை ஹெல்லா விவாதித்துக் கொண்டிருந்த போதே "தொலை தூரத்திற்குச் செல்வோர்" இருவரும் இரண்டாம் மாடிக்குச் சென்று எலக்ட்ரானிக் ரேன்டம் நம்பர் ஜெனரேட்டரை (Electronic Random Number Generator) இயக்கி எந்த இலக்கு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்கான நம்பரைப் பெற்றனர்.

ஜெனரேட்டர் தேர்ந்தெடுத்த நம்பரை செயலாளரிடம் கொண்டு வந்து கொடுக்க, அவர் பாதுகாப்பான பெட்டியில் வைக்கப்பட்டிருந்த கார்டுகளை எடுத்து, அதில் ஜெனரேட்டர் தந்த நம்பருக்கான கவரை எடுத்தார்.

இரண்டு 'தொலை தூரத்திற்குச் செல்வோரும்' அந்த இடத்தைப் பற்றிய விவரத்தைத் தரும் கவரை எடுத்துக் கொண்டு உடனேயே கீழே வந்து கார் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்த காரில் ஏறி அமர்ந்து கவரைப் பிரித்தனர்.

அதில் Airport Tower – Cross Bay Shore Freeway on Embareadaro Road என்று இருந்தது. விமான நிலைய டவரை இலக்கு இடமாக நிர்ணயத்திருந்தனர். இந்த இடம் தேர்ந்தெடுக்கப்படும் என்பதை ஊகிக்கக் கூட யாராலும் முடியாது! அப்படி ஒரு இடம் ஏர்போர்ட் டவர்!

ஹெல்லா ஏர்போர்ட் டவரை சரியாகக் கண்டுபிடித்து விட்டார்.

அவரது உரையாடல் டேப் செய்யப்பட்டது. அதில் சில முக்கிய பகுதிகளைப் பார்க்கலாம்.

**ஹெல்லா:** முட்டை கோஸ் வடிவம் போல இருக்கிறது. ஒவ்வொரு இதழும் மற்றொன்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. 'டவர்' போல கட்டிடம் இருக்கிறது. ஏதோ ஒன்று டவரின் மேலே இருக்கிறது. அதை வரையப் போகிறேன்.

**ரஸ்ஸல்:** டவர் போன்ற கட்டிடத்தைப் பற்றிக் கூறமுடியுமா?

**ஹெல்லா:** வலுவிலே அதைப் பார்க்க விரும்பவில்லை. தானாக அந்த உருவம் மீண்டும் வருகிறதா எனப்பார்க்க விரும்புகிறேன்.

ஒரு வேளை தப்பான தோற்றமோ? ஆனால் அந்த உருவத்தை என்னால் மறக்க முடியாது... நிச்சயமாக அது ஒரு "டவர்" தான்! கீழே இதழ்களுடன் இணைக்கப்பட்டது போல உள்ளது. ஒரு வேளை புதர்களாக இருக்கலாமோ அல்லது பூ இதழ்களாக இருக்கக்கூடும். டவரின் ஒரு பக்கம் நீரோடை அல்லது நதியைப் பார்த்தவாறு இருக்கிறது. அது கிழக்கு திசை என ஊகிக்கிறேன்.

**ரஸ்ஸல்:** டவரின் 'ஷேப்' பற்றிக் கூற முடியுமா?

**ஹெல்லா:** சதுரமாக இருக்கிறது. வளைவான பகுதிகளோடு, நான்கு மூலைகளும் தெளிவாக உள்ளன. மேலே உச்ச பகுதி பெரிதாக உள்ளது.

**ரஸ்ஸல்:** அதை வரையுங்கள்

**ஹெல்லா:** இதோ, வரைகிறேன். இது பெரிய 'டவர்' போல இல்லை. சிறிய ஸ்ட்ரக்சர் தான்!

**ரஸ்ஸல்:** மேலே சென்று அது எப்படி இருக்கிறது என்று ஏன் பார்க்கக் கூடாது? சுற்றி ஏதேனும் உள்ளதோ?

**ஹெல்லா:** மேலே இருந்து பார்க்கிறேன். கீழே இருபுறமும் இறக்கை உள்ள ஏதோ ஒரு பொருள் இருக்கிறது.

**ரஸ்ஸல்:** அவ்வளவு தானா? கீழே தோன்றுவது இதுதானா?

**ஹெல்லா:** ஆம் 'V' ஷேப்பில் இருக்கிறது.

**ரஸ்ஸல்:** நமது நண்பர்கள் அங்கே இருக்கிறார்களா?

**ஹெல்லா:** ஆம், டவருக்குச் சற்று தள்ளியே இருக்கிறார்கள்.

ஏர்போர்ட் டவர் என்று ‘இலக்கு இடத்தை’ச் சரியாகக் கண்டு பிடித்து விட்டார் ஹெல்லா. ஆனால் விமானத்தைச் சரியாகக் கூறாமல் இருபுறமும் இறக்கை உடைய ஒரு பொருள் என்றே குறிப்பிடுகிறார்! ஆனாலும் இறுதியில் இது ஒரு ரேடியோ டவராக இருக்கலாம் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஹெல்லா மேலும் மேலும் அனைத்து விவரங்களையும் துல்லியமாக விவரிக்கிறார்.

இந்த அனைத்து தூரதிருஷ்டி சோதனைகளிலும் படமாக வரையக் கூடியவை சுலபமாக வந்துவிடுகின்றன.

தூரதிருஷ்டி திறமை கொண்ட ஒருவரிடம் போலீசார் வந்து கடத்திச் செல்லப்பட்ட ஒருவரைப் பற்றிய விவரத்தைக் கேட்டால், கடத்திச் செல்லப்பட்டவர் இருக்கும் வீட்டைப் பற்றிய விவரங்களைத் துல்லியமாகச் சொல்ல முடிகிறது. ஆனால் சரியான தெருவின் பெயரையோ, கதவு இலக்கத்தையோ சொல்ல முடிவதில்லை.

பெயர்கள், நம்பர்கள், எழுத்துக்கள் போன்ற விவரங்களை தூரதிருஷ்டியால் கூற முடிவதில்லை.

இதை "சைக்கிள் தகவலைப்" பெறுவதில் உள்ள குறைபாடு என்று கூறமுடியாது.

தூர திருஷ்டி மூலம் தகவலை தமக்குள்ளே முறைப்படுத்தும் போது – (Process செய்யும் போது) ஏற்படும் மன ஓசை (Mental Noice) அதைச் சரியாக முறைப்படுத்த விடாமல் செய்கிறது!

**மன ஓசை (Mental Noise) என்றால் என்ன?**

ஞாபகம் (Memory), கற்பனை (Imagination) இவை இரண்டும் மன ஓசைக்கான முக்கிய ஆதாரங்கள். எடுத்துக்காட்டாக பூஜ்யத்திலிருந்து ஒன்பது வரை உள்ள எண்களில் ஒன்றை நினைக்குமாறு உங்களிடம் கூறினால் எல்லா நம்பர்களையும் கற்பனை செய்யும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது.

அதே சமயம் நீங்கள் ஒரு போதும் பார்த்திராத கட்டிடத்தை விவரியுங்கள் என்று கேட்டாலே அது முற்றிலும் மாறுபட்ட வடிவம் என்பதால், தெளிவாகத் தெரிந்த நம்பர்களை மனக் கற்பனை மூலம் பார்க்க முடிந்தது போல, கட்டிடத்தைச் சுலபமாகப் பார்க்க முடிவதில்லை!

ரேடியோ மூலம் செய்யப்படும் தகவல் பரிமாற்றத்தில் பொறியியல் வல்லுநர்கள் ‘சிக்னல் டு நாய்ஸ் ரேஷியோ’ (Signal to Noise Ratio) பற்றிக் கூறுவார்கள். (தேவையான தகவலுக்கும், தவறான தகவலுக்கும் உள்ள விகிதாசாரம் இது!)

இதே போல சைக்கிக் சிக்னலை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஒருவர், மனஓசையைக் குறைக்க முடியும்! துல்லியமான தூரதிருஷ்டி பார்வையைப் பெற முடியும் என்று ஸ்ரீ ஆராய்ச்சி நிறுவனம் கண்டு பிடித்தது.

ஹெல்லா ஹம்மித் இத்தோடு நின்று விடாமல் மேலும் பல சோதனைகளில் ஈடுபட்டார். முடிவுகள் அனைத்தும் தூரதிருஷ்டியைப் பற்றிய விநோதமான விஷயங்களை விளக்குபவையாக அமைந்தன!

## 16. தொலை தூரச் சோதனைகள்

ஐம்பதுக்கும் மேற்பட்ட தூரதிருஷ்டி சோதனைகளை நடத்தி ஆச்சரியமூட்டும் முடிவுகளைக் கண்ட 'ஸ்ரீ' நிறுவனம் வெகு தூரத்தில் உள்ள இடங்களைக் காணுவது கஷ்டமானதா என்பதை அறிய ஆவல் கொண்டது.

இதற்கிடையே ரஷியாவில் 'சைக்கிக் தகவல்கள்' (Psychie Information) மிக மிகக் குறைந்த ப்ரீக்வென்சி உள்ள ரேடியோ அலைகள் மூலம் (ELF – Low Frequency Radio Waves) சொல்லப்படுவதைப் பற்றிய ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்பட்டன. இதே கருத்தை சில மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களும் உறுதிபடுத்தினர்.

சோதனைச் சாலை முறைமூலம் 'ஸ்ரீ' நிறுவனம் பார்வையாளர்களை தொலைதூர இடங்களைப் பார்க்கப் பணித்தது. நியூயார்க் நகரை கலிபோர்னியாவிலிருந்து பார்ப்பது; கலிபோர்னியாவை நியூ ஆர்லியன்ஸிலிருந்து பார்ப்பது; கொலாம்பியாவை கலிபோர்னியாவிலிருந்து பார்ப்பது – இப்படிப் பல இடங்களைத் தேர்ந்தெடுத்தது.

பரபரப்பூட்டும் இந்த தொலைதூர இடங்களைப் பார்க்கும் சோதனைகள் வெற்றிகரமாக முடிந்தன.

ஐந்து தொலைதூரச் சோதனைகள் 1976ம் ஆண்டு கோடைகாலத்தில் நடத்தப்பட்டன. ஐந்தும் திருப்திகரமான முடிவுகளைத் தந்தன. அவற்றில் இரண்டை மட்டும் இங்கே பார்ப்போம்.

இதில் தூரதிருஷ்டி பார்வையாளராக இருந்தவர் டாக்டர் சூஸன் ஹாரிஸ் என்ற பெண்மணி (Dr. Sunsan Harris) ஆவார். நியூ ஆர்லியன்ஸில் உள்ள துலேன் (Tulane) பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்ற மாணவி இவர். பின்னர் ஹார்வர்டில் சைக்கியாட்ரியில் பட்டம் வாங்கினார்.

பார்ட்டி ஒன்றில் சூஸன் தனது தோழியிடம் முதல் நாள் இரவில் ஜெர்மன் கவிதை ஒன்றைக் கனவில் கண்டதாகக் கூறி அந்தக் கவிதையை அப்படியே கூறினார். தற்செயலாக அருகே இருந்த ரஸ்ஸல் டார்க் இதைக் கேட்டார். உடனே சூஸனை அணுகி தாங்கள் நடத்தி வரும் தூரதிருஷ்டி சோதனைகளைப் பற்றி விவரித்துக் கூறி இதில் கலந்து கொள்ள சம்மதமா என்று கேட்டார். கனவிலே கண்ட கவிதையை நினைவு வைத்துக் திருப்பிக் கூறும் ஒருவர் அதிமானசிக சோதனைக்கு தகுதி வாய்ந்தவர் என்று எண்ணிய ரஸ்ஸல் டார்க், சூஸனின் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தார். சூஸனும் இதற்கு ஒத்துக் கொண்டார்.

நியூ ஆர்லியன்ஸில் இருக்கும் போதே இரு சோதனைகளில் கலந்து கொண்ட சூஸன், இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் கலிபோர்னியாவில் இருந்த 'இலக்கு இடங்களை' (Target Sites) தெளிவாகக் கூறிவிட்டார்.

இதில் ஒரு விநோதமான விஷயத்தையும் சூஸன் குறிப்பிட்டார். தொலை தூரத்திற்கு செல்வோர் (Out Bound Experimenters) இருவரும் தங்களுக்கு இடையே எதையோ தூக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஆச்சரியமான இந்தத் தகவல் பின்னர் சரிபார்க்கப்பட்டது.

இலக்கு இடத்தில் இருந்த "தொலைதூரத்திற்கு செல்பவர்" இருவருக்கும் போர் அடிக்கவே அங்கிருந்த ஒரு பழைய காகிதத்தை (அரசியல் கட்சி ஊர்வலம் விட்டுச் சென்றது) எடுத்து பேப்பர் ஏரோபிளேன் செய்து அதை ஒருவருக்கொருவர் வீசி மகிழ்ந்த வண்ணம் இருந்தனர். பேப்பர் ஏரோபிளேன் பறந்து வரும் போது அதை ஒரு போட்டோ வேறு எடுத்தனர். இதை அப்படியே சூஸன் குறிப்பிட்டு விட்டார்.

இனி சூஸனின் தொலை தூரச் சோதனைகளைப் பார்ப்போம்.

இந்தச் சோதனைகளில் தனது மனப்பதிவுகளை கம்ப்யூட்டர் மூலம் சூஸன் பதிவு செய்து விட்டார்.

சோதனையில் தொலை தூரத்திற்கு அதாவது நியூயார்க்கிற்கு சென்றவர் ரஸ்ஸல் டார்க்.

சூஸன் அருகில் இருந்து அவரது மனப் பதிவுகளை பேட்டி எடுத்தவர் டேவிட் ஹர்ட் (David Hurt) என்ற எலக்ட்ரானிக் என்ஜினியர். இவர் நெடுங்காலம் சைக்கிக் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

டேவிட்டுக்கு, ரஸ்ஸல் டார்க் நியூயார்க்கில் எந்த இடத்தில் இருந்தார் என்பது தெரியாது. ரஸ்ஸல் டார்க்கிற்குமே அரைமணி நேரத்திற்கு முன்புதான் தான் போக வேண்டிய இடம் தெரியும்.

தனது மகன் நிக்கலஸிற்கு பெரிய கப்பல்களை ஒரு படகிலிருந்து காண்பிப்பதற்காக துறைமுகத்திற்கு சென்றிருந்தார் ரஸ்ஸல். 1976ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் தேதி (அமெரிக்க சுதந்திர தினம்) அது!

முதல் சோதனையிலேயே சூஸன், ரஸ்ஸலுடன் அவரது மகன் நிக்கலஸ் இருந்ததைக் கூறிவிட்டார்.

முதல் இலக்கு இடம் நியூயார்க் நகரின் மேற்கே ரிவர்சைட் பார்க்கில் இருந்த கிராண்ட்ஸ் டாம்ஃப் (Grant’s Tomb) என்னும் இடம் ஆகும்

கிரேக்க கோவிலைப் போன்ற அமைப்பு உடைய அந்தக் கட்டிடம் வெள்ளை நிறத்தில் கூம்பு வடிவ அமைப்பைக் கொண்டது. ஜெனரல் யுலிஸிஸ் எஸ். கிராண்ட் என்பவரும் அவரது மனைவி ஜூலியாவும் (Julia) புதைக்கப்பட்ட கல்லறை அது. அமெரிக்க உள்நாட்டுப் போர் பற்றிய நினைவுச் சின்னங்கள், போஸ்ட் கார்டுகள் விற்பனையும் அங்கே உண்டு.

கம்ப்யூட்டரில் சூஸன் பதிவு செய்தது இது:-

தேதி: 2, ஜூலை 1976 / 1126 - PDT

பொருள்: சூஸன் அறிக்கை

பெறுநர்: ரஸ்ஸல் டார்க்

ரஸ்ஸல், ஒரு பெரிய கட்டிடத்தைப் பார்க்கிறேன். உங்கள் இடது பக்கம் ஒரு மரத்தைப் பார்க்கிறேன்.

ஒரு கட்டிடத்தின் முன் பக்க வாயில் வழியே நுழைகிறீர்கள். ஒரு லிப்டுக்காகக் காத்திருந்து அங்கே சுவரில் எழுதப்பட்டிருக்கும் எதையோ படிக்கிறீர்கள். லிப்டிலிருந்து வெளியே வந்து இடது பக்கம் இருக்கும் அறைக்குச் செல்கிறீர்கள்.

அங்கு நடப்பதைச் சரியாக என்னால் விவரிக்க முடியவில்லை. ஒரு ரெஸ்டாரண்டா? ஒரு மியூஸியமா? ஒரு புத்தகக்கடையா? எதையோ பார்த்து விட்டு, உள்ளே நுழைகிறீர்கள்.

அறையிலிருந்தவாறே துறைமுகத்தையோ அல்லது ஒரு நீர்பரப்பையோ பார்க்கிறீர்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கையிலிருந்த காசுகளைப் பார்த்து விட்டு அவற்றை

நிக்கல்ஸிடம் தருகிறீர்கள். (இது உண்மை தான். நிக்கலஸ் போஸ்ட் கார்டு வாங்க காசு கேட்கவே ரஸ்ஸல் தருகிறார்)

இதே சமயம் இன்னொரு ஆராய்ச்சியாளரும் இந்த சோதனையில் ஈடுபடுத்தப்பட்டார். கிரான்ட்ஸ் டாம்பும், அதை சோதனையாளர் வரைந்தடும் படமாக வரையப்பட்டது.

இரண்டாவது இலக்கு இடம் இரண்டு நாட்கள் கழித்துத் தேரந்தெடுக்கப்பட்டது. வாஷிங்டன் ஸ்குயர் பார்க்கில் இருந்த மைய நீருற்று (Central Fountain) அது. நீருற்று பெரியது; வட்ட வடிவமானது! அதை அப்படியே விவரித்து விட்டார் சூஸன்.

சூஸனின் அறிக்கைகள் தீவிரமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. அதில் சில தவறுகளும் இருக்கவே செய்தன. என்றாலும் சரியான தகவல்களே மிக அதிகம் இருந்தது.

இந்த அறிக்கையை மதிப்பீடு செய்ய இருவர் நியமிக்கப்பட்டனர். 'அறிக்கை ஆய்வாளர்' இருவரும் முதல் சோதனையில் இருபத்தியோரு 'அடிப்படைத் தகவல்கள்' சரியாக இருந்ததை உறுதிப்படுத்தினர். வாஷிங்டன் ஸ்குயர் பார்க் சோதனையில் பதினாறு அடிப்படைத் தகவல்கள் சரியாக இருந்தன.

இந்த முப்பத்தியேழு தகவல்களும் அறிவியல் அடிப்படையிலான 'T' சோதனை மற்றும் மான்விட்னியூ சோதனை மூலம் (Mann-Whitney U-Test) மீண்டும் சரிபார்க்கப்பட்டன.

சூஸனின் தூர திருஷ்டி திறமை குறிப்பிடத் தகுந்தது என்பதை இவை உறுதிப் படுத்தியதோடு இலக்கு இடங்களையே சூஸன் விவரித்திருக்கிறார் என்பதையும் இவை உறுதிப்படுத்தின.

**அலைகடலைத் தாண்டி வரும் மன அலைகள்!**

வாசிலெவ் (Vasileu) என்ற ரஷிய ஆராய்ச்சியாளர், அமெரிக்க அரசு 1959இல் நாடிலஸ் (Natilus) என்ற நீர்முழ்கிக் கப்பலில் நடத்திய சோதனைகளை 'Experiments in Mental Suggestion' என்ற நூலில் விவரித்துள்ளார்.

இந்த சோதனைகளை அமெரிக்க அரசு உண்மையிலேயே நடத்தியதா என்று 'ஸ்ரீ' நிறுவனம் ஆராய்ந்தது. ஆனால் தகுந்த சான்றுகளும், ஆராய்ச்சி பற்றி முழு விவரங்களும் அதற்குக் கிடைக்கவில்லை. ஆகவே தானே அலைகடல் சோதனையை நடத்தி விட்டால் என்ன என்று 'ஸ்ரீ' நிறுவனம் நினைத்தது.

இதன் விளைவாக 1977ம் ஆண்டு ஜுலை மாதம் ஆழ்கடலில் மூழ்கி இருந்த நீர்மூழ்கி கப்பலில் இரு சோதனைகள் நடத்தப்பட்டன.

சான்டா கடாலினா (Santa Catalina) என்ற இடத்திற்கு அருகில் பசிபிக் மகாசமுத்திரத்தில் இவை நடத்தப்பட்டன.

பல நூறு அடி ஆழத்தில் "பார்ப்பவர்" இருக்க "தொலைதூரம் செல்வோர்" ஐநூறு மைல்களுக்கு அப்பால் சென்றனர்.

கடல் நீரின் ஆழத்தில் இருப்பதால் சைக்கிக் சக்தி குறைவு படுகிறதா என்பதை அறிவதே சோதனையின் நோக்கம். 'ELF' எனப்படும் லோப்ரீக்வென்சி ரேடியோ அலைகளால் சைக்கிக் சக்தியைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றாலும், இதை மீற அதிகமான சக்தி தேவையாக இருந்தது.

இதில் ஈடுபட்டவர் ஹெல்லா ஹம்மீத் தான்! இவர் மூலம் நடந்த சோதனைகள் அனைத்தும் சைக்கிக் சக்தியை தூரமோ (Distance), எலக்ட்ரோ மாக்னடிக் ஷீல்டிங்கோ (Electro Magnetic Shielding) அல்லது கடல் பயண வியாதியோ (Sea Sickness) கட்டுப்படுத்த முடியாது என்று அறிவித்தன!

## 17. விதி வெல்லுமா?

**தூர திருஷ்டியால் என்ன பயன்?**

எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை தூரதிருஷ்டி மூலம் காண்பதாகச் சொல்லப்படுகிறதே (Precognitive remote viewing ), இது எதை உணர்த்துகிறது?

பிஷா மற்றும் டன் (Bisha and Dunne) என்ற இரு ஆராய்ச்சியாளர்கள் தங்கள் முடிவுகளை MIND AT LARGE என்ற புத்தகத்தில் விளக்குகிறார்கள்:-

"இந்த இரு சோதனைகளின் முடிவுகள், முடிவற்ற, எல்லையற்ற தகவல் தொடர்பு சாதனம் ஒன்று காலத்தையும், தூரத்தையும் கடந்து இயங்குகிறது என்பதை அறிவிக்கின்றன. மற்ற சாதனங்கள் இயங்காது தடைப்பட்ட நிலையில், தடை ஏதுமின்றி இவை இயங்குகின்றன என்பதும் தெளிவாகிறது.

அதுமட்டுமல்ல, இந்த சாதனம் தனிப்பட்ட சாதாரண நபர்களால் – அவர்கள் சைக்கிக் திறன் ஏதுமில்லாதவர்களாக இருந்தாலும் கூட 'ட்யூன்' செய்யப்படக்கூடியது என்பதை நிரூபிக்கிறது."

நடப்பதை தூரதிருஷ்டி மூலம் கண்டால் கூட அவற்றை மாற்ற இயலாது என்ற கூற்றை இவர்கள் நம்பவில்லை!

"நமது எதிர்காலம் முன்பேயே நிச்சயிக்கப்பட்ட ஒன்று; மாற்ற முடியாதது; மாற்ற வாய்ப்பே இல்லாதது என்பது தவறு.

நடப்பதை முன்பே உணர்வதால் 'மதி' (Freewill) என்ற ஒன்றே இல்லை என்பதாகி விடாது என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்!"

பாப் பிரையர் (Bob Brier) என்னும் ஆராய்ச்சியாளர் இதைப்பற்றி, உண்மையான சம்பவம் போன்ற ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் காட்டி இதை தெளிவாக விளக்குகிறார்:-

"நீங்கள் சனிக்கிழமை இரவு, விருந்து ஒன்றில் கலந்து கொள்வதாக கற்பனை செய்து கொள்வோம். உங்கள் நண்பர் ஸ்மித்துடன் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் உங்களிடம் வந்து, 'நேற்று – அதாவது வெள்ளிக்கிழமையன்று – ஸ்மித்தின் டெஸ்க் டிராயரில் குண்டு ஒன்று வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன்' என்று சொல்கிறார். குண்டு இன்னும் ஒரு மணி நேரத்தில் வெடிக்க இருக்கிறது. அவர் மேலும் கூறுகிறார் "அவசரமான ஆபிஸ் வேலை நிமித்தம் ஸ்மித்திற்கு இதைச் சொல்ல மறந்து விட்டேன்."

உண்மையைச் சொல்லப் போனால் இந்தக் கணம் வரை- சனிக்கிழமை வரை இதைப் பற்றி மறந்து விட்டார் நண்பர். இப்போது தான் அவருக்கு நினைவுக்கு வருகிறது. ஸ்மித்திற்கு என்ன நடந்தது என்பதே அவருக்குத் தெரியாது.

இந்த நிலையில் இப்போது உங்களால் ஸ்மித்தைக் காப்பாற்ற முடியுமா? நிச்சயமாக ஒரு வழியும் இல்லை! ஒன்று, குண்டு வெடித்து அவர் செத்திருக்க வேண்டும் அல்லது யாரோ ஒருவர் குண்டைக் கண்டுபிடித்து அகற்றி அவரைக் காப்பாற்றி இருக்க வேண்டும் அல்லது குண்டு வெடிக்காமல் செயலிழந்து ஸ்மித் தப்பியிருக்க வேண்டும்.

எப்படி இருந்தாலும், இப்போது நீங்கள் செய்வதற்கு ஒன்றும் இல்லை! ஆனால் 'காலப்பாதையில்' 'திருப்பிப் போகும் திறன்' உங்களுக்கு இருப்பதாக வைத்துக் கொண்டால், நீங்கள் உங்கள் நண்பரைக் காப்பாற்ற ஏதேனும் செய்ய முடியும்! விருந்து நடக்கும் போதே, "ஸ்மித், நான் தான் உன் நண்பன் பேசுகிறேன். எதிர்காலம் பற்றி

உன்னை எச்சரிக்கிறேன். உன் டெஸ்க் டிராயரில் ஒரு வெடிகுண்டு இருக்கிறது. உடனே அதை அகற்றி விடு" என்று கத்தலாம்.

இப்படிக் கத்துவது சுலபமாகச் செய்யக்கூடிய ஒன்று. இது நடக்க முடியாத விஷயம் என்று சொல்ல முடியாது. ஆனால் இப்போது, ஸ்மித்தை விருந்து நடந்த மறு நாள் தெருவில் நீங்கள் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். வெள்ளிக்கிழமையன்று தனக்கு நேர்ந்த விசித்திரமான அனுபவத்தை ஸ்மித் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

"டெஸ்க் டிராயரின் முன்பு நான் அமர்ந்திருந்தேன். விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருந்த நீ திடீரென்று, "ஸ்மித், உன் டெஸ்க் டிராயரில் குண்டு இருக்கிறது. அதை உடனே அகற்றி விடு என்று கத்தினாய். உடனே குண்டைக் கண்டுபிடித்து அகற்றி விட்டேன்," என்று சொல்கிறார் உங்கள் நண்பர்!

இப்படி ஒரு வேளை நடந்திருந்தால், இதை என்னவென்று நாம் விவரிக்க முடியும்? காலத்தை எதிர்த்துச் சென்று (Backward Causation) நிகழ்த்திய நிகழ்ச்சியாகத் தான் கூற முடியும்!

சனிக்கிழமை இரவு நடந்த விருந்தில் நீங்கள் கத்தி எச்சரித்தது, முந்தைய நாÇ¡É வெள்ளிக்கிழமை இரவு வெடிக்கவிருந்த வெடிகுண்டை அகற்றச் செய்து உங்கள் நண்பரைக் காப்பாற்றி விட்டது!

இப்படி நிகழ்வு நிகழ்ந்திருந்தாலும், இறந்த காலத்தை நீங்கள் மாற்றி விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறவில்லை!

ஸ்மித் ஒரு வேளை முதல் நாள் இறந்து விட்ட நிலையிலும் நீங்கள் காப்பாற்ற முயன்றது உண்மைதான், அது நடக்க வில்லை, அவ்வளவு தான்! என்பதாகி விடும்.

"வருவதை உணர்வதில்" (Precognitive information) மூன்Ú வழிகள் உள்ளன.

முதலாவது – விவரங்கள் அனைத்தும் 'எதிர்காலத்திலிருந்து வருவது.' நடக்கவிருக்கும் நிகழ்ச்சியை, நடப்பதற்கு வெகு நேரத்திற்கு முன்னாலேயே உணர்த்தி விடுவது!

இரண்டாவது – நிகழ் காலத்தில் உள்ள நிகழ்வுகளை கூர்ந்து கவனித்து தர்க்கரீதியாக எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அதிமானசிக சக்தியுடன் ஊகித்து அறிவிப்பது!

மூன்றாவது – எதிர்காலத்தில் நடப்பதை சொல்வதற்கு வசதியாக எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளை கட்டுப்படுத்துவது.

உதாரணமாக ரேண்டம் ஜெனரேட்டர் நம்பர் என்ற கருவியைக் கட்டுப்படுத்தி எந்த இடத்திற்கு போக விரும்புகிறோமோ அந்த இலக்கு இடத்தை நாமாகத் தேர்ந்தெடுப்பது!

இந்த அனைத்து அம்சங்களையும் தீவிரமாக ஆராய்ந்த ரஸ்ஸல் டார்க்கும், கெய்த் ஹராரியும், சில சமயங்களில் எதிர்காலம். இறந்த காலத்தை ஏற்படுத்துகிறது. நிகழ்காலத்தில் எதிர்காலம் பற்றிக் கூறுவது மிக அரிதான ஒன்று. காலமானது ஒரே பாதையில் செல்வதாகக் கூறுவது தவறு. (Linear) (இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று அம்பு போல ஒரே திசையில் காலம் செல்வதாகக் கூறுவது தவறு) என்கின்றனர்.

எதிர்கால நிகழ்வுகள் பற்றிய தகவல்களை அதிமானசிக சக்தியின் உதவியால் உணர்வதை நிறையப் பார்த்துவிட்டோம். இப்போது நம் முன்னே கேள்வி ஒன்று எழுகிறது.

இப்படி எதிர்காலம் பற்றி நம்மால் உணரமுடிகிறது என்றால் நிகழவிருக்கும் நிகழ்வு நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை நிகழ விடாமல் நம்மால் தடுத்து நிறுத்த முடியுமா?

இந்தக் கேள்வி இன்னொரு கேள்வியை எழுப்புகிறது. நிகழ்வுகள் எப்படிப்பட்ட நிலையில் அது நிகழ்வதற்கு முன்பு இருக்கின்றன?

உதாரணமாக, தெளிவான கனவு ஒன்றை நீங்கள் காண்பதாக வைத்துக் கொள்வோம். கனவில் நீங்கள் தெரு ஒன்றின் வழியே நடக்கிறீர்கள். தெருக் கோடியிலிருந்து வரும் போது பிரகாசமான ஆரஞ்சு வண்ணக் கட்டிடம் ஒன்றைக் காண்கிறீர்கள். தற்செயலாக தெருவைப் பார்க்கும் போது, ஒரு நீல நிற லாரி உங்களை நோக்கி வருகிறது. தெருவில் காலடி வைத்த கணமே அந்த லாரி உங்கள் மீது ஏறி விடுகிறது. இத்தோடு கனவு முடிந்து விடுகிறது.

எழுந்தவுடன் இந்தக் கனவு நுணுக்கமாக அனைத்து விவரங்களுடன் உங்கள் நினைவிற்கு வருகிறது. ஒருவேளை அதே தெருவின் வழியே நீங்கள் நடக்க நேர்ந்து, ஒர நீல நிற லாரியும் உங்களை நோக்கி வருகிறது என்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்? அருகில் உள்ள பாதுகாப்பான இடத்தில் தாவி ஏறி நீல நிற லாரி மறையும் வரை பத்திரமாக இருப்பீர்கள் அல்லவா? இந்த வினாவிற்கு விடை அளிக்கும் முன்னர் இது சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்தையும் கவனிக்க வேண்டும்.

பாதுகாப்பான இடத்திற்கு சென்று லாரி உங்கள் மீது ஏறவில்லை என்றால் "எதிர்காலத்தில் நடப்பது" பற்றிய உங்கள் கனவு பொய் தானே! அதிமானசிக சக்தியை நம்புவோரும் அதன் ஆதரவாளர்களும் கனவில் வரும் பெரும்பாலான சம்பவங்கள் நடந்தது உண்மையே என்று வாதிடலாம்.

ஆனால் நிஜத்தில் லாரி உங்கள் மீது ஏறாத பட்சத்தில் கனவில் மட்டும் லாரி உங்கள் மீது ஏறுவதாக ஏன் வரவேண்டும்? இந்தக் கனவின் படி நடக்கக்கூடிய நிகழ்வுகள் கனவில் நடப்பதையும், எதிர்காலத்தில் நடக்காத சில தகவல்கள் கனவில் இடம் பெறுவதையும் பார்க்கிறோம்! இதிலிருந்து தெரிய வருவது என்ன? எந்த ஒரு நிகழ்வும் கூட அது நிகழ்ந்து முடியும் வரை நூறு விழுக்காடு பூரணமாக இல்லை என்பது தான்! எல்லா நிபந்தனைகளும் (All Conditions) பூர்த்தி செய்யப்பட வேண்டும். அப்போது தான் நிகழ்வு அப்படியே நடக்கும்.

அந்த நிகழ்வு நடக்கும் வரை மாற்று எதிர்கால நிகழ்வுகள் (Alternate Futures) இருக்கின்றன. இது நிஜத்தில் நடப்பதை ஒத்ததாகவும் இருக்கலாம்.

இது உண்மைதான் என்று வைத்துக்கொண்டால் ஒவ்வொரு எதிர்கால நிகழ்வுக்குமான சிறப்பான அம்சம் அது அப்படியே நடக்குமா, அப்படி நடப்பதற்கான சாத்தியக்கூறு (Probability) எப்படி இருக்கம் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

நம்முடைய அதிமானசிக சக்தி உணர்த்தும் எதிர்கால நிகழ்வு நடக்குமா நடக்காதா என்பது சாத்தியக் கூறைப் பொறுத்தே (Depends upon probability) அமைகிறது. நாம் மேலே பார்த்த கனவு உதாரணத்தில் லாரி உங்கள் மீது ஏறுவதற்கான சாத்தியக்கூறு அதிகம் இருந்த போதிலும், நிஜத்தில் நடக்காது போய்விட்டது.

இன்னொரு கோணத்தில் இதைக் கூற முடியும்:

ஒரு நிகழ்வு அப்படியே நடக்க இன்னொரு சிறப்பு அம்சமும் (மதியும்) அதைச் சார்ந்து இருக்க வேண்டும். அதாவது உங்கள் மதியை (Freewill) உபயோகித்து நிகழ்வை மாற்றிக் கொள்ளலாம்.

மதியால் (Freewill) உங்கள் கனவில் கண்டதைப் பொய்யாகப் போகுமாறு செய்ய முடியும்!

மதி மூலம் விதியை மாற்ற முடியும் என்றால் அனைவரும் அதிமானசிக சக்தியை வளர்த்துக் கொள்ள முடியுமா?

முடியும்!

## 18. மதியால் வெல்லலாம்

பொதுவாக 'மதி' மூலம் மோசமான 'விதி' நிகழ்வுகளிலிருந்து மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே செய்கிறான்!

நடக்கவிருக்கும் மோசமான விபத்துக்களிலிருந்து பெரும்பாலானோர் தங்களைத் தாங்களே காத்துக் கொள்கின்றனர். தங்களை அறியாமலேயே தங்கள், அதிமானசிக சக்தியை அவர்கள் உபயோகிப்பதாகத் தானே இதற்கு அர்த்தம்!

அறிவியல் அடிப்படையில் இதை உறுதியாகக் கூற முடியுமா?

முடியும்!

அமெரிக்க கணித இயல் நிபுணரான வில்லியம் காக்ஸ் என்பவர் ஒரு ஆய்வை மேற்கொண்டார்.

விபத்திற்குள்ளான புகைவண்டிகளில் பயணம் செய்வதை மக்கள் நிஜமாகவே தவிர்த்தார்களா? இதுதான் அவரது ஆய்வின் பொருள். விபத்திற்குள்ளான புகைவண்டியில் விபத்து நடந்த நேரத்தில் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பதை முதலில் அவர் சேகரித்தார். பிறகு விபத்திற்குள்ளான புகைவண்டிகளில் விபத்து நடப்பதற்கு முந்தைய ஏழு நாட்களில் எத்தனை பேர் பயணம் செய்தனர். விபத்திற்கு முந்தைய 14ம் நாள், 21ம் நாள், 28ம் நாள் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பதையும் சேகரித்தார். மிகவும் கஷ்டப்பட்டு ஏராளமான புள்ளி விவரங்களைச் சேகரித்த அவரது ஆய்வின் முடிவு:-

விபத்திற்குள்ளான புகைவண்டிகளில் பயணம் செய்வதை மக்கள் பொதுவாகவே தவிர்க்கவே செய்கின்றனர். விபத்தில் நசுங்கிப் போன பெட்டிகளிலும், தடம் புரண்ட பெட்டிகளிலும் அதில் எப்போதும் பயணம் செய்யும் பயணிகளை விட விபத்து நேரத்தில் குறைவான எண்ணிக்கையிலேயே பயணிகள் சென்றனர் என்பதே அவரது ஆய்வின் முடிவு!

இதை ஒரு 'தற்செயல் ஒற்றுமை' (Coincidence) என்றோ அல்லது தற்செயல் நிகழ்வு என்றோ கூற முடியாது! இது பொன்ற பல ஆய்வுகளை நடத்தினால், 'மதி' மூலம் மனிதன் மோசமான நிகழ்வுகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வது தெரிய வரும்!

இது ஒரு புறமிருக்க, டெலிபதிக்கும் காலத்திற்கும் உள்ள தொடர்பை மேலும் ஆராய்வோம்.

காலத்திற்கும், டெலிபதிக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அறிவியல் பூர்வமாக ரஷிய விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார். அவர் பெயர் நிகோலய் கோஸிரெவ் (Nikolai Kozyrev). உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானியான கோஸிரெவ் சந்திரனில் வாயு இருப்பதை அமெரிக்கர்கள் கண்டு பிடிப்பதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பேயே கண்டுபிடித்துச் சொன்னவர்! காலம் பற்றிய அவரது ஆராய்ச்சிகள் புரட்சிகரமான முடிவுகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

அவரது ஆராய்ச்சி முடிவுகள் முழுவதுமாக வெளிவரும்போது ஒரு பெரும் அறிவியல் புரட்சியே ஏற்படக்கூடும். நாம் நினைக்கும் எண்ணம் எப்படி இன்னொருவரை விரைவில் அடைகிறது? இன்னொரு கண்டத்தில் இருப்பவர் எப்படி நாம் நினைத்ததை உடனே அறிந்து கூற முடிகிறது? இதற்கான காரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார் கோசிரெவ்!

பதினேழு வருடங்கள் மிகுந்த பொறுமையுடனும், கஷ்டத்துடனும் ஏராளமான ஆராய்ச்சிகளை மேற் கொண்டவர் கோஸிரெவ். அவர் கண்டு பிடித்த காரணம்: 'காலம் தான் இதற்கு காரணம்!'

"இயற்கையின் முக்கியமான அம்சம் காலம் தான். ஒளி அலைகள் போல அது செல்வதில்லை. காலம் உடனடியாக எல்லா இடங்களிலும் தோன்றுகின்ற ஒன்று. காலத்தின் ஒரு வினாடியின் மாறுபட்ட அம்சங்கள் கூட எல்லா இடங்களிலும், உடனடியாகத் தோன்றும்! காலம் நம்மை இணைப்பதோடு, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையுமே இணைக்கிறது!" என்கிறார் கோஸிரெவ்.

அவருக்கு டெலிபதி மீதும் காலத்தின் மீதும் எப்படி ஆராய்ச்சி புரியும் அளவிற்கு ஆர்வம் வந்தது? அவரே கூறுவதைக் கேட்போம் :-

"இரட்டை நட்சத்திரங்கள் என்று நாம் அழைக்கும் (Double Stars) ஜோடி ஜோடியான நட்சத்திரங்களை அனைவரும் பார்க்க முடியும். முதலில் இவை இரண்டும் முற்றிலும் மாறுபட்டிருக்கும். ஆனால் காலவெள்ளத்தில் இரட்டை நட்சத்திரங்களில் இரண்டாவது நட்சத்திரம் முதலாவது நட்சத்திரம் போலவே ஆகிவிடும்! முதலாவது நட்சத்திரம் போலவே பிரகாசம். அதே அளவு ஆரம், அதே ஸ்பெக்ட்ரம் என எல்லா வகையிலும் முதல் நட்சத்திரம் போலவே இரண்டாவது நட்சத்திரம் ஆகி விடுகிறது! இது எப்படி சாத்தியம்?

இரண்டிற்கும் இடையே உள்ள பிரம்மாண்டமான தூரத்தில், கண்ணாடி பிரதி பிம்பம் போல ஒன்று மற்றொன்றாக விசை ஆற்றல் களத்தினால் (Force fields) மட்டும் மாறி விட முடியாது. இதற்குக் காரணம் காலத்தின் சக்தியே அதாவது நட்சத்திரம் ஒன்றுக்கொன்று டெலிபதி மூலம் தொடர்பு கொளவது போல! இதை ஆராய எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது."

காலம் ஒரு சக்தி (Time is energy) என்று கண்டு பிடித்திருக்கிறார் கோஸிரெவ். "உலகிற்கு புதிய உடைமைகளைத் (Properties) தருவதே காலம் தான்!" என்கிறார் கோஸிரெவ்.

கோஸிரெவின் சித்தாந்தத்தை முற்றிலுமாக உணர வேண்டுமெனில் காலத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவியல் இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும் ஒன்றாகப் பாவிக்கிறது. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிவியல் சுட்டிக் காட்டுவதில்லை. ஆனால் உண்மையில் நாம் உணர்ந்து அனுபவிக்கும் காலமோ இறந்த காலத்திலிருந்து எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

நம்மைப் பொறுத்த வரையில் எதிர்காலம் 'மறைந்து' இருக்கும் ஒன்று! இறந்த காலம், நமது ஞாபகம் மற்றும் இதர சாதனங்களைப் பொறுத்து நம்மால் உணரப்படுகிற ஒன்று.

நிகழ்காலம் ஒன்று தான் நேரடியாக உணரக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

ஒரு சிறிய உதாரணம் மூலம் நிகழ் காலம் பற்றிய நமது உண்மை அறிவைப் புரிந்து கொள்ள முடியும். ரயில் பெட்டி ஒன்றில் அமர்ந்து ஜன்னல் வழியே பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். நிகழ் காலத்தில் நேரம் பறக்கிறது. நிகழ் காலத்தை சிறிய அளவுகள் மூலம் அளக்க முயன்றால் அது முடியுமா? எந்தக் கணம் ஆரம்பம்? எந்தக் கணம் முடிவு? நினைப்பதற்குள் ஆரம்பித்த கணம் முடிந்த அடுத்த கணம் ஆரம்பித்து விடுகிறது. அதாவது 'நிகழ் கால கணம்', 'இறந்த கால கணமாகி' ஆகி விடுகிறது! நேரத்தின் அளவு சிறியதாக ஆக அக, நேரம் ஆரம்பிப்பதையும் முடிவதையும் நம்மால் உணர முடிவதில்லை!

ரயில் எவ்வளவு வேகமாகச் சென்றாலும், ஒரு பார்வையிலேயே நம்மால் முடிந்த தூரம் அளவு அனைத்தையும் பார்த்து விட முடிகிறது.

நமது இருக்கைக்கு எதிர்த்தாற்போல அமர்ந்திருக்கும் இன்னொருவருக்கு பார்வை மறைப்பதால் நாம் பார்க்க முடிந்த அளவு பார்க்க முடியாமல் நம்மை விடக் குறைவான காட்சியையே பார்க்க முடிகிறது.

ஆனால் அதே சமயத்தில் எஞ்சினுக்கு அடுத்த பெட்டியில் அமர்ந்திருக்கும் ஒருவர் ஜன்னல் வழியே வித்தியாசமான இன்னொரு காட்சியைப் பார்க்கிறார். அவருக்கு இன்னும் சற்று பரந்து விரிந்து – காட்சி தெரிகிறது.

திருட்டுத்தனமாக கூரை மீது பயணம் செய்யும் இன்னொருவர் தங்கு தடையற்ற விரிவான காட்சியைப் பார்க்கிறார். பெட்டியின் அளவுகளோ, ஜன்னலின் அளவோ அவரைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆகவே பரந்து விரிந்த காட்சியை அவரால் நன்கு பார்க்க முடிகிறது.

இப்போது நாம் மேலே பார்த்த பலருள்ளும் எவர் நிகழ் காலத்தைப் பார்ப்பதாகக் கூறுவது?

இதற்கு சரியான விடை: அனைவருமே நிகழ் காலத்தைப் பார்ப்பவர்கள் தான். ஆனால் அவர்களது பார்வை அதற்கான தடைகளைப் பொறுத்து சுருங்கியோ விரிந்தோ இருக்கும் என்பது தான்! ரயிலின் கூரை மீது பயணம் செய்பவர் எதிர்காலத்தைப் பார்ப்பதாகக் கூற முடியாது; நிகழ் காலத்தை இன்னும் நல்ல விதமாக பரந்து பட்ட காட்சியைப் பார்ப்பதாக மட்டுமே கூற முடியும்! அதாவது அவரது புலன்களை முற்றிலுமாகப் பயன்படுத்த அவரால் முடிகிறது.

ஹிந்து தத்துவங்கள் கூறும் "எப்போதும் நகரும் நிகழ் காலத்தை" இன்றைய நவீன பௌதிக இயல் ஒத்துக் கொண்டு விட்டது! நவீன கணித இயலோ புகைவண்டி நேர் எதிர் திசையிலும் செல்ல முடியும் என்கிறது!

இப்படி அனைவரும் ஆராய்ச்சி நடத்தி வருகையில் கோஸிரெவ் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் நம்மை பிரமிக்க வைக்கின்றன!

முதலில் காலத்தை கண் எதிரே அளப்பதற்கான கருவி ஒன்றைச் செய்து விட்டார் அவர். அதாவது சோதனைச் சாலையில் காலத்தைப் "பார்த்து" விட முடியும். அவர் உருவாக்கிய சாதனம், கைராஸ்கோப், சீரில்லாத பெண்டுலம் (Asymmetrical Pendulum) டார்ஷன் பாலன்ஸ் ஆகியவற்றை வைத்து உருவாக்கப்பட்டது.

இந்த சாதனத்தின் அமைப்பே சிக்கலான ஒன்று.

இது காலத்தின் அடர்த்தியையும் (எலாஸ்டிக்கை இழுப்பதைப் போன்ற மெக்கானிக்கல் நிகழ்வையும்), கெமிக்கல் விளைவையும் (சர்க்கரை எரிவது போன்ற இராசயன விளைவு) ஒருங்கே காண்பிக்கிறது.

ஒரு எலாஸ்டிக்கின் இரு முனைகளும் இரு கம்பங்களில் கட்டப்பட்டுள்ளன. ஒரு முனையை இழுப்பதாக வைத்துக் கொள்வோம். இது cause அதாவது காரணம். இன்னொரு முனை நீள்கிறது. நீள்வது effect; அதாவது காரியம்! எலாஸ்டிக் நீளும் போது சாதனத்தில் உள்ள பெண்டுலம் 'காரிய' கம்பத்தை நோக்கி அசைகிறது. இது ஒரு முக்கிய முடிவை விளக்குவதாக கோஸிரெவ் சுட்டிக் காட்டுகிறார்.

"காலமானது காரணத்தின் பக்கம் மெலிதாக உள்ளது; விளைவின் பக்கம் – காரியத்தின் பக்கம் அடர்த்தியாக உள்ளது." (Time is thin at the cause and dense at the effect) இந்த அடர்த்தியையும் எண்ண சக்தி மாற்றவல்லது என்பது அவரின் இன்னொரு பிரமிக்க வைக்கும் கண்டுபிடிப்பு!

கவிதை அல்லது உணர்ச்சி மயமான எண்ணங்களை எண்ணும் போது பெண்டுலம் மாறுதலைக் காண்பிக்கிறது. கணித கால்குலேஷன்களை நினைக்கும் போது சாதாரணமாக இருக்கிறது. அதாவது நமது எண்ணங்கள் காலத்தின் அடர்த்தியை மாற்ற வல்லதாக இருக்கின்றன. (Our thoughts may change the density of time).

அப்படி என்றால் காலத்தின் அடர்த்திக்கும் டெலிபதிக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? ஆம் நிச்சயம் உண்டு!

## 19. காலம் பற்றிய உண்மைகள்

விஞ்ஞானி கோஸிரெவ் காலத்தின் அபூர்வ குணங்களைப் பற்றி மேலும் கூறுகிறார்:-

"டெலிபதி எப்போதுமே காலத்தின் அடர்த்தியைப் பொறுத்தே இருக்கிறது! காலமானது எண்ணங்களை அனுப்புபவரின் பக்கம் மெலிதாகவும், அவற்றைப் பெறுபவரின் பக்கம் அடர்த்தியாகவும் உள்ளது.

நாங்கள் எங்கள் சோதனைச் சாலையில் செயற்கை முறையில் காலத்தின் அடர்த்தியை மாற்றுவதற்காகப் பல்வேறு சோதனைகளைச் செய்தோம். நமது விருப்பத்தின் படி காலத்தை அடர்த்தி உள்ளதாக ஆக்கும் போது, டெலிபதியையும் நாம் விரும்பும் போது நிகழ வைக்க முடியும்."

வேறு எவை எவை காலத்தின் அடர்த்தியை மாற்றும் வல்லமை படைத்தவை? இடி, கால நிலை, பருவ நிலை மாறுபாடு – இவையும் காலத்தின் அடர்த்தியை மாற்றும் வல்லமை படைத்தவை!

"இதன் விளைவுகளை ஒரு நாள் விஞ்ஞானிகளுக்குக் காண்பிப்பதற்காக தயார் செய்து கொண்டிருந்தேன். ஒரு இடி இடித்தது. அவ்வளவு தான். எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போயின. விஞ்ஞானிகளுக்குக் காட்டும் நிகழ்ச்சி நடக்கவே இல்லை" என்று கூறிச் சிரித்தார் கோஸிரெவ்.

"வடக்குக் கோடியில் முர்மான்ஸ்க் என்னுமிடத்தில் சில சோதனைகளைச் செய்தோம். சோதனைகள் மிகப் பிரமாதமாக அமைந்தன. இங்கே புல்கோவாவில் (ஒரு இடம்) கோடை காலத்தை விட குளிர் காலத்தில் இதன் விளைவுகள் பிரமாதமாகத் தெரிகின்றன.

குளிர் காலத்தில் அனைத்துப் பிரதேசமுமே பனியால் மூடப்பட்டிருக்கும் போது, விளைவுகள் அதிக சக்தியுள்ளவையாக இருக்கின்றன."

இது மட்டுமல்ல, இன்னொரு முக்கிய விஷயத்தையும் வலியுறுத்துகிறார் கோஸிரெவ். டெலிபதிக்காக ஒரு பூகோளம் தேவை என்கிறார் அவர். ஏனெனில் காலம் அடர்த்தியாக உள்ள வடக்கு பகுதி லாடிட்யூடுகளில் டெலிபதி சுலபமாகப் பாய்கிறது!

எக்ஸ்ட்ரா சென்ஸரி பெர்செப்ஷன் (E.S.P) எனப்படும் அதீத புலன் உணர்வும் குறைந்த ஜனத் தொகை உள்ள இடங்களில் வேகமாகப் பாய்கிறது. ஆகவே தான் இ.எஸ்.பி பற்றிய அதிகமான செய்திகள் விண்வெளியைத் தொடர்பு படுத்தியே பெரிதும் வருகின்றன.

விண்வெளியில் அது அதிகம் பாய்கிறது என்பதே காரணமாகும்.

காலத்தின் அடர்த்தியைக் காட்ட உதவும் கோஸிரெவின் சாதனம் இ.எஸ்.பியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்ப உதவி புரியக் கூடும்!

"புவி ஈர்ப்பு விசை (Gravity) கூட கால் அடர்த்தியை மாற்ற வல்லது: மேலும் பொருள் அடர்த்தியும் (Mass of matter) கால அடர்த்தியை மாற்ற வல்லது" என்கிறார் கோஸிரெவ்.

இது எதை பிரதிபலிக்கிறது தெரியுமா?

பூமியில் உள்ள பல்வேறு பொருள்களும் பல் வேறு அதிர்வுகளை (Vibrations) வெளிப்படுத்துவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதை இது மேலும் உறுதிப்படுத்துகிறது.

இந்த அதிர்வு வேறுபாட்டை வைத்துத்தான் பூமிக்கு அடியில் என்ன புதைந்து இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள்.

இந்த அதிர்வு மாறுபாட்டையே தனது சோதனைச் சாலையில் காலத்தில் தான் கண்டதாக கோஸிரெவ் உறுதிப்படுத்தினார்.

ஒரு செயல் செய்யும் போது காலத்தின் அடர்த்தியை அதிகமாக்கினால் அது உடனே மறைந்து விடுவதில்லை. சில பொருள்களின் மீது இந்த அடர்த்தி வெகு நேரம் நீடிக்கிறது.

இந்த அடர்த்தி ஈயத்தை விட இரு மடங்கு அதிகமாக அலுமினியத்திலும், மரத்தை விட ஈயத்தில் ஐந்து மடங்கு அதிகமாகவும் நீடிக்கிறது.

இத்தோடு காலம் பற்றிய இன்னொரு முக்கிய உண்மையையும் கோஸிரெவ் கண்டுபிடித்தார்.

காலம் என்னும் சக்தியில் ஒரு விதமான "பாயும் பாட்டர்ன்" (Flow Pattern) இருக்கிறது.

உயிரினம் அனைத்தையும் – மிருகங்கள், தாவரங்கள், மனிதர்கள் – கோஸிரெவ் எண்ணிப் பார்த்தார்.

நமது இடது பக்கமும் வலது பக்கமும் கண்ணாடி பிரதிபலிப்பு போல ஒன்றாக இருப்பதில்லை என்று அவர் கண்டார். இதயம் இடது பக்கம் வலது பக்கத்தை விட அதிகமாக உள்ளது.

கைக்ரோப்ஸ் என்னும் உயிரினம் சுழல் வடிவ அமைப்பிலான காலனிகளை உருவாக்குகின்றன (Spiral Structure).

புரோடோபிளாசம் என்னும் வாழ்வின் அடிப்படை அம்சம் கூட சீரானதாக இல்லை.

சீரற்ற தன்மை (Asymmetry) வாழ்க்கையின் அடிப்படை அம்சமாக அனைத்திலும் விளங்குகிறது.

"இது ஒரு தற்செயல் நிகழ்வு என்று எடுத்துக் கொள்ள முடியாது" என்று கோஸிரெவ் கூறுகிறார்.

இயற்கையே சீரற்ற தன்மையை தன் படைப்பில் அடிப்படை சக்தியாக உருவாக்கி இருக்கிறதோ என்று அவர் எண்ணினார்.

காலமும் இப்படி ஒரு விசேஷ தன்மையுடன் ‘பாய்கிறதோ’ என்று எண்ணினார் அவர்.

இது உண்மை என்றால் காலத்தைக் கண்ணால் பார்க்க முடியும்: அதை அளக்கவும் முடியும். சுழல்கின்ற கைராஸ்கோப் போன்ற சாதனம் ஒன்று தான் இதற்குத் தேவை.

இந்த சுழலும் சாதனம் மூலம் காலத்தின் பாட்டர்னை மாற்றினால் சக்தியை கூட்ட முடியும் அல்லது குறைக்க முடியும்!

இந்த ஒரு விஷயத்தைக் கண்டு பிடிக்க கோஸிரெவ் பல வருட காலம் தன் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். இறுதியில் முடிவு தெரிய வந்தது.

இடது பக்கம் சுழலும் அமைப்பில் (Left hand rotating system) காலம் பாய்தல் பாஸிடிவாக இருக்கிறது: அதாவது காலத்தின் சக்தி கூடுகிறது. வலது பக்கம் சுழலும் முறையில் காலத்தின் சக்தி நெகடிவாக இருக்கிறது. அதாவது குறைகிறது.

இடது பக்கமாக உள்ள மாலிக்யூல்களைக் கொண்ட டர்ப்பெண்டைன் போன்ற ஆர்க்கானிக் பொருள்களை கோஸிரெவின் சாதனத்தில் வைத்தால் சக்தி அதிகமாகிறது. (சாதனத்தில் எலாஸ்டிக் பக்கம் முள் அதிகமாக சாய்கிறது !)

சர்க்கரை போன்ற வலது பக்கமாக மாலிக்யூல்கள் கொண்ட பொருள்களை கோஸிரெவின் சாதனத்தில் வைத்தால் சக்தி வெகுவாகக் குறைகிறது.

கோஸிரெவின் முடிவின் படி நமது உலகம் ஒரு இடது பக்க அமைப்பு கொண்டது ! அதாவது காலம் பாய்தல் பாஸிடிவாக இதில் இருக்கிறது. இது நமது பிரபஞ்சத்திற்கே அதிக சக்தியைத் தருகிறது !

இன்னுமொரு அதிசய உண்மையையும் அவர் கண்டுபிடித்தார்.

காலத்திற்கு பாய்தல் பாட்டர்ன் உள்ளதைப் போலவே, பாய்தல் வேகமும் உள்ளது !

காரணத்திற்கு, விளைவிற்கும் உள்ள வித்தியாசமே பாய்தல் வேகமாகும்.

காலம் பாயும் போது ஒரு பொருள் தன் எடையை இழக்கிறது ! அதாவது மேலே எழும்புவது (Levitation) சாத்தியமாகிறது. !

இன்னும் விளக்கமாகச் சொல்லப் போனால், தரையிலிருந்து மேலே ஒருவரால் எழ முடியும் !

யோகிகளுக்கே உரித்தான சித்தி என்று சொல்லப்படும் இது காலத்தின் பாய்தல் வேகத்தினால் தான் ஏற்படுகிறது என்கிறார் கோஸிரெவ் !

அறிவியல் ரீதியாக படிப்படியாக இந்த மேலே எழும்புதலை அடைவதற்கு முடிகிறது !

இந்த மேலே எழும்புதல் மனிதருக்கு மட்டுமின்றி, மிருகங்கள் இயந்திரங்கள், மற்ற பொருள்கள் அனைத்திற்கும் பொருந்தும். அதாவது அனைத்துமே மேலே எழும்ப முடியும் !

டெலிபதி உட்பட அனைத்துமே காலத்தின் அபூர்வ சக்தியால் தான் ஏற்படுகிறது என்று தனது 17 வருட ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்தார் கோஸிரெவ் !

காலத்திற்கும் டெலிபதிக்கும் உள்ள தொடர்பை அறிவியல் பூர்வமாக விளக்கிய கோஸிரெவை அறிஞர் உலகம் வியப்புடனும் மரியாதையுடனும் பார்க்கிறது.

டெலிபதியை அறிவியல் பூர்வமாக அங்கீகரித்த முதல் பெரும் விஞ்ஞானி கோஸிரெவ் !

**காலம் பற்றிய ஆய்வுகள் கூறும் உண்மைகள்**

காலம் பற்றிய அறிவியல் ஆய்வுகள் இது வரை கூறும் முடிவுகளே பிரமிக்க வைப்பவையாக உள்ளன. இன்னும் அறிவியல் விஞ்ஞானிகள் நவீன கருவிகளை வைத்து ஆராய்ந்து இனி கூறப் போகும் உண்மைகள் நம் சிந்தனைப் போக்கையே மாற்றிவிடப் போகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. என்றாலும் இது வரை நாம் அறிந்துள்ள முடிவுகளால் நாம் அடையப் போகும் பயன்கள் என்ன? காலம் அனைத்தையும் நம் வசமாக்கும் சக்தி !

பாரத நாட்டில் தோன்றிய எண்ணற்ற மகான்களும், யோகிகளும் காலத்தை முற்றிலுமாக அறிந்தவர்கள். ஆகவே தான் அவர்கள் காலத்தை வென்ற கடவுளை காலாதீதன் என்று போற்றிப் பரவினர்.

காலத்தை வென்றவனை துதிப்பதன் மூலம் காலத்தால் ஏற்படும் கால தோஷங்கள் நீங்குவதற்கான வழி வகைகளைத் தாம் இயற்றிய பாடல்கள் மூலமும் தம்முடைய உபதேச மொழிகள் மூலமும் நமக்கு அறிவுறுத்தினர்.

## 20. விஞ்ஞான நகரில் விந்தை சோதனைகள்!

### விஞ்ஞான நகர்

டெலிபதி சோதனைகள் ரஷியாவில் நடந்த அளவிற்கு வேறெங்கும் நடக்க வில்லை என்றே கூறலாம். எத்தனை விதமாக சோதனைகளை நடத்த முடியுமோ அத்தனை விதமாகவும் ரஷிய விஞ்ஞானிகள் இந்தச் சோதனைகளை நடத்தி உள்ளனர்.

இந்தச் சோதனைகளில் குறிப்பிடத்தகுந்தவை நிகோலெய்வ் மற்றும் யூரி காமென்ஸ்கி ஆகிய இருவரும் நடத்தியவையே!

1966ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 19ம் தேதி கார்ல் நிகோலெய்வ் ஒரு முக்கியமான பரிசோதனைக்காக நோவோஸிபிர்ஸ்க் (Novosibirsk) விமான நிலையத்தில் வந்து இறங்கினார்.

சைபீரியாவில் உள்ள நோவோஸிபிர்ஸ்க் நகரத்திற்கு விஞ்ஞான நகரம் (Science city) என்ற செல்லப் பெயரும் உண்டு!

இந்த நகரம் விஞ்ஞானிகளுக்கே உரித்தான வகையில் சகலவிதமான சோதனைகளையும் செய்யக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்ட ஒன்று!

உலகின் மிகச் சிறந்த சிந்தனை நகரம் அல்லது 'சிந்தனைப் பெட்டகம்' என்று இதைச் சொல்லலாம். இங்குள்ள விஞ்ஞானிகளின் சராசரி வயது முப்பது! இவர்களது அறிவுத்திறன் (IQ) 130க்கும் மேல்!

நிகோலெய்வ், கோல்டன் வேலி ஹோட்டலில் (Golden Valley Hotel) அறை எண் 601ல் தங்கினார். அவரை பிரபலமான சோவியத் விஞ்ஞானிகள் வரவேற்றனர்.

அந்த விஞ்ஞானிகளுக்கு நிகோலெய்வ் ஒரு பரிசோதனைக்கான 'ஸ்பெஸிமன்'! அதிமானசிக சக்தி படைத்தவரான சைக்கிக் நிபுணரான நிகோலெய்வ் டெலிபதியை அந்த விஞ்ஞானிகள் முன்னர் நிரூபிக்க வேண்டும்.

பல நூறு மைல்களுக்கு அப்பால் மாஸ்கோவில் க்ரெம்ளினில் கடிகாரம் எட்டு மணியை அடித்தது, யூரி காமென்ஸ்கி என்ற பயோபிஸிஸ்ட் விஞ்ஞானிகள் குழுவினரிடையே அமர்ந்திருந்தார்.

அவரிடம் ஒரு சீலிடப்பட்ட உறையை விஞ்ஞானிகள் அளித்தனர். பின்னர் அவர் அமர்ந்திருந்த அறையைப் பூட்டினர். அந்த அறை விஞ்ஞான பரிசோதனைகளுக்காவே அமைக்கப்பட்ட எந்த வித புற சக்தியும் ஊடுருவ முடியாத தனி அறை!

காமென்ஸ்கிக்கு தன் டெலிபதி சோதனை எப்படி நடக்கப் போகிறதென்று தெரியாது. கமிட்டி சொல்படி நடக்க வேண்டும். கமிட்டியினர் ஆறு பொருள்களைத் தனித் தனியே கொண்டு வந்து தருவார்கள்.

அதை அப்படியே 1860 மைல்களுக்கு அப்பால் உள்ள நோவோஸிபிர்ஸ்க் நகரில் உள்ள நிகோலெய்வுக்கு டெலிபதி மூலம் அனுப்ப வேண்டும். டெலிபதி மூலம் எண்ணங்களை அனுப்புவதற்கான நேரம் பத்து நிமிடங்கள் மட்டுமே!

முதன் முதலாக ஒரு உலோகத்திலான ஸ்பிரிங்கை (Metal Spring) விஞ்ஞானிகள் காமென்ஸ்கியிடம் அளித்தனர்.

ஏழு சுருள்களுடன் இந்த உலோக ஸ்பிரிங் இருந்தது. அந்த சுருள்களைத் தன் விரல்களினால் தடவினார் காமென்ஸ்கி.

அதைத் தடவிய உணர்வும் பார்த்த உணர்வும் தன்னுள்ளே பரவுவதை உணர்ந்த காமென்ஸ்கி நெகோலெய்வ் முகத்தைத் தன் மனக்கண்ணில் கொண்டு வந்தார்.

நிகோலெய்வ் தன் முன்னால் உட்கார்ந்திருப்பது போலக் கற்பனை செய்தார்.

பிறகு அந்த ஸ்பிரிங்கை நிகோலெய்வின் தோளுக்குப் பின்னால் பார்ப்பது போலப் பார்க்க முயன்றார். கடைசியாக நிகோலெய்வின் கண்களைப் பார்க்க முயன்றார்.

அதே கணத்தில் நிகோலெய்வ் தனது கைகளில் ஏதோ ஒரு பொருள் இருப்பது போல உணர்ந்து அதைத் தன் கைகளால் தடவினார். இதை விஞ்ஞானிகள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"வட்ட வடிவமானது: உலோகத்தால் ஆனது: சுருள் சுருளாக இருக்கிறது" என்று ஒவ்வொரு வார்த்தையாக நிகோலெய்வ் கூறலானார்.

அடுத்தாற்போல காமென்ஸ்கி ஒரு ஸ்க்ரூடிரைவரைத் தன் கரத்திலே பிடித்து அதை டெலிபதி மூலம் நிகோலெய்வுக்கு அனுப்பினார். அதே கணம் நிகோலெய்வ், "நீளமானது: மெல்லியது: உலோகம் மற்றும் பிளாஸ்டிக்கால் ஆனது" என்று விவரிக்க ஆரம்பித்தார்.

விஞ்ஞானிகள் நூறு சதவிகிதம் இது சரியாக இருக்கிறது என்று அறிவித்தனர். பின்னால் காமென்ஸ்கி டெலிபதியைப் பற்றிக் கூறுகையில், "ஒவ்வொரு மனிதனுக்கும் டெலிபதி மூலம் எண்ணங்களை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான சக்தி இருக்கிறது.

ஆனால் மற்ற திறமைகளை வளர்த்துக் கொள்வது போலவே இதையும் பயிற்சி மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மற்ற துறைகளில் இருப்பது போலவே டெலிபதியிலும் சிலருக்கு மற்றவரை விட அதிக சக்தி இருக்கிறது." என்றார்.

நிகோலெய்வ், ஏ.ஜி. அர்லாஷின் என்பவருக்கு எண்ணங்களை அனுப்புவதில் வெற்றி பெற்றார்: என்ற போதிலும் காமென்ஸ்கியுடன் டெலிபதி தொடர்பு எப்போதுமே விரைவில் கிடைத்தது.

ஆயிரக்கணக்கான பொருள்கள் உலகில் இருக்கும் போது மெட்டல் ஸ்பிரிங்கையும், ஸ்க்ரூடிரைவரையும் எப்படி நிகோலெய்வால் விவரிக்க முடிந்தது?

அந்தப் பொருள்களை மட்டும் எப்படி அவர் எண்ணம் மூலம் பெற்றார்?

டாக்டர் கோகன் என்பவர், "வெற்றிகரமான இந்த சோதனைகள் அதிமானசிக சக்தியை – பாராசைக்காலஜியை – ஒரு அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையாக ஆக்கி விட்டது" என்றார். காமென்ஸ்கி கூறியதையே நிகோலெய்வும் வலியுறுத்துகிறார். ஒவ்வொரு மனிதனும் டெலிபதி ஆற்றலை நிச்சயமாக வளர்த்துக் கொள்ள முடியும் என்கிறார் அவர்.

தனது சொந்த வாழ்க்கையிலும் டெலிபதி பெரிதும் உதவி இருக்கிறது என்று கூறுகின்ற நிகோலெய்வ் எடுத்துக்காட்டாக தன் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்:-

"எனது மகனை நானே வளர்க்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தேன். எனது பையன் வாலிப பிராயத்தை அடைந்திருந்த சமயம் கோடை காலத்தில் ஒரு நாள் வடக்கே உள்ள ஒரு கிராமத்திற்கு தன் நண்பர்களுடன் சென்று வருவதாகச் சொல்லி என்னிடம் கெஞ்சிக் கேட்டு அனுமதி வாங்கினான்.

அவனுக்கு அனுமதி கொடுத்த நான் நீ எங்கிருந்தாலும் எனக்கு ஒரு கடிதம் போட்டு விடு என்றேன். ஆனால் அவனோ எனக்கு கடிதமே போடவில்லை. ஆகவே ஒரு நாள் இரவு ரயில் ஏறி எனது மகனும் அவனது நண்பர்களும் செல்வதாகக் கூறிய கிராமத்திற்கு பயணப்பட்டேன்.

நான் அந்த கிராமத்தை அடைந்த நேரம் பின்னிரவு நேரம். ஒரே கும்மிருட்டு. எங்கே அவன் இருக்கிறான் என்பதே எனக்குத் தெரியாது என்றாலும் முதலில் என்னை ரிலாக்ஸ் செய்து கொண்டு நடக்க ஆரம்பித்தேன். ஏதோ ஒரு உந்துசக்தி என்னை வழி நடத்துவது போல உணர்ந்தேன். ஒரு சிறிய வீட்டிற்கு முன் வந்து என் கால்கள் நின்றன.

கதவைத் தட்டினேன். பதில் இல்லை. பிறகு கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். பீர் பாட்டில்களும், வோட்கா மதுக் குப்பிகளும் தரையிலே சிதறிக் கிடக்க ஆங்காங்கே சீட்டுக் கட்டுகள் சிதறி இருக்க நடுவே குடித்து விட்டு மயங்கிக் கிடந்த என் மகனைக் கண்டேன். அவனை மெதுவாகத் தூக்கிக் கொண்டு என்னுடன் அழைத்துச் சென்றேன்.

கண்ணியமான ஒரு வாழ்க்கையை அவன் நடத்த சைக்கிக் சக்தி உட்பட பல்வேறு சக்திகளும் எனக்குத் தேவையாக இருந்தது." டெலிபதி உட்பட சைக்கிக் சக்தி மூலம் தன் மகனை நல்வழிப்படுத்தியதை நிகோலெய்வ் விரிவாக விவரித்துள்ளார்.

## 21. உணர்ச்சிகளையும் டெலிபதி போல அனுப்பலாம்

**மைக்கேல்** குனி (Mikhail Kuni) என்பவர் வுல்ப் மெஸ்ஸிங் போலவே பிரபலமான சைக்கிக் நிபுணர். இவரும் ரஷியாவைச் சேர்ந்தவர். வுல்ப் மெஸ்ஸிங்கைப் போலவே இவரும் ஏராளமான மேடை நிகழ்ச்சிகளை நடத்தியவர்.

கலைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம் ஒரு நாள் அவருக்கு வருத்தம் கலந்த சோக உணர்ச்சி தோன்றியது. அவரது தாயாரை ஒரு எலி கடித்து விட்டது போலவும் அதனால் அவருக்கு பேராபாயம் வந்து விட்டது போலவும் வருத்த உணர்ச்சி அவருக்கு மேலிட்டது. தன் தாய் படுக்கையில் படுத்திருப்பது போலவே அவர் உணர்ந்தார்.

ஜன்னல் வழியே சோகப்பார்வை ததும்ப நின்று கொண்டிருந்த அவரை நண்பர்களால் தேற்றவே முடியவில்லை. வைட்ஸ்க் என்ற அவரது ஊரிலிருந்து அன்று பிற்பகல் அவருக்கு ஒரு தந்தி வந்தது. மாஸ்கோவிலிருந்து பல நூறு மைல்கள் தள்ளி உள்ள நகரம் அது.

"அம்மா அபாயகரமாக நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். உடனே வரவும்" பிப்ரவரி 21ம் தேதியிட்ட தந்தி அது. தந்தியைப் படித்தவுடன் அலறி அடித்துக் கொண்டு வைட்ஸ்க் நோக்கி குனி விரைந்தார். அங்கே அவரது தாயார் மிகவும் அபாயகரமான நிலையில் படுக்கையிலே கிடந்தார். பிப்ரவரி 11ம் தேதி ஒரு எலி அவரது காலைக் கடித்து விட்டது. எலிக்கடி அபாயகரமானது என்று யாருமே நினைக்க வில்லை. 20ம் தேதி அவருக்குக் கடுமையான ஜுரம் வந்தது. 21ம் தேதி காலை அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழு அவரது காலை ஆம்புடேட் செய்து வெட்டி விட வேண்டியது தான் என்று முடிவு செய்தனர். இதில் அவர் ஒரு டயபடிஸ் நோயாளி வேறு!

டாக்டர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த போது தான் குனியின் தாயாருக்குத் தனது மோசமான நிலைமை தெரிய வந்த்து. காலை பத்து மணிக்கு குனியின் தாயார் மிகவும் வேதனைப்படவே அதே நேரம் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்த குனி அந்த உணர்ச்சிகளை உணர ஆரம்பித்தார்.

குனியின் தாயாரின் உடல் நிலை பற்றிய காட்சி அவரது சைக்கிக் வாழ்க்கையையே முற்றிலும் மாற்றி விட்டது. ஓவியராகப் பயிற்சி பெற எண்ணியவர் அதை விட்டுவிட்டு சைக்கிக் துறையிலே இறங்கி விட்டார். பல நூறு பேர்களுடன் டெலிபதி நிகழ்வுகளைச் சோதனை செய்த அவர் உணர்ச்சிகளைக் கூட சைக்கிக் சக்தி மூலமாக அனுப்ப முடியும் என்று கண்டுபிடித்தார்.

"ஊமைகளும் செவிடர்களும் டெலிபதி உணர்வுகளை வேகமாகச் செலுத்த முடியும்" என்பதையும் அவர் கண்டறிந்தார்.

ஊமையாக இருப்பவரும் செவிடாக இருப்பவரும் ஒரு காட்சியைத் தெளிவாக அகக் கண்ணில் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

இந்தத் திறனே அவர்களைத் டெலிபதியில் அதிக ஆற்றல் உள்ளவர்களாகச் செய்கிறது என்கிறார் டாக்டர் கே.ஐ. ப்ளேடோனாவ் என்ற ரஷிய விஞ்ஞானி.

குனி பல பரிசோதனைகளைச் செய்து பார்க்க ஆரம்பித்தார். அவற்றில் ஒன்று – "உணர்தல் – பார்த்தல்" (Feel and see) சோதனையாகும்.

இந்தச் சோதனையைச் செய்து பார்த்த குனி கூறுகிறார்:-

"எனது வலக் கரத்தில் சூடான டீ இருந்த கிளாஸ் டம்ளரைப் பிடித்துக் கொண்டிருந்தேன். இந்த உணர்வை அடுத்த அறையில் இருந்த 17 பேருக்கு அனுப்ப முடிவுகள் செய்தேன்.

இந்த 17 பேரும் ஹிப்னாடிஸ நிலையில் இருந்தனர். அவர்கள் என்ன உணர்கிறார்கள் என்று கேட்கப்பட்டது. எல்லோரும் தங்களது வலது கை சூடாக இருப்பதாகத் தெரிவித்தனர் !"

பிறகு ஒரு குண்டூசியால் குனி தன்னைக் குத்திக் கொணடார். மற்றவர்களிடம் என்ன நடந்தது என்று கேட்கும் முன்பாகவே அவர்கள் அனைவரும் குண்டூசி குத்திய வலியால் 'ஆ' என்று அலறினர்.

இதே சோதனைகளைப் பலமுறை 12 முதல் 20 பேர் அடங்கிய குழுக்களில் வெற்றிகரமாக அவர் செய்து பார்த்தார். சூடான டீ மூலம் வெப்பத்தை உணர்தல், குண்டூசி குத்தியதால் ஏற்படும் வலியை அனுபவித்தல் போன்ற உணர்ச்சி அனுபவங்கள் ஒரு புறம் இருக்க ஒலியை – சப்தத்தை அல்லது ஓசையை டெலிபதி மூலமாக அனுப்ப முடியுமா என்பதையும் விஞ்ஞானிகள் தெரிந்து கொள்ள விரும்பினர். இதற்கான சோதனைகளையும் நடத்தினர்.

லெனின்கிராடில் உள்ள சோதனைச்சாலையில் காமென்ஸ்கி நீண்ட மற்றும் மெல்லிய ஒலிகளை ஒலித்து வார்த்தைகளை மனதில் ஒருமுகப்படுத்தினார். இந்த சங்கேத வார்த்தைகள் ஏழு மோர்ஸ் சிக்னல்களைக் கொண்டிருந்தன.

இவை ஏழு முறை ஒலிக்கச் செய்யப்பட்டன. காமென்ஸ்கி அனுப்பிய ஏழு சிக்னல்களில் மூன்றை நிகோலெய்வ் சரியாக உடனே அறிந்து கொண்டார். அடுத்த சோதனையில் ஏழில் ஆறை சரியாக அறிந்தார்.

'இரா' (IRA) என்ற வார்த்தையை சரியாக அவர் கூறினார். ஜெனைன் என்ற வார்த்தையையும் லெனின் என்ற வார்த்தையையும் அவர் உடனே அறிந்து கொண்டார்.

21 எழுத்துக்கள் டெலிபதி மூலம் அனுப்பப்பட்டன. அவற்றில் 18 எழுத்துக்கள் உடனடியாக டெலிபதி மூலம் பெறப்பட்டன.

மாஸ்கோ நகரிலிருந்து டாம்ஸ்க் என்ற நகர் சுமார் 3000 மைல்கள் தள்ளி உள்ளது. டெலிபதி மூலம் சங்கேத வார்த்தைகளை 3000 மைல் தூரத்திற்கு சோவியத் விஞ்ஞானிகள் வெற்றிகரமாக அனுப்பினர்.

டெலிபதி மீது அவ்வளவாக நம்பிக்கை இல்லாத 'பாபாவ் பயோ–இன்பர்மேஷன் பிரிவின்' டைரக்டரான டாக்டர் இப்போலிட் கோகன் சோவியத் பத்தரிகையாளர் கூட்டத்தைக் கூட்டினார். அதில் 'மற்ற தொடர்பு சாதனங்கள் தோல்வி அடைந்த நிலையில் டெலிபதி மூலம் தகவல்களை அனுப்பலாம்' என்று கூறினார்.

முக்கியமாக விண்வெளிப் பயணத்தில் சிக்கலான கட்டங்களில் மற்ற தொலைத் தொடர்புச் சாதனங்கள் இயங்காத நிலையில் டெலிபதி மூலம் செய்திகளை அனுப்புவது சாத்தியம் என்று அவர் கூறினார்.

"விண்வெளி பயணத்தில் ஒரு ரேடியோ இயங்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அவ்வப்போது ஐந்து என்ற எண்ணை மட்டும் டெலிபதி மூலம் அனுப்பினால் போதும்.

பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையம் ஐந்து என்ற எண்ணை அறிந்து ரேடியோ பழுதுபட்டுள்ளது: அதை உடனே சரி செய்ய வேண்டும் என்று உணர்ந்து செயல்பட முடியும்.

இதற்கு விண்வெளி வீரர் டெலிபதி மூலம் செய்திகளை அனுப்பும் திறன் படைத்தவராக இருக்க வேண்டும். நல்ல பயிற்சி தந்தால் செய்திகளை சுலபமாக அனுப்ப முடியும்:

பெறவும் முடியும்!" - இவ்வாறு டாக்டர் கோகன் விரிவாக டெலிபதியின் பயன்களை எடுத்துரைக்கிறார். அவசர கால செய்திகளை அனுப்ப டெலிபதி ஒரு வரப்பிரசாதம்!

## 22. சுவை உணர்ச்சியை அனுப்பிய செக் விஞ்ஞானிகள்

சோவியத் விஞ்ஞானிகள் தீவிரமாக டெலிபதி சோதனைகளைச் செய்து வருவதை செக்கோஸ்லேவேகிய விஞ்ஞானிகள் அறிந்தனர். அவர்களும் அதி நவீன கருவிகளை உபயோகித்து டெலிபதி சோதனைகளைச் செய்து பார்க்க ஆரம்பித்தனர்.

இவர்கள் உணர்ச்சி, ஒலி இவற்றைத் தாண்டி சுவையை டெலிபதி மூலம் அனுப்ப முடியுமா என்று சோதனை செய்து பார்க்கத் தீர்மானித்தனர்.

இனிப்பு சுவை அல்லது புளிப்பு சுவை இவற்றை டெலிபதி மூலம் உணரச் செய்ய முடியுமா என்று சோதனை செய்து பார்க்கத் தீர்மானித்தனர்.

இவைகளைத் தொடர்ந்து செய்து வரும் போதே ஒலியை வெற்றி பெற்று அனுப்புவதில் 98 சதவிகித வெற்றியையும் செக் விஞ்ஞானிகள் பெற்றனர்.

பாராசைக்காலஜி அல்லது அதிமானசிக இயலை சைக்கோட்ரானிக்ஸ் என்று பெயர் மாற்றம் செய்து பல்வேறு சோதனைகளை நடத்தி வரும் செக் விஞ்ஞானிகள் மனிதனிடம் இருக்கின்ற அதி மானுட சக்தியையும் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து அதில் வெற்றியும் பெற்றனர்.

ரெடிஸ்லெவ் காட்கா என்ற அறிஞர் மனிதர்கள், விலங்குகள், செடி, கொடிகளைச் சுற்றி ஒரு மெல்லிய உறை சக்தி (Energy shield) இருப்பதை நிரூபித்தார்.

இந்த சக்தி ஒரு மனிதனிடமிருந்து இன்னொருவருக்கும், ஏன், விலங்கிடமிருந்து மனிதனுக்கும் கூடப் பாய்ந்து செல்ல முடியும் என்று அவர் நிரூபித்தார்.

இந்த சக்தி உறையே டெலிபதிக்கான முக்கிய காரணம் என்று அவர் கருதுகிறார். அவரது கருத்தை ஆதாரமாகக் கொண்டு அங்கே ஆராய்ச்சிப் பணிகள் தீவிரமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன!

**23. மனதின் அதிசய ஆற்றல்**

மனித மனத்தின் மர்மங்களை பல்கேரிய விஞ்ஞானிகளும் ஆராயத் தொடங்கினர்.

டாக்டர் ஜார்ஜி லோஸனாவ் (Dr. Georji Lozanov) என்னும் விஞ்ஞானியே பாராசைக்காலஜி நிறுவனத்தின் தலைவர். சோபியா பல்கேரிய நகர்களில் முக்கியமான ஒன்று. அந்த நகரத்தின் மையத்திலே உள்ள சோதனைச் சாலையில் அவர் நடத்தி வரும் சோதனைகளும் அவற்றின் முடிவுகளும் உலகையே பிரமிப்பில் ஆழ்த்திவிட்டன.

டாக்டர் லோஸனாவின் குழுவில் வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றுள்ள 30 சிறந்த விஞ்ஞானிகள் இடம் பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் யோசனை ஆற்றலைப் பற்றி (Suggestology) பல சோதனைகள் நடத்தப்பட்டன.

இங்கு ஒரு அறையில் இருக்கும் ஒரு கருவியின் மதிப்பு மட்டுமே எழுபது லட்சம் ரூபாய் மதிப்புடையது என்றால் முழு சோதனைச்சாலையின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகித்துப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கும்!

கனவு காணும் போது இமைகள் துரித இயக்கத்தில் இருப்பதை ஆராய்வதிலிருந்து யோகா, ஈ.எஸ்.பி. முதலிய அனைத்துத் துறைகளையும் லோஸனாவ் ஆராய்ந்தார்.

மைக்கேல் ட்ரோஜெனோவிச் என்பவர் 53 வயதான ஒரு எளிய விவசாயி. பல்கேரிய கிராமமான ஸ்டாரா ஜகோரா என்னுமிடத்தில் உள்ள அவர் வீட்டில் தரையிலிருந்து சர்வ சாதாரணமாக அவர் மேலெழும்புகிறார்!

விஞ்ஞான பூர்வமான சோதனைக்குட்பட்டு விஞ்ஞானிகளின் முன்னே சுமார் 4 அடி உயரம் மேலெழும்பினார். அதைப் பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

உட்கார்ந்து கண்களை மூடியவுடன் அவர் மெதுவாக மேலெழும்புவதைப் பார்த்த விஞ்ஞானிகள் இது ஹிப்னாடிஸ செயல் இல்லை என்று புரிந்து கொண்டனர். ஏனெனில் கண்களை மூடிக்கொள்வதால் கண்களின் மூலம் நிகழ்த்தும் ஹிப்னாடிஸ வசியம் இல்லை என்பது உறுதி ஆயிற்று.

கயிறு, இயந்திர சாதனங்கள், கண்கட்டு வித்தை, ஒளித்து வைத்து இயக்கப்படும் சாதனங்கள் இவற்றில் எதுவும் அவரிடம் இல்லை என்பதை அங்கு குழுமியுள்ள விஞ்ஞானிகள் ஆராய்ந்து உறுதிப்படுத்தினர்.

டாக்டர் லோஸனாவ் பல இந்திய யோகிகளைச் சந்தித்து அவர்கள் மிதப்பதை போட்டோ எடுத்துள்ளார்.

இவரது ஆராய்ச்சிகள் அனைத்திற்கும் செக் அரசு மானியப் பணம் கொடுத்து உதவுகிறது.

சஜஸ்டாலஜி என்னும் யோசனை இயல் என்னும் புதிய துறையை லோஸனாவ் ஆராய்ந்தார்.

யோசனை என்பது மனதை விரிவுபடுத்துவதாகும். மனித மனத்தின் ஆற்றலையும், இதுவரை அறிந்திராத அதன் சக்திகளையும், திறமைகளையும் ஆராய்வது லோஸனாவின் நோக்கம்.

யோசனை அல்லது எண்ணத் தூண்டல் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை ஆராய விழைந்த அவர் மருத்துவம், கல்வி போன்ற எல்லா துறைகளிலும் யோசனை இயல் என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டறிந்தார்.

‘யோசனை இயல்’ கொள்கையின் படி நாம் எப்போதுமே ‘விழிப்பு நிலையில்’ இருக்கிறோம். இந்த நிலையில் நம்மைச் சுற்றி நடப்பது அனைத்தையும் நம்மால் நன்கு அறிய முடியும்.

ஈ.எஸ்.பி.யும் (எக்ஸ்ட்ரா சென்ஸரி பெர்செப்ஷன்) யோசனையும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. மனிதர்களின் ஈ.எஸ்.பி. ஆற்றலை யோசனைகள் மேம்படுத்தும் என்பதை லோஸனாவ் நிரூபித்தார்.

பல இந்திய யோகிகளைச் சந்தித்து அவர்களுடன் நீண்ட நேரம் கருத்துப் பரிமாற்றம் செய்த ஸோஸனாவ் நல்ல எண்ணங்களையும் யோசனைகளையும் அனுப்புவது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.

நல்ல யோசனைத்தூண்டல் பேச்சிலுள்ள குறைபாடுகளைப் போக்கும்: காது கேளாத குறையை நீக்கும்: பார்வைக் குறைவைப் போக்கும் என்றார்.

மனிதனிடம் மறைந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களை எண்ணத் தூண்டல் அல்லது யோசனை மூலம் பெறலாம் என்று ஸோஸனாவ் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மனித மனத்தின் மூலமாக நோய்களைத் தீர்ப்பதை ‘Mental healing’ – ‘மனோ சிகிச்சை’ என்று லோஸனாவ் அழைக்கிறார்! உங்களது எண்ணங்களே உங்களுக்கு நோயை ஏற்படுத்த முடியும் என்கிறார் லோஸனாவ்!

பல பேருடைய வாழ்க்கை பயம் நிறைந்ததாக இருக்கிறது. மரணம் பற்றிய பயம், வியாதி பற்றிய பயம், ஏழ்மை பற்றிய பயம், வாழ்க்கையை எப்படி நடத்திச் செல்லப் போகிறோம் என்கிற பயம்... இவையெல்லாம் மனித வாழ்க்கையைக் கெடுக்கும் விஷயங்கள்.

மனித வாழ்க்கை கலப்பற்ற, தூய்மையான, அழகிய நீரோட்டம் போன்ற மகிழ்ச்சி ஓடையாகப் பாய்ந்து செல்ல வேண்டும். ஆனால் தேவையற்ற பயங்களைச் சுமந்து கொண்டே இருப்பதால் மகிழ்ச்சியுடன் வாழ்வது என்பது இயலாத ஒன்றாக ஆகிறது!

வெறும் உடல் பயிற்சிகளாலும், கட்டுமஸ்தான உடல் அமைப்பாலும் நல்ல மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமையாது. ஆழ்மனதின் உளவியல் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமைவதற்கு முக்கியமான காரணம் என்கிறார் லோஸனாவ்.

சரியான, நல்ல எண்ணங்கள் ரத்த ஓட்டத்தைச் சீராக்க முடியும்: ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியும்: சுவாசத்தை சீராக்க முடியும் – என லோஸனாவ் நடத்திய சோதனைகள் நிரூபித்துள்ளன.

பல்கேரிய நாட்டில் பாங்க்யா நகரில் உள்ள மருத்துவ நிலையத்தில் அவர் 20 நிமிட யோசனை வகுப்பை நடத்தி வந்தார். மனதின் எண்ணங்களை உள்ளார்ந்து ஒருமுகப்படுத்துவதன் மூலம் உடல் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்கிறார் லோஸனாவ்.

1965ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி மயக்க மருந்தே கொடுக்காமல் எண்ணத்தின் மூலம் உடலை மரக்க வைத்து ஒரு ஆபரேஷனை அவர் வெற்றிகரமாக நடத்தி விட்டார்!

மருத்துவ வரலாற்றில் இது தனி இடம் பெற்று விட்டது! 50 வயதான ஒரு ஜிம்னாஷிய ஆசிரியர் தன்னை இந்த சோதனைக்கு உட்படுத்திக் கொள்ளலாம் என்று தாமாகவே முன் வந்து சொன்னார். சிக்கலான அடிவயிற்றில் செய்யப்படும ஹெர்னியா ஆபரேஷனை அவருக்குச் செய்ய வேண்டியிருந்தது.

"ஆபரேஷன் நடக்கும் சமயம் முழுவதும் முழு உணர்வுடன் இருப்பீர்கள்" என்று ஆபரேஷனை நடத்திய டாக்டர் இவான் கால்போவ் நோயாளியிடம் தெரிவித்தார். இது டெலிவிஷனில் காண்பிக்கப்பட்டது. படமும் எடுக்கப்பட்டது.

இரண்டு அங்குல நீளம் உடலைக் கீறி ஆபரேஷனை ஆரம்பித்தனர். நோயாளி வலியே தெரியாமல் முகம் மலர்ந்திருந்தார்! "உடல் நிலை பிரமாதமாக இருக்கிறது" என்று அறிவித்த நோயாளி ஆபரேஷன் முடியும் வரை வலியே இன்றி சாதாரணமாக இருந்தார். பின்னர் பூரண குணமானார்.

ஆனால் இந்த "எண்ணம் மூலம் ஆப்ரேஷன்" என்ற உத்தியை மருத்துவ உலகம் வன்மையாகக் கண்டித்தது. ஹெர்னியா ஆபரேஷன் பற்றிய சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வர ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது.

ஆயிரம் டாக்டர்கள் அழைத்து ஒரு பெரிய மகாநாடு நடத்தப்பட்டது. அதில் ஆபரேஷன் தியேட்டரில் எடுத்த படம் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

டாக்டர்கள் தீவிர விவாதத்தில் ஈடுபட்டு ஆபரேஷன் நடந்த விதத்தைத் தீவிரமாக விமரிசித்துக் கொண்டிருந்தனர். விவாதத்தின் முடிவில் லோஸனாவ் நோயாளியை அரங்கிற்கு அழைத்து வந்தார்.

முழு திருப்தியுடன் தான் இருப்பதாக அறிவித்த நோயாளி தான் பூரண குணத்துடன் இருக்கும் போது டாக்டர்கள் ஏன் வீண் சர்ச்சையில் ஈடுபட வேண்டும் என்று கேட்டு டாக்டர்களைத் திகைக்க வைத்தார்.

இந்த ஆபரேஷன் பற்றிய திரைப்படம் 1967ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரோம் நகரில் நடந்த அகில உலக மெடிகல் மகாநாட்டிலும் காண்பிக்கப்பட்டது. எண்ண சக்தி பெரும் சக்தி! மனதிற்கு எதையும் மாற்றும் வல்லமை உண்டு என்பதை நிரூபித்தார் லோஸனாவ்!

## 24. வாங்கா டிமிட்ரோவா

பல்கேரியா, கிரீஸ் ஆகிய இரு நாடுகளின் எல்லை ஓரத்தில் இருக்கும் நகர் பெட்ரிச்.

அங்கே வாங்கா டிமிட்ரோவா என்ற கண்பார்வை அற்ற பெண்மணி பல்லாயிரக்கணக்கானோருக்கு அவர்கள் வாழ்க்கையில் எதிர்காலத்தில் என்னென்ன நடக்கப் போகிறது என்பதை திரைப்படக் காட்சிகளைப் பார்ப்பது போலப் பார்த்து 'சீன் சீனாக' விவரித்தார்!

ஆயிரக் கணக்கானோரின் வாழ்க்கையில் பின்னால் நடக்க இருப்பதை இவரால் எப்படி துல்லியமாகக் கண்டு உரைக்க முடிந்தது? விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய ஆரம்பித்தனர். புள்ளி விவரங்களின் படி 80 சதவிகிதம் அவரது கூற்றுக்கள் அப்படியே பலிப்பதை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

ஒரு டெலிவிஷனைப் போட்டவுடன் காட்சிகளைக் காண்பதைப் போல அவரால் காட்சிகளைக் காண முடிகிறதா? இல்லை! சில நாட்களில் அவரது சைக்கிக் சக்தி வேலை செய்வது இல்லை. தொலைந்து போன நண்பர்கள், உறவினர்கள் பற்றி உடனுக்குடன் அவர் அறிவிப்பது வழக்கம்.

யூகோஸ்லாவியா போரில் ஈடுபட்ட சமயம் காணாமல் போன தங்கள் கணவன்மார்களைப் பற்றிக் கவலைப்பட்ட அவர்களது மனைவிமார்கள் வாங்காவை சந்தித்த வண்ணமிருந்தனர்.

"உங்கள் கணவன் இறக்கவில்லை. அவர் சீக்கிரமே வருவார்" என்ற ஆறுதல் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுடன் பலரும் திரும்புவர்.

அப்படியே கணவன்மார்கள் விரைவிலேயே வீடு திரும்புவர்! வாங்காவின் புகழ் வெகு சீக்கிரம் பரவலாயிற்று.

காணாமல் போன தன் மகனைப் பற்றிக் கவலைப்பட்ட ஒரு விவசாயி வாங்காவிடம் வந்தார். "உங்கள் மகன் தற்கொலை செய்து கொண்டான். அவன் உடல் உங்கள் வீட்டின் அருகில் உள்ள ஏரியில் இருக்கிறது" என்றார் வாங்கா. அப்படியே அவனது உடல் ஏரியிலிருந்து மீட்கப்பட்டது.

பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இறந்து போன தன் சகோதரியின் சாவில் மர்மம் இருப்பதாக உணர்ந்த ஒருத்தி வாங்காவை அணுகினாள்.

"உங்கள் சகோதரியை அவள் கணவனே கொலை செய்து விட்டான். சோபியா நகரில் கொலை நடந்த சமயம் இருந்தது போல அலிபி சாட்சியை அவன் உருவாக்கி விட்டான்" என்று நடந்த உண்மையை வாங்கா விவரித்தார். தீவிர விசாரணைக்குப் பின்னர் உண்மை அனைத்தும் வெளிவந்தது.

வாங்காவை டாக்டர் லொஸனாவ் விஞ்ஞானபூர்வமாக ஆராய ஆரம்பித்தார். சோதனைகளின் முடிவில் லோஸனாவ், "வாங்கா டிமிட்ரோவா பற்றிய பல்வேறு கதைகள் கற்பனையில் உதித்தவை அல்ல. சில நிகழ்ச்சிகள் வேண்டுமானால் மிகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் உண்மையிலேயே அவர் அபூர்வமான திறமைசாலி" என்றார்.

யூகோஸ்லேவிய எழுத்தாளர் ஒருவர் டாக்டர் லோஸனாவிடம் உலகிலேயே மிகச் சிறந்த தீர்க்கதரிசன வாக்கு நல்குபவர் என்று வாங்காவை கூறலாமா என்று கேட்டார்

அதற்கு லோஸனாவ், "இதற்கு பதில் சொல்வது கஷ்டம்." வருங்காலத்தை எடுத்துக் கூறுவது என்பது ஒரு கவிதை எழுதுவது போல. பயிற்சியும் உத்வேகமும் சேர்வதால் எழுப்பப்படும் வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கூறும் திறமை அவரிடம் இருக்கிறது.

சில சமயம் கேள்விக்கு ஒரு நிமிடத்திலேயே பதில் வருகிறது: சில சமயம் பல மணி நேரம் ஆகிறது. டெலிபதியும் விளையாட்டு வினோதமும் அவரது பதில்களில் கலந்து வந்தன. என்றாலும் கூட சோதனைகளின் முடிவுகள் தெரிவிப்பது அதிசயமாக இருக்கிறது.

அதாவது ஒருவரது எதிர்காலத்தை அவரை நேரில் பார்த்தும் அவரால் கூற முடிகிறது: நேரில் பார்க்காத போதும் கூற முடிகிறது. இது மற்ற எல்லா சைக்கிக் நிபுணர்களிடமிருந்து அவரை மேம்படுத்திக் காட்டுகிறது என்றார்.

எதிர்கால நிகழ்ச்சிகளை சினிமாப் படம் போலக் கண்டு அப்படியே அவரால் கூற முடிகிறது என்பதை எப்படி விளக்குவது? எங்கிருந்து இந்தக் காட்சிகளை அவரால் பெற முடிகிறது? தீர்க்க தரிசனம் அல்லது வருங்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை துல்லியமாக இடம், நேரம், தேதி ஆகிய நுண்ணிய விவரங்களுடன் எப்படிக் கூற முடியும்?

இதற்கு விஞ்ஞானிகள் ஒரு கொள்கையைக் கூறுகின்றனர். அதாவது காலம் என்பது கன்வேயர் பெல்ட்டில் ஓடும் பலகைகள் போல என்கின்றனர் அவர்கள்.

"அடுக்கு வீடுகள் வரிசையாக கட்டப்பட்டு இருக்கும் ஒரு இடத்தில் சற்றுத் தள்ளி இருக்கும் வீட்டைப் பார்ப்பது போல கன்வேயர் பெல்ட்டில் சில நாட்கள் அல்லது சில வருடங்கள் தள்ளி நடக்க இருப்பதை அவர்களால் எளிதில் பொறுக்கி எடுத்துப் பார்க்க முடிகிறது" என்பது அவர்களின் விளக்கம்.

முனிவர்கள், ரிஷிகள், தீர்க்கதரிசிகள் ஆகியோர் உயரமான ஒரு இடத்தில் இருந்து காட்சிகளைப் பார்ப்பவர்களோடு ஒப்பிடப்படுகிறார்கள். அவர்களால் தொலைதூரத்தைப் பார்க்க முடியும். அவர்கள் “Spacious Present” அல்லது "அகண்ட நிகழ்காலத்தை" அல்லது "எப்போதுமே நகர்ந்து கொண்டிருக்கும் நிகழ்காலத்தைப்" பார்க்கும் வல்லமை படைத்தவர்களாக இருக்கின்றனர்.

மற்றவர்கள் அப்போது நடப்பதை மட்டுமே பாரக்கக் கூடிய சூழ்நிலையில் இருக்கும் போது, இவர்களோ யாருடைய வாழ்க்கையையும் பல வருடங்கள் தள்ளிப் பார்க்கும் திறன் உடையவர்களாக இருக்கின்றனர்.

வாங்காவுடன் லோஸனாவ் நடத்திய சோதனைகள் நமக்கு ஒரு புதிய உண்மையைப் புலப்படுத்துகின்றது.

ஒவ்வொருவரிடமும் அவரது வருங்காலத்தில் நடக்கப் போகின்ற நிகழ்ச்சிகளின் விதை (Seed) பொதிந்து இருக்கிறது. இதை உணர்ந்து அறியக்கூடியவர்கள் பார்த்தவுடன் வருங்காலம் எந்த வகையில் (Pattern) ஒருவருக்கு அமைய இருக்கிறது என்பதை இனம் கண்டு உடனே கூறி விடுகின்றனர்.

விதை மாமரத்தின் விதை என்றாலும் அது நீடித்து இருக்குமா? எத்தனை கிளைகளைக் கொண்டிருக்கும்? இருபதா? அறுபதா? எத்தனை பழங்களை அது தரும்? இவற்றையெல்லாம் கண்டறிந்து கூறுவது அபூர்வமான, விசித்திரமான விஷயம் தான்!

சைக்கிக் சோதனைகளை நடத்திய லோஸனாவ், "தீர்க்கதரிசனம் அல்லது வருங்காலம் உரைக்கும் திறனை நிச்சயம் அறிவியல் ஆராய்ந்து அதை எப்படிச் செய்ய முடிகிறது என்பதையும் கண்டு பிடித்து விடும்" என்று உறுதிபடக் கூறுகிறார்.

வாங்கா நமது பிரக்ஞையில் பொதிந்து கிடக்கும் நிகழ்வுகளைச் சுலபமாக எடுத்து விடுகிறார். அதை அப்படியே உரைத்து விடுகிறார்.

டாக்டர் லோஸனாவ் வாங்காவை முதன் முதலில் சந்தித்த போது வாங்கா, "ஜார்ஜி லோஸனாவ்! இவ்வளவு சின்ன வயதில் நீ ஏன் என்னிடம் வந்தாய்? நீ ஒரு டாக்டர் –

ஹிப்னாடிஸத்தால் அனைவரையும் குணப்படுத்தப் போகிறாய்! என்னை சோதனை செய்து பார்க்க விரும்புகிறாய்! ஆனால் இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாயே! இன்னும் சில வருடங்கள் போகட்டும். நீயே வந்து என்னை சோதனை செய்வாய்" என்றார்.

இருபது வருடங்கள் ஓடின. பல்வேறு சோதனைகளை நடத்தி மிக்க அனுபவம் வாய்ந்த நிலையில் வாங்காவிடம் மீண்டும் அவர் வந்த போது வாங்கா அவரை அன்புடன் வரவேற்றார்.

பத்து வருடங்கள் வாங்காவின் சைக்கிக் திறனைத் தொடர்ந்து ஆராய்ந்த லோஸனாவ் வாங்காவின் ஆயிரக்கணக்கான தீர்க்கதரிசன வாக்குகளைப் பதிவு செய்து அவைகள் பலிக்கிறதா, எப்படிப் பலிக்கிறது என்று ஆராய ஆரம்பித்தார்.

மாஸிடோனியா என்ற கிராமத்தில் 25 வருடங்களுக்கு முன்னர் தன் பையனைத் தொலைத்து விட்ட ஒரு பெண்மணி வாங்காவைச் சந்தித்தார்.

விளையாடிக் கொண்டிருந்த பையன் திடீரென்று காணாமல் போய் விட்டான். அங்கிருந்த கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து தேடியும் பையன் கிடைக்க வில்லை!

பையனின் தாயும் தேடுவதைக் கை விட்டு விட்டாள். போர்க்காலத்தில் நடந்த சம்பவம் இது.

வாங்காவிடம் தன் வியாதி சம்பந்தமாக கேட்க விரும்பி அணுகிய அந்தப் பெண்மணியிடம், "உன் வியாதி தீர்ந்து நீ பூரண குணமடைவாய்" என்றார் வாங்கா. கூடவே திடீரென்று, "காணாமல் போன உன் மகனும் உன்னிடம் வந்து விடுவான். அவனை ஒரு ஜிப்ஸியுடன் பார்க்கிறேன். நன்கு வளர்ந்து விட்டான். நாளை நீ இந்த கிராமத்திற்கு சென்றால் அவனைக் காணலாம்" என்று கூறி கிராமத்தின் பெயரையும் கூறினார்.

மறுநாள் நேராக அந்த கிராமத்திற்குச் சென்ற அந்தப் பெண்மணி தன் மகனைக் கண்டாள். முதலில் தாயாரை அடையாளம் தெரியாத மகன், தாய் பல சம்பவங்களைக் கூறவே நினைவு வந்து தாயுடன் கூட வந்தான். இந்த நிகழ்ச்சியைப் பார்க்க லோஸனாவும் கூடவே சென்றிருந்தார்.

பெட்ரிச் நகருக்கு ஒரு முறை சென்ற லோஸனாவ், அருகிலிருந்த ஒரு கிராம மக்கள் அனைவரும் வாங்காவைச் சுற்றி இருப்பதைப் பார்த்தார்.

தாங்கள் வளர்க்கும் தேனீக்கள் அனைத்தும் ஏன் மர்மமான முறையில் சாகின்றன என்பதே அவர்களின் கேள்வி.

வாங்கா, "என்னிடம் இதற்காக ஏன் வந்தீர்கள்? தேன் கூடுகளில் உள்ள விஷத்தை எடுத்து விட்டாலே போதும்! தேனீக்கள் சாகாதே!" என்று சர்வ சாதாரணமாகக் கூறினார்.

ஆச்சரியமும், திகைப்பும் அடைந்த மக்கள் தங்கள் கிராமத்திற்கு ஓடினர். தேன் கூடுகளில் வைக்கப்பட்டிருந்த விஷத்தை அகற்றினர். லோஸனாவும் கூடவே சென்று நடந்ததைப் பார்த்தார். விஷத்தை வைத்தது யார் என்பதைக் கூட வாங்கா கூறி இருந்தார். அவனைப் பிடித்து விசாரித்த போது தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான்.

இன்னொரு முறை ஒரு டிரைவர் வாங்காவிடம் வந்த போது, "நீ நல்லவன் இல்லை. நீ எப்படிப்பட்டவன் என்பதை உன் மனைவி அறிந்தால் நாளையே உன்னை விட்டு நீங்கி விடுவாள்.

அது போகட்டும், இந்த வருடம் நவம்பர் மாதம் 11ம் தேதி உனக்கு ஆபத்து வரப் போகிறது. கடுமையான காயத்தை அடைந்த போதிலும் உன் உயிர் போகாது, பிழைத்து விடுவாய்" என்றார்.

வாங்காவை சும்மா விளையாட்டாகப் பார்க்க வந்த டிரைவர் கலகலவென்று நகைத்து விட்டுப் போய்விட்டார்.

ஆனால் நவம்பர் 11ம் தேதியன்று அவரது கார் விபத்து ஒன்றில் சிக்கி நொறுங்கிப் போனது. கடுமையான காயத்தை அடைந்த போதிலும் அவர் உயிர் பிழைத்தார்.

ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா போன்ற அனைத்து நாடுகளிலிருந்தும் வாங்காவைப் பார்க்க மக்கள் திரளாக வந்த வண்ணமிருந்தனர்.

தெற்கு பல்கேரியாவில் வசித்து வந்த ஒரு பெண்மணியின் வீட்டிற்குச் சென்ற வாங்கா அவள் கர்ப்பிணியாக இருப்பதைப் பார்த்து விட்டு, "உன் குழந்தை சிறுவனாக இருக்கும் போதே கொல்லப்படுவான்" என்று கூறி அந்தக் குழந்தையைக் கொல்லப் போகிறவன் வாழும் வீட்டையும் சுட்டிக் காட்டினார். பின்னால் அது போலவே நடந்தது! அந்தக் கொலைகாரனை அதே வீட்டில் போலீசார் கைது செய்தனர்!

வாங்காவின் திறமையைப் பார்த்த பல்கேரிய அரசு அவரது திறமையும் சக்தியும் அநியாயமாக விரயமாகி வருவதை உணர்ந்து அவருக்குத் தனி இடம் தந்தது. மான்யமும் வழங்கியது. இரண்டு உதவியாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

பார்க்க வருபவர்களைத் தணிக்கை செய்து சில பேரை மட்டுமே அனுமதித்து, வாங்கா தக்க ஓய்வு எடுக்க வழி வகை செய்த்து அரசு.

விஞ்ஞான சோதனைகளைத் தன் மீது நடத்த விரும்பிய பல்கேரிய அரசுக்கு வாங்கா பூரண ஒத்துழைப்பு தந்தார்.

ஒரு கம்யூனிஸ நாடு சைக்கிக் சக்தியை ஆராய்வதா? ஆம் உண்மையில் ஒரு கம்யூனிஸ நாடு அவரை ஆராயவே செய்தது!

தனது பத்தொன்பதாம் வயதிலேயே கண் பார்வையை இழந்த வாங்கா மற்றவர்களின் எதிர்காலத்தை அகக் கண்களினால் பார்த்தது ஆச்சரியமான விஷயமே!

வாங்காவின் வாழக்கை, எதிர்காலம் காணும் திறன், தூர திருஷ்டி, டெலிபதி, மற்றவர்கள் மனதை அறியும் சக்தி ஆகிய எல்லாவற்றையும் செய்து காட்டியது.

தன்னை அறிவியல் சோதனைக்கு உட்படுத்திக் கொண்ட அபூர்வ சைக்கிக் நிபுணர்களில் வாங்கா முக்கியமானவர்!

## 25. முடிவுரை

நூலின் இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டோம். கனவுகள் பற்றிய இதிகாசக் குறிப்புகளையும் அறிவியல் ஆராய்ச்சிகளையும் பார்த்தோம்.

ஒரே இடத்தில் இரு இடங்களின் தோன்றும் ஞானிகளின் சக்தியை மெய்ப்பிக்கும் வரலாற்று உண்மைகளையும் தொகுத்துப் பார்த்தோம்.

டெலிபதி என்ற புதிய துறை ஆராய்ச்சியை உலகப் பிரசித்தி பெற்ற ஸ்டானபோர்டு நகர ஆய்வு மையம் மிக்க ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் மேற்கொண்டு அரிய பல உண்மைகளைக் கண்டறிவதைப் பார்த்தோம்.

காலம் பற்றிய உண்மைகளை உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள் ஆய்ந்து வருகையில் இதற்கு முன்னோடியாக ரஷிய விஞ்ஞானி கோஸிரெவ் கண்டுபிடித்துள்ள அபூர்வ கொள்கைகளின் விளக்கங்களைப் படித்தோம்.

இவை அனைத்தையும் தொகுத்துப் பார்ப்பத்தின் நோக்கம் என்ன? ஒன்றே ஒன்று தான்! பெறுதற்கரிய மனிதப் பிறவியில் புலன்களுக்கு அப்பாற்பட்டு எந்த ஆற்றலையும் விஞ்சி நிற்கும் மகா சக்தி ஒன்று இருக்கிறது.

இந்த சக்தியை அறிவதன் மூலம் அல்லது குறைந்த பட்சம் அறிய முயல்வதன் மூலமே நாம் பெறுவதற்கரிய பலன்களை நிச்சயம் அடைய முடியும்.

விஞ்ஞான வழியில் சென்றாலும் சரி, மெய்ஞ்ஞான வழியில் சென்றாலும் சரி, நாம் அடைய இருக்கும் இலக்கு ஒன்றே தான்! ஆனால் கரடு முரடான பாதைக்கும் அழகான கான்க்ரீட் சாலைக்கும் உள்ள வித்தியாசம் விஞ்ஞான வழிக்கும் மெய்ஞ்ஞான வழிக்கும் உள்ளது.

அண்ட பிரபஞ்சம் முழுவதும் ஆராய்ந்து அதில் உள்ள படைப்புகள் அனைத்தையும் ஆராய எத்தனை கோடி ஆண்டுகள் ஆகுமோ?

ஆய்ந்து முடிவுகளைக் கண்டாலும் வெறும் நூறு ஆண்டுகளே வாழும் மனிதன் அவற்றை முற்றிலுமாக கற்று அறிய முடியுமா என்பதும் பெரிய கேள்வி தான்!

ஆகவே தான் இவற்றை எளிமைப் படுத்தி நம் முன்னோர்கள் வாழும் வகை நெறிகளாக அற நெறிகளை ஏற்படுத்தித் தந்துள்ளனர். அவற்றைக் கடைப்பிடித்தாலே போதும்: நமக்கு நல்ல வாழ்க்கை அமையும்.

என்றாலும் அறிவியல் யுகத்தில் – ஏன் எதற்கு என்ற காரண காரியங்களை நன்கு ஆராய்ந்து முடிவுகளைக் காணும் யுகத்தில் – அறிவியல் ஆய்வுகளையும் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இந்த நோக்கில் தான் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

இதை வாசிக்கும் அன்பர்கள் அறிவியல் கலந்த ஆன்மீகவாதிகளாகத் திகழ்ந்தால் அதுவே இந்த நூலைப் படைத்ததற்கான பயன் ஆகி விடும்!